Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර්

பெப் 22 - 28, 2007

THINAMURASU
18A, NELSON PLACE,
WELLAWATTE,
COLOMBO - 06.

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 701

## கொக்கட்டிச்சோலை இழப்பு புலிகளுக்கு மேலுமொரு பின்னடைவு!

களநிலைவரம் ஓர் அலசல்





## நெருப்புக்குள் பூத்த போர்நிறுத்த ஒப்பந்தம்

## கருவிலேயே கலைந்துபோன பண்டா - செல்வா ஒப்பந்தம்





## நயன்தாராவின் தற்கொலை முயற்சி! மாளவிகாவின் செக்ஸ் புகார்!!

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்


## அறிவியலில் ஆன்மீகம்

அறிவியல் இன்றைய உலகில் வாழ்வியலாக மாறி வருகின்ற காலகட்டத்தில், ஆத்ம ரீதியான உண்மைகள் மழுங்கடிக்கப்படுவது வருந்தத்தக்கதொன்றாகும். இன்றைய அறிவியல் ரீதியான கண்டுபிடிப்புகள் எல்லாம் அன்று ஆன்ம ரீதியாக அறியப்பட்டு விட்டன என்பதற்குப் பல சாட்சியங்கள் உண்டு. அந்த வரிசையில் ஒன்றை உதாரணத்துக்கு முன்வைக்கலாம் என எண்ணுகிறேன். இதில் திருமூலர் அருளிய ஒருசில வரிகளை நோக்குவோம்.

"வேங்கடம் என்ற விரகு அறியாதவர்
தாங்கவல்ல ஆருயிர் அறி யாரே."

என்னும் வரிகளை எடுத்துக் கொண்டால், வேம்கடம் அழியும் உடம்பு. அழிகின்ற உடம்பு என்னும் உண்மையை அறியாது இறுமாந்து இருப்பவர்கள், அந்த உடம்பினுள் உறைகின்ற உயிரை அறிவரோ? என்று வினா எழுப்புகின்றார். இதில் இன்றைய அறிவியலுக்கு உள்ள தொடர்பு என்னவெனின், தெற்கிலிருந்து வடக்கை நோக்கிப் பாய்கின்ற காந்தப்புலமானது, அதனைக் காட்டுகின்ற திசையறி கருவியை எந்தப் பக்கம் புரட்டி வைத்தாலும் வடக்கையே நோக்குவது போல ஆன்மா இறை அருளையே வேண்டி நிற்கிறது எனக் கொள்ளலாமல்லவா?

-என்.எஸ். ராஜா, தம்பலகமம்



## இச்சையடக்கம்

பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள் நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ( 1 கொரி -9:25) அப்.பவுல் சொல்லுகிறர், இச்சையடக்கத்தோடே ஓடுங்கள் என்று. கிறிஸ்தவர்களாகிய நம்முடைய வாழ்க்கையில் மிகவும் கவனமாக கடைப்பிடிக்க வேண்டியதொன்றாகும்.

"இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்." (யாக்-1:14,15) அநேகர் தங்கள் எண்ணங்களை வீணாக அலையவிட்டு கெட்ட சிந்தைகளினூடாக பாவம் செய்கின்றார்கள். அவர்களுடைய இருதயம் எப்பொழுதும் பாவ இச்சை நிறைந்ததாகவே காணப்படும். (ரோமர் - 1:26) இதனிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுப்பார். ஆகையால் நாம் எப்பொழுதும் எங்கள் எண்ணங்களையும் செயல்களையும் தேவ நடத்துதலோடு அடக்கி சாத்தானின் தீய எண்ணங்களை முறியடிக்க வேண்டும். கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாமிசத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் (கலா 5:24) என்று வேதம் சொல்கிறது. ஆகையால் நாமும் பாவச் சிந்தனைகளுக்கு பாவமான அசுத்த எண்ணங்களுக்கு இடம்கொடுக்காது கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக மாமிசத்தின் கிரியைகளை முறியடிப்போமாக.

-ஜெயமணி வில்சன்.

## பொறுமை கொள்ளுங்கள்

ஈமான் கொண்ட விசுவாசிகளே! பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் (இறைவனிடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக இறைவன் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்.

-அல்குர்ஆன்

இயாமத்து நாளில் 'பொறுமையாளர்கள் எங்கே?' என்று ஒரு மலக்கு கூப்பிடுவார். சில பேர் எழுந்து சுவர்க்கத்தை நோக்கிச் செல்வார்கள். அப்பொழுது அங்குள்ள மலக்குகள் 'நீங்கள் யார்?' என்று கேட்பார்கள். அதற்கு நாங்கள்தான் பொறுமையாளர்கள் என்று பதிலுரைப்பார்கள். அதைக்கேட்ட மலக்கு ள் நீங்கள் சுவர்க்கம் புகுங்கள் என்று அம்மனிதர்களைப் பார்த்து சுபச் செய்தி கூறுவார்கள்.

-அல் ஹதீஸ்.

நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்

உடலுக்கு தலையிருக்கும் அந்தஸ்தில் ஈமானுக்கு பொறுமை இருக்கிறது.

-அல்'தீஸ்.

பொறுமையானது அது முழுவதும் நன்மையாக அமைந்திருக்கிறது.

-அல் ஹதீஸ்.

-முஹம்மது ஹஸனி, கல்முனை - 7

## கவிதைப் போட்டி இல.698



பாராட்டுக்குரியது

### வேதனை

பகிரங்கத்தில் ஒரு திருடன்
தலைவனாக.
பதுங்கலில் ஒரு தலைவன்
திருடனாக.
புன்னகையை முகத்தில்
பூட்டிக் கொண்டு,
பொது மக்களைக் கொன்றதே
இதுவரை இவர்களின்
சாதனை!

- ஆர். இளங்கோவன்,
கொழும்பு-14.

### தெரிந்து கொள்!

வளர்த்தாய் வலிமைபெற்றான் - உன்
தேவைக்காய் விதைத்தாய் - இவன்
உலகெங்கும் வியாபித்தான்
இப்போ அறுக்கத் துடிக்கின்றாய்
இதொன்றும் உன் தோட்டத்து கோதுமை பயிரல்ல
பாலைவனத்தில் புடம்போட்ட எரிமலை!

- சீனிராசா எடிசன்,
கொழும்பு -13.

## கவிதைப் போட்டி இல.701



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 27.02.2007.

கவிதைப் போட்டி இல.701
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### தலை(அ)வர்கள்!

தலை ஒட்டிப்பிறந்த
இரட்டையர்களா?
இவர்கள்
தலையை வெட்டி
வீழ்த்த நினைக்கும்
விரோதிகளா?

- முஸ்னா றஷிகா,
கல்முனை -07.

### சிரிப்பும் வெறுப்பும்!

முகத்தில்
முகம் வைத்துச் சிரிப்பு.
இவர்கள்
அகத்தில்
அழியாத வெறுப்பு.

- முஹம்மது ஹஸனி,
கல்முனை- 07.

### முத்தமிட்டான் முத்தமிட்டான்!

முத்தமிட்டான் முத்தமிட்டான்
அன்று யூதாஸ் யேசுவைக்
காட்டிக் கொடுக்க முத்தமிட்டான்
முத்தமிடுகிறாய் முத்தமிடுகிறாய்
இன்று ஒசாமாவை சுட்டுப்
போட முத்தமிடுகின்றாய்...

- பொ. பாலராணி,
தோட்டவெளி.

### போட்டிக்குப் போட்டி!

விண்ணிலும் மண்ணிலும்
வியக்க வைக்கும் வீரம்
நிறைந்த ஜனாதிபதி
புஷ்ஷும்.
உலகையே வியக்க வைத்து
ஒளிந்து வாழும் வங்கர்
மன்னன் பின்லேடனும்
ஒன்றுபட்டால் என்ன
தோழா!

- ஜெ. ஜதுர்ஷா,
களுவாஞ்சிக்குடி.

### இவனும் அவனும்!

இவன் கொல்வான்
என அவன் அஞ்ச
அவன் கொல்வான்
என இவன் அஞ்ச
அகிலத்தையே வாட்டும்
இரட்டைக் கொலைஞர்கள்.

– அ. சந்தியாகோ,
கண்டி.

### பங்காளிகள்!

'களை' ஒன்றை
களம் கொண்டு
தலை எடுத்த
தலை இவைகள்
கொலை உலகின்
சம பங்காளிகளே..!

- எம். ஷண்முகராஜா,
கொழும்பு- 11.



# உங்கள் பக்கம்

## அங்காடிகளின் புகலிடமாகும் வெள்ளவத்தை நடைபாதைகள்!

**கொழும்பில்** தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வெள்ளவத்தைப் பகுதி நடைபாதைகள், பெரும்பாலும் அங்காடி வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வெள்ளவத்தைச் சந்தைக்கு முன்பாக நீண்டு செல்லும் நடைபாதையில் மக்கள் நடந்து செல்லமுடியாத அளவுக்கு சிறு வியாபாரிகள் தொல்லை அதிகமாகக் காணப்படுகின்றது. மரக்கறி வியாபாரிகள், மீன் வியாபாரிகள் மற்றும் சிறுபொருட்கள் விற்பனை செய்வோர் ஆகியோரின் வர்த்தக மையமாக இப்பகுதி திகழ்கிறது.

நடைபாதையில் மட்டுமல்ல, நடைபாதையை விட்டு தெருவோரத்திலும் மீன் வியாபாரம் நடைபெறுகின்றது. மீனை வெட்டும் போது அப் பகுதியால் செல்பவர்களின் ஆடைகளில் இரத்தக்கறை படிவதுமுண்டு. மீனை வெட்டுவோர் அதனுள் இருக்கும் கழிவுகளைப் பாதையோரத்தில் விட்டுச் செல்கின்றனர். மீனின் குடல், தலை, செட்டைகள்,

ஆகியவற்றை வெட்டித் தெருவில் போட்டுவிட்டுச் செல்வதால், துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரக் கேட்டையும் ஏற்படுத்துகின்றது. நடப்பதற்கென ஒதுக்கப்பட்ட நடைபாதையை மக்கள் பயன்படுத்த முடியாததால், வீதியைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதனால் வீதி விபத்துக்களும் ஏற்படுகின்ற சாத்தியமுண்டு. இது தொடர்பாக கொழும்பு மாநகர சபை அதிகாரிகளுக்கும், மேயர், ஆணையாளர் போன்றவர்களுக்கும் பல தடவை அறிவித்தும் கண்டபலன் ஒன்றுமில்லை. எனவே இனியாவது இந்த விடயத்தில் கொழும்பு மாநகர சபை நிர்வாகம் கவனம் செலுத்துமா? என்று அப்பகுதி மக்கள் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறார்கள்.

ஆர். பிரசன்னா,
பொரளை,
கொழும்பு – 08

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசகர் சாலை

### அற்புதப் படைப்பு!

திறமையிலும், திகைப்பு, அற்புதமான படைப்பு!
தினந்தோறும் திகைப்பூட்டி, நகைப்பூட்டி அனைவரது
மனதையும் அற்புதமாக கவர்ந்த அரிய முரசே!
உனக்கு அன்பான வாழ்த்துக்கள்.
பக்க சார்பில்லாமல் பண்பாக பவனி வரும்
பல்சுவை முரசே! உன் உடம்பில் அடங்கியுள்ள
அத்தனை அம்சங்களும் பெருமையிலும் அருமை.
முரசே! நீ பயணித்த பாதை முட்கள் பரப்பட்டதாக
இருந்தாலும் அதன் மேலாக ரத்தம் சிந்தி
பயணித்து 700ஆவது வெற்றி வாரத்தைத் தொட்டு
விட்டாயடா! உன் துணிச்சலுக்கு பக்கபலமாக
இருக்கும் உன் திறமையான உழைப்பு என்றும்
நிலைத்திட போற்றுகிறேன்.

- எஸ்.ஐ.பர்வீன் பானு,
ஏறாவூர் - 04.

### புகழ் பெற்று வாழ்க!

எழுபத்து நூறுமுறை நீ ஒலித்து
இனியதோர் நாதம் ஒலிக்கிறது உலகெங்கும்
மென்மேலும் நீ வளர்ந்து வாசகர் நெஞ்சத்தில்
துணிவை வளர்த்து விட்டு நாளும்
பொன்னான முரசு எனப் புகழ் பெற்றாய் வாழ்க.

பாசிஸத் திமிங்கிலத்தின் பார்வையில் பட்டும் நீ
நேசம் குலையாமல் நிற்கின்றாய்; மக்களிடை
பாசிஸத்தின் வேடம் கலைத்தெங்கள் கை தன்னில்
வாசமலராக இருக்கின்றாய் முரசே!
வாழ்க நீ பல்லாண்டு பல்லாண்டு!!

- எஸ்.குமார்,
வவுனியா.

### திசைக்கெட்டும் தினமுரசே!

முதல் பக்கம் தொடக்கம்
இறுதிப் பக்கம் வரை தித்திப்பை
பொழியும் நீ 700 வாரமில்லை
7000 வரை தாண்டி வாழ்வாய்.
சிரஞ்சீவியாய் வாழ வாசகர்
வாழ்த்துப் பெற்றவன்
உனக்கேது அழிவு. 'தேன்
கிண்ணத்தில்' வற்றாது தேன்
தருகையில் வேறெங்கும்
சென்றிடுமா இந்தத் தேனீக்கள்.
நாள்தோறும் பூத்திடும் உன்
வாசம் என்றுமே வீசவென்று
பலகோடி வாழ்த்துக்கள்
உரித்தாகட்டும் வளமுடன்
வாழ்ந்து வாசம் வீசிடு.

- இரா.தாரணி, நுவரெலியா,
பதுளை.

# பிராந்திய சுயாட்சி முறையே இறுதித் தீர்வாக அமையலாம்

## சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் கருத்தொற்றுமை வளர்கிறது

மத்திய அரசாங்கத்தில் முடக்கப் பட்டிருக்கும் தேவையற்ற அதிகாரங் களை பிராந்தியங்களுக்கு பகிர்ந்த ளிப்பதன் மூலம் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படும். இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஆராய்ந்து வரும் சர்வ கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில், ஜே.வி.பி. யைத் தவிர ஏனைய கட்சிகள் பிராந் தியங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்க இணக்கம் தெரிவித் துள்ளன என்று சர்வகட்சிப் பிரதி நிதிகள் குழுக்கூட்டத்தின் தலை வரான, அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்தார். இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான ஆலோசனை சமர்ப்பிக்க நியமிக்கப் பட்ட சுதந்திரக் கட்சிக் குழு, இது வரை தனது யோசனைகள் பற்றி இறுதி முடிவு எடுக்காததால் கடந்த சர்வகட்சிக் கூட்டம் ஒத்திவைக்கப் பட்டிருக்கின்றது. சிலர் ஒற்றை ஆட்சி யின் கீழ் அதிகாரப் பகிர்வு செய்ய முடியாது என்று கூறுகின்றார்கள். இப்படிக் கூறுபவர்கள் சமஷ்டி முறையே தீர்வுக்குத் தேவை என்கின் றார்கள். சமஷ்டி முறை என்றதும் அது தனி நாட்டுக் கோரிக்கையின் முதற்படி என்று வேறு சிலர் கூறுகின் றார்கள். ஆனால் நாட்டின் அரசியல், பூகோளம், வரலாற்று, கனியவள, இனப்பரம்பல் முறைகள் ஆகியவற் றைக் கவனத்தில் கொண்டு இறுதித் தீர்வு முன்வைக்கப்படும் என்றும் அவர் கூறினார். அவர் மேலும் கூறிய தாவது:-



சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட படம்

ஒவ்வொரு நாட்டினதும் யதார்த் தச் சூழ்நிலைக்கேற்பவே அந்த நாட்டின் இன, மத, மொழி, நிறப்பிரச் சினைக்குத் தீர்வு காணப்படுகின்றன. பிரிட்டனில் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது. இந்தியாவில் சமஷ்டிப் பாணியிலான மாநிலங் களின் ஒன்றியத்தின் மூலம் பிரதான பிரச்சினைக்குத் தீர்வு காணப் பட்டிருக்கின்றது. இருந்தாலும் நூற்றுக்கு நூறு சதவீதம் பிரச்சினை கள் தீர்க்கப்பட்டு விட்டன என்று கூறி விட முடியாது.

ஜப்பான், பிரிட்டன் போன்ற வளர்ச்சி கண்ட நாடுகள் ஒற்றை ஆட்சி முறையின் கீழ் அதிகாரப் பகிர்வுகளை மேற்கொண்டிருக் கின்றன. அங்கே ஜனநாயகம் மத்தி யத்துவப்படுத்தப்பட்டிருக்கின்றது. வேறு சில நாடுகள் ஜனநாயகமும் மத்தியத்துவமும் கைகோர்த்துச் செல்ல வேண்டும் என்றும் கூறுகின் றன.

சோஷலிஸ அமைப்பின் கீழ்த் தான் இனப்பிரச்சினை போன்றவற் றிற்குத் தீர்வு காணலாம் என்று முன் னர் கூறப்பட்டு வந்தது. ஆனால் செக்கோஸ்லவாக்கியா, யூகோஸ் லாவியா, அல்பேனியா, முன்னைய சோவியத் சோஷலிஸக் குடியரசு போன்றவை துண்டு துண்டுகளாக

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# பட்டினிச் சாவு இல்லையென்றாலும் போஷாக்கின்மையின் விளிம்பில் கிழக்கு அகதிச் சிறுவர்கள்

உலக நாடுகளில் நாளாந்தம் 18 ஆயிரம் சிறுவர், சிறுமியர் பட்டினி, போஷாக்கின்மை ஆகிய காரணங் களினால் மரணமடைகின்றனர் என்று ஐ.நா. சபையின் அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் அண்மையில் தெரிவித்துள்ளார். இலங்கை பாரிய அளவில் பட்டினிச்சாவை எதிர் நோக்கும் நாடுகளின் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை என்ற போதி லும், கிழக்கில் இடம் பெயர்ந்து வாழும் சிறுவர்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கும் ஆபத்தான நிலையில் இருப்பதாக தன்னார்வத் தொண்டர் நிறுவனம் ஒன்றின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கிழக்கில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள சர்வதேசத் தன்னார்வத் தொண்டர் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதியான இவர், தமது நிறுவனத்தின் பெயரையோ அல்லது தனது பெயரையோ வெளியிட வேண்டாம் என கேட்டுக் கொண்டார்.

அண்மைய மோதல்களின் கார ணமாக வாகரையிலிருந்தும் திரு கோணமலையிலிருந்தும் மட்டக் களப்பு மாவட்டத்திற்கு சுமார் 70 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்து வாழ்கின்றனர். 49 நலன்புரி நிலை யங்களில் வாழும் இவர்களில் 15 ஆயிரம் பேர் சிறுவர்களாவர். இவர் களில் அதிகமானோருக்கு கல்வி, சுகாதாரம், குடியிருப்பு, உணவு போன்ற வசதிகள் போதியளவு கிடைப்பதில்லை. அரசாங்கமும் தன் னார்வத் தொண்டர் நிறுவனங்களும் வார்த்தைகளை அள்ளி வீசினாலும் அவர்களின் வாழ்வாதாரத்திற்குக் கிடைப்பது ஏதோ கொஞ்சம் தான். இந்த 15 ஆயிரம் சிறுவர்களில் 5,000 பேர் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தை கள் ஆவார்கள்.

தன்னார்வத் தொண்டர் நிறு வனங்களில் என்ன நடக்கின்றன என்பது எங்களுக்குத் தெரியும். இந் தக் குழந்தைகள் பட்டினிச் சாவை எதிர்நோக்காவிட்டாலும் போஷாக் கின்மையோடுதான் போராடுகின்றார் கள். யுனிசெப், சேவ் த சில்றன் போன்ற அமைப்புகள் ஓரளவுக்கு உதவினாலும் அவை போதுமா னவை அல்ல என்றும் அந்த அதி காரி தெரிவித்தார்.

# வாழ்வோடு போராடும் மலையகத் தொழிலாளர்கள்

மலையகத் தோட்டத் தொழி லாளர்கள் சம்பள உயர்வு கோரி மெதுவாகப் பணி செய்யும் போராட் டத்தை ஆரம்பிக்குமாறு கூறிய முக்கிய மலையக தொழிற்சங்கம் ஒன்று, இன்று பெரும் துயரங்களுக்கு மத்தியில் வாழும் எமது தொழிலாளர் கள் குறித்து எவ்வித அக்கறையும் காட்டாமல் இருக்கின்றது. மெது வாகப் பணி செய்யச் சொன்னவர்கள் பின்னர் வேலைக்குத் திரும்புமாறு கூறினார்கள். கொழுந்துகள் வளர்ந்து விட்டதனால் போதியளவு வேலை இல்லை என்று கூறி, வாரத் தில் மூன்று நாட்களுக்கே தோட்ட நிர்வாகம் வேலை தருகின்றது என்று வேதனையுடன் தெரிவிக்கின்றார் மஸ்கெலியா, லக்சபான தோட்டத் தைச் சேர்ந்த பாக்கியநாதன் என்ற தொழிலாளி. எமில்டன், வாழமலை, லக்சபான, முள்ளுகாமம், கீழ்ப்பிரிவு ஆகிய ஐந்து பிரிவுகள் எமது தோட்டத்தில் இருக்கின்றன. சுமார் 1800 தொழிலாளர்கள் இங்கு வேலை செய்கிறார்கள். இவர்கள் அனைவருமே பெரும் கஷ்டங் களுக்கு முகம் கொடுக்கிறார்கள். வெளிநாடுகளில் தேயிலைத் தோட் டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 1000 ரூபா வரை சம்பளம் வழங்கு கின்றார்கள். இங்கே 200 ரூபா கூட கிடைப்பதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மஸ்கெலியா, நூக்குவத்தைப் பிரிவு மரே தோட்டத்தைச் சேர்ந்த எம்.செல்வராஜ் கூறியதாவது:- எங்க ளது தோட்டத்தில் தற்போது உள்ள நிர்வாகம் வாரத்தில் 4 அல்லது 5 நாள் வேலை வழங்குகின்றது. 8 கிலோ தேயிலை கொழுந்தினைப் பறிக்க வேண்டும். கொழுந்து உள்ள காலங்களில் 15 கிலோ தேயிலை கொழுந்தினை பறிக்க வேண்டும் எனவும் நிர்வாகம் கூறிவருகிறது. இம்மாதம் வேலை வாய்ப்பு குறைந் துள்ளதாலும் விலைவாசிகள் உயர்ந் துள்ளதால் பெருமளவு மலைய கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படு கின்றனர். அன்றாட பாவனைக்குரிய கோதுமை மா, மண்ணெண்ணெய் விலைகள் உயர்ந்தமையும் தலை தூக்க முடியாத நிலையில் உள்ளது. போராட்டம் நடத்திய நாட்களில் 300 ரூபா அடிப்படைச் சம்பளத்தை எதிர் பார்த்தோம். ஆனால் தோல்வியில் முடிந்த கைசாத்துகளால் ஏமாற் றத்தைச் சந்தித்தோம் எனக் கூறி னார்.

# வன்னியில் இருந்தும் இடப் பெயர்வு ஆரம்பம்

வன்னியிலிருந்து 25 பொதுமக்கள் காட்டுப்பகுதி ஊடாக நடந்து வந்து, ஓமந்தை இராணுவச் சாவடிக்கு அண்மையிலுள்ள இராணுவ முன்னரங்கப் பகுதியில் சரணடைந் துள்ளனர். வெள்ளைக் கொடிகளுடன் இந்த மக்கள் வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப் படுகின்றது. இவர்களில் 5 பேர் ஆண்கள், 9 பேர் பெண்கள், 6 சிறுவர்கள், 5 சிறுமிகள் ஆகியோர் அடங்குவர். தேவையற்ற மோதல்களில் சிக்கி அவஸ்தைப்படலாம் என்ற காரணத்தினாலும் வன்னியில் சந்தித்து வரும் கெடுபிடிகளில் இருந்து தப்பிப்புதற்காகவுமே தாங்கள் அங்கிருந்து வெளியேறி வந்ததாக இவர்கள் தெரிவித்தனர். தம்மைக் கேடயங் களாகப் பாவித்து புலிகள் தாக்குதல்கள் நடத்தலாம் என்ற அச்சம் அங்குள்ள பொது மக்களுக்கு இருப்பதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

# வன்னியில் விமானத் தாக்குதல்

ஒட்டுசுட்டான் மற்றும் புளியங்குளத்தில் உள்ள புலிகளின் இனம் காணப்பட்ட நிலை கள் மீது கடந்த இருபதாம் திகதி 7.30 மணி யளவில் கடும் விமானத் தாக்குதல் நடாத்தப் பட்டுள்ளது. இதில் ஒட்டுசுட்டானில் உள்ள புலிகளின் ஆயுதப்பயிற்சித் தளம் ஒன்றும் புளியங்குளத்தில் புலிகளின் ஆட்லறி ஷெல் ஏவுதளமும் தகர்க்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு தலைமையகம் அறிவித்துள்ளது.

# பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் உரிமை இலங்கை அரசுக்கு உண்டு!

## -அமெரிக்க செனட்டர்கள் கருத்து

வளர்ந்து வரும் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுவதற்கான சகல விதமான உரிமைகளும் இலங்கை அரசாங்கத்துக்கு உள்ளதாக அமெரிக்க செனட் சபையின் மூன்று உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். செனட்டர்களான எட்வட் கெனடி, ஜோன் கெலி மற்றும், கிறிஸ்வூட் எமர் ஆகியோர் இலங்கை அரசாங்கத்துக்குக் கூட்டாக அனுப்பியுள்ள கடிதமொன்றி லேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இராணுவ நடவடிக்கையின் மூலம் இலங்கையில் நில வும் முரண்பாட்டுக்குத் தீர்வு காண முடியாதென தெரிவித்துள்ள அவர்கள், சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவை அரசாங்கம் நியமித்து பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காண முற்படுவதை வரவேற்றுள்ளனர். பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்காக அரசு எடுத்து வரும் முயற்சிகளையும் செனட்டர்கள் பாராட்டியுள்ளனர்.

# ஜனாதிபதி - மங்கள தரப்பினரைச் சமாதானப்படுத்தும் முயற்சிகள் தீவிரம்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டி ருக்கும் உட்பூசலைத் தீர்த்து வைக்கும் முயற்சிகளில் அமைச்சர் தினேஷ் குண வர்த்தன, மேல் மாகாண சபை ஆளுநர் அலவி மௌலானா ஆகியோர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அணியினரையோ அல்லது முன் னாள் அமைச்சர்கள் மங்கள சமரவீர, ஸ்ரீபதி சூரியாராச்சி ஆகியோரது அணியினரையோ சாராத மூன்றாந் தரப்பினரே இவர்களாவர். தேசிய இனப்பிரச்சினை, தேசிய முக்கிய பிரச்சினையாக இத் தருணத்தில் சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ள பூசல்களை ஜன நாயக வழியில் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே இந்த மூன்றாந் தரப்பினரின் கோரிக் கையாகும். கொள்கை ரீதியான கருத்து முரண்பாடுகளோ அல்லது தனிப்பட்ட பிரச்சி னைகளோ எதுவாக இருந்தாலும் கட்சியின் உயர் மட்டத்தில் பேசித் தீர்க்க வேண்டும் என்பதே ஆளுநர் அலவி மௌலானா குழு வினரின் நோக்கமாகும். இவர்கள் கடந்த 20ஆம் திகதி மங்கள சமரவீரவையும், ஸ்ரீபதி சூரியாராச்சியையும் மீண்டும் சந்தித்துப் பேசியுள்ளனர். விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்ளுமாறு வலியுறுத்திய இவர்கள் ஜனாதிபதி தரப்பைச் சேர்ந்த சில அமைச் சர்களையும் சந்தித்துப் பேசியிருக்கின்றார்கள். மங்கள சமரவீர சமர்ப்பித்த பத்து அம்சக் கோரிக்கைகளை வாபஸ் பெறுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதே வேளை சுதந்திரக் கட்சியின் அதிருப்தியாளர் குழுவினரை தம்பக்கம் இழுத்தெடுத்து புதிய ஐக்கிய முன்னணி ஒன்றினை அமைக்கும் முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு மிகவும் நெருக்கமான கொழும்பு மாவட்ட அரசியல்வாதி ஒருவர் இந்த முயற் சியில் ஈடுபட்டுள்ளார்.

# முத்தீஸ்வரன் விரைவில் சிக்குவார்

தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு வெடி பொருட்கள் கடத்துவதற்கு உதவு வதாக கூறப்படும் முக்கிய நபரைக் கைது செய்ய தமிழக காவல்துறையினர் மூன்று குழுக்களை அமைத்துள்ளனர். அண்மையில் தமிழகத்தின் தனுஷ்கோடி பகுதியில் கைது செய்யப்பட்ட இரண்டு பேரிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணையின் போது, முத்தீஸ்வரன் என்பவரின் உதவியுடன் இலங்கைக்கு வெடி பொருட்கள் கடத்தல் செய்யப்பட்டு வருவ தாக தெரியவந்துள்ளது. முத்தீஸ்வரன் தமிழ கத்தின் ராமநாதபுரம் மாவட்டத்தில் மறைந் துள்ளதாக தகவல்கள் தமிழ் நாட்டு காவல் துறைக்கு கிடைத்துள்ளது. இந்த நிலையில் அவர் இன்னும் ஓரிரு தினங்களில் கைது செய்யப்படலாம் எனவும் தமிழகக் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். அவர் கைது செய்யப்படுமிடத்து மேலும் சில முக்கிய தக வல்கள் கிடைக்கலாம் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவது தொடர்பாக பலர் தமிழ் நாட்டு காவல்துறை யினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தற்சமயம் விசாரணைக்குட் படுத்தப்பட்டு வருகின்றனர்.

# தப்பிப் பிறந்தவர்கள்

தந்தை செல்வாவின் தப்பிப் பிறந்த குழந்தை என்று அவரது மகன் எஸ்.சி.சந்திரஹாசனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.யான சிவாஜிலிங்கம் கேலி செய்திருக்கிறார். கடந்த வாரம் நடைபெற்ற தனியார் தொலைக் காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தரம் தப்பிய இந்தக் கருத்தை சிவாஜிலிங்கம் கூறி இருக்கிறார். திம்புப் பேச்சுவார்த்தையின் போது ரெலோ இயக்கத்தின் சார்பில் பங்கு பற்றியவர் சந்திரஹாசன். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகள் சார்பாக நீதி மன்றங்களில் வாதாடியவர் சந்திரஹாசன். சென்னையில் ஓர் அமைப்பை உருவாக்கி அகதி களாக தமிழகம் சென்ற மக்களுக்கு இன்னமும் உதவி வருபவர் அவர். அண்மையில் புதுடில் லியில் இலங்கைத் தமிழர்கள் பற்றி நடைபெற்ற கருத்தரங்கொன்றில் மாற்றுக் கருத்துக்களை சந்திரஹாசன் தெரிவித்தமையே சிவாஜிலிங்கம் துள்ளிக் குதிக்கக் காரணமாகும்.

# ஆயுதக் கடத்தல், தமிழகத்தில் உ பேர் கைது!

இந்தியாவின் தமிழ் நாடு உட்பட 8 நாடுகளில் இருந்து வன்னிக்கு ஆயுதங்கள் கடத்தி வரப்படுவதாக அமெரிக்க உளவு அமைப்பொன்று வெளியிட்ட தகவலை அடுத்து தமிழ் நாட்டிலும் தேடுதல்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. ஆயுதக் கடத்தல் களைத் தடுப்பதற்காக பாக்கு நீரிணைப் பகுதியிலும் தமிழகக் கடலோரப் பகுதிக ளிலும் ரோந்து நடவடிக்கைகளும் தேடுதல் நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

ஒப்பரேசன் தாஷா என்ற பெயரில் இந்தி யக் கடற்படையினர் புதிய பந்தோபஸ்து நடவடிக்கை ஒன்றினை ஆரம்பித்துள்ளனர். கூடுதல் படகுகள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு, விமானக் கண் காணிப்பு வேலைகளும் அதிகரிக்கப் பட்டுள்ளது. அண்மைக்கால தேடுதல் நடவ டிக்கையின் காரணமாக சென்னையிலும் ஏனைய பகுதிகளிலும் 21 இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். குண்டுகள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் போல் 'பியரிங்ஸ்' என்ற சிறு குண்டுகளை ஏற்றி வந்த லொறி ஒன்றுடன் 5 இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். மும்பாயில் இவற்றைக் கொள்வனவு செய்ய உதவினார் கள் என்ற சந்தேகத்தின் பேரில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

தமிழகம், கோடியாக்கரை அருகே ஆயு தங்கள் மற்றும் தற்கொலை அங்கிகளுடன் படகொன்று பிடிபட்டதை அடுத்தே மேலும் பல இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர். ஆயுதக் கடத்தலுக்கு இலங்கை அகதிகள் பயன்படுத்தப்படுவதாக தெரிவித் திருக்கும் தமிழகப் பொலிஸார் மண்டப முகாம் உட்பட பல அகதி முகாம்களில்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## எஞ்சியிருக்கும் சொத்து கல்வி மட்டுமே!

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி நடவடிக்கைகள் சுமார் ஐந்து மாதத்துக்குப் பிறகு 19.02.07 அன்று பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்டிருப்பது ஆறுதலான விடயமாக இருக்கிறது. மாணவர்களின் போர்வையில் புரியப்படும் வன்முறைகள் காரணமாகவும், மாணவர்கள் கடத்தப்படுவது, கொலை செய்யப்படுவது போன்ற விரும்பத்தகாத நிகழ்வுகள் காரணமாகவும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் கல்வியைத் தொடராமல், கல்விச் செயற்பாடுகள் சீர்குலைக்கப்படுவதானது, மாணவர்களின் எதிர்காலத்தையும், பெற்றோரின் நம்பிக்கையையும் சீர்குலைக்கும் நடவடிக்கையாகும். இந்த நிலையில் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கு கடந்துவரப்பட்ட நீண்ட இடைவெளியானது கல்வி நடவடிக்கைகளை நிறுத்துவதற்குத் தேவைப்படுவதில்லை. சம்பவம் ஒன்றைக் காரணம் சொல்லி மூடப்படுகின்ற எந்தவொரு கதவையும், திறப்பதற்கு எத்தனை காரணங்கள் இருந்தும் முடிவதில்லை. எனவே மன உளைச்சலைத் தரும்படியான பிரச்சினைகள் நிகழும்போதும், எரிச்சல் தரக்கூடிய சம்பவங்கள் நடந்தபோதும், அவற்றைக் கையாள்வதற்கு ஏதுவான வழிவகைகளைத் தேட வேண்டும். பிரச்சினைகளை மாணவர்கள் கைகளில் எடுத்துக் கொண்டு தமது கல்வியைச் சீர்குலைப்பது பிரச்சினைக்குத் தீர்வாகாது. கடந்த காலப் படிப்பினையும் அதுவாகத்தான் இருக்கிறது. எனினும் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பிரச்சினைகள் ஏற்படும் போது கல்விச் சமூகம் என்ற வகையில் கண்மூடித்தனமாக அதை அனுமதிக்கவும் கூடாது. எதிர்ப்புச் செயற்பாடுகள் என்பது இன்று தமிழ் மக்களின் இருப்பையே கேள்விக்குறியாக்கியுள்ள நிலையில், எஞ்சியிருக்கும் கல்வியையும் நாம் இழந்து விடக்கூடாது. ஆகவே மாணவர்கள் வன்முறைக்கு இரையாகி விடக்கூடாது. சில தீய சக்திகள் மாணவர்களை வீதிக்கு இறக்குவதிலும் கல்வியைச் சீர்குலைத்து விடுவதிலும் கூடுதல் அக்கறை கொண்டு செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. அத்தகையவர்களால் மாணவர்களைப் பலிகொடுக்க மட்டுமே முடியும், பாதுகாக்க முடியாது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியாக இருந்த போதும், கலாசாலை மாணவர்களும், பாடசாலை மாணவர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் விஸ்வரூபமெடுத்துள்ளதையும் கவனத்தில் எடுக்காமல் இருக்க முடியவில்லை. பொருட்களின் தட்டுப்பாடு ஓரளவுக்கு குறைந்துள்ள போதும், அதிகரித்த விலையேற்றமும், கறுப்புச் சந்தையின் பெருக்கமும், உணவுப் பிரச்சினையை தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. இதேபோல், அப்பியாசக் கொப்பிகள் மற்றும் ஏனைய கல்விச் செயற்பாட்டுக்குத் தேவையான பொருட்களின் தட்டுப்பாடும் பெருமளவு மாணவர்களுக்கு உண்டு. இந்த விடயத்தில் கல்வி அமைச்சும் ஏனையவர்களும் கூடுதல் கவனம் எடுத்து மாணவர்கள் எதிர்நோக்கும் இவ்வாறான பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வந்து மாணவர்களின் சீரான கற்றல் செயற்பாட்டுக்கு உதவ வேண்டும்.

வயிற்றுப் பசிக்கு உணவு தர முயற்சி எடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி உட்பட அதிகாரிகளுக்கு நன்றிக்குரியவர்களாக இருக்கும் குடாநாட்டு மாணவர்களின் பெற்றோர், தமது பிள்ளைகளின் கல்விப் பசியையும் தீர்த்து வைக்க உதவ வேண்டும் என கேட்கிறார்கள்.

ஏ-ஒன்பது பாதை திறப்பு பிணக்கில் புலிகள் கடல் வழியாக மக்கள் பயணிப்பதையும், பொருட்கள் கொண்டு வருவதையும் தடுத்து நிற்பது, தாக்குதல் நடத்துவது என்பதை யாழ்.மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. படையினர் கணிசமானளவு தமது தேவைகளை விமானம் மூலமாகவே தீர்த்துக் கொள்ளுகின்ற நிலையில், அச்சமற்ற கடல் பயணத்தை வேண்டி நிற்பவர்கள் சாதாரண பொதுமக்கள்தான் என்பதையும், மக்களை அச்சுறுத்தி வீரம் காட்ட நினைப்பவர்கள் புலிகள்தான் என்பதையும் நாட்டு மக்களும், உலக மக்களும் நன்கு அறிவார்கள். ஆகையால்தான் இந்தக் கோரிக்கையை புலிகளிடம் முன்வைக்க மக்கள் தயாரில்லை. புலிகளை நிராகரித்த மக்கள், அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கவும் மாட்டார்கள். எனவே இலங்கைப் பிரஜைகள் என்ற அடிப்படையில் இலங்கை அரசு தனது கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும். மக்களுக்கு உணவு, விலங்குகளுக்கு உணவு என்று தரும் அரசு, கல்விக்காக நிச்சயம் கவனம் எடுக்கும் என்று மாணவர்களின் பெற்றோர்கள் கூறுகின்றனர். தற்போதைய யாழ்ப்பாணத்தின் அவசரத் தேவையும் இதுவே.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# நெருப்புக்குள் பூத்த போர் நிறுத்த ஒப்பந்தம்

**22-02-2002,** இலங்கையைச் சூழ்ந்திருந்த யுத்தக் கருமேகங்களைக் கிழித்துக் கொண்டு விடிவெள்ளி பூத்த ஒரு நாளாக அன்று கருதப்பட்டது. கிட்டத்தட்ட இரண்டரை தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையர்களை இரத்தத்தில் உறைய வைத்த கொடூர யுத்தம்.

சுமார் ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட அப்பாவி மக்களைப் பலியெடுத்த அகோர யுத்தம், கோடிக்கணக்கான உடைமைகளைச் சூறையாடிய, பல ஆயிரக்கணக்கான பெண்களை விதவைகளாக்கிய, இன்னமும் ஆயிரக்கணக்கான சிறுவர்களின் பெற்றோர்களைப் பறித் தெடுத்து, அநாதைகளாக்கிய அந்தப் போர் - ஆடி அடங்கி விடு மென்றுதான் பெரும்பாலான இலங்கை மக்கள் நம்பிக்கையோடு எதிர்பார்த்தார்கள். யுத்த நெருப்புக்குள் பூத்த அந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம், கொலை வெறியர்களைக் கூண்டுக்குள் அடக்கி விடுமென்று தான் எதிர்பார்த்தார்கள். எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகிக் கொடூரத்தின் கொடுமுடிக்கே நிலைமை உயரச் சென்று விட்டது.

இருந்தாலும், "அர்த்தமற்ற யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறி" என்று அஹிம்சா மூர்த்தியான புத்தபிரானின் சித்தாந் தத்தைப் பின்பற்றுபவர்களென்று கூறிக்கொள்ளும் பிக்குகள் முன்னணி யுத்தத்தைக் கோரி நிற்கிறது. ஜே.வி.பி.யும், பிக்குகளும் இணைந்து நடத்தும் தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி என்ற அமைப்பு, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக் கோரி, சத்தியாக்கிரகம் என்னும் 'சப்பாணிப் போராட்டமொன்றினை'க் கொழும்பில் நடத்தி வருகின்றது.


ஆளும் சுதந்திரக் கட்சிக் கூட்டணியும், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க.வும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருக்க வேண்டுமென்கின்றன. மோசமான தாக்குதல்கள் நடைபெற்றாலும், யுத்த நிறுத்தம் அமுலிலிருப்பதாக, யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுமே அடித்துச் சொல்கின்றன. அரசும் அப்படித்தான் கூறுகிறது. புலிகளும் அப்படித்தான் சொல்லி வருகின்றனர். யுத்த நிறுத்த ஒப்பந்தம், ரத்துச் செய்யப்பட வேண்டுமானால், இரு வாரங்களுக்கு முன்னராகவே, யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலக விரும்பும் தரப்பு மறுதரப்புக்கு அறிவிக்க வேண்டுமென்பது ஒப்பந்த விதி. அரசும் புலிகளும் இவ்வாறு அறிவிக்காததால், ஒப்பந்தம் இன்னமும் அமுலில் உள்ளது என்று சப்பைக்கட்டு வாதமும் முன்வைக்கப்பட்டு வருகிறது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கடதாசியில் மட்டுமே மிஞ்சியிருப்பதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான ட்ரொன்ற் புரூவ்டே தெரிவித்துள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக, கடந்த வருடம் நவம்பர் மாதம் 27ஆம் திகதி பிரபாகரன் தனது பிறந்த தின உரையில், தமிழீழத்துக்கான யுத்தத்தைப் பிரகடனப்படுத்திய பின்னரும், யுத்த நிறுத்தம் அமுலிலிருப்பதாக இரு தரப்புகளுமே கூறிக் கொள்வதை, இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த ஹேஸ்யமெனக் ஹாஸ்யமாகக் கூறிக் கொள்ளலாம்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

இதேவேளை, இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள், வீடியோ தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இலங்கை விவகாரங்கள் தொடர்பான கூட்டமொன்றினை நடத்தியுள்ளன. அதாவது, ஒரே இடத்தில் சந்தித்துக் கலந்துரை யாடாமல், தத்தமது நாடுகளில் இருந்தபடியே இந்த ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. யுத்த நிறுத்த ஒப்பந்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம், சமாதான முன்னெடுப்பு, இலங்கையின் அபிவிருத்தி முயற் சிகள் பற்றியெல்லாம் இக் கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டது. இதற்கிடையில் ஜப்பானுக்கு விஜயம் செய்திருக்கும் ஜனாதிபதியின் விஷேட ஆலோசகர், பசில் ராஜபக்ஷ இலங்கையின் யுத்த நிறுத்தம், சமாதான முன்னெடுப்பு சம்பந்தமாக ஜப்பானியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாசியுடன் மட்டுமல்ல, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பாகிஸ்தானுக்குச் சென்ற வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம பாகிஸ்தானியத் தலைவர்களுடனும், படைத் தளபதி களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதன் தொடர்ச்சியாக இஸ்லாமாபாத்திலிருந்து கொழும்புக்கு வருகை தந்த பாகிஸ்தானிய பாதுகாப்புச் செயலாளர் தலைமையிலான குழு, அரச தலைவர்களையும், படைத் தளபதிகளையும் சந்தித்துப் பேசியுள்ளது. பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதனை இந்திய விரோத நடவடிக்கை என்று திரிவு படுத்தச் சில ஊடகங்களும் புலிகள் இயக்கமும் முயற்சிகள் எடுக்கின்றன. இந்தியாவுக்குத் தெரியாமல், இலங்கை அரசாங்கம், எவ்வித நடவடிக்கையும் எடுக்காது. நோர்வேயின் சமாதான முயற்சிகள் பற்றி இந்தியாவுக்கு அவ்வப்போது இலங்கை அரசு விளங்கப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இந்தியா, சீனா, பாகிஸ்தான், மாலைதீவு போன்ற அண்டைய நாடுகளுடன் இலங்கை தன் உறவுகளைப் பலப்படுத்தி வருகிறது என்பது மறை வான விடயம் அல்ல. நேற்றுவரை எதிரிகளாக இருந்த இந்தியாவும் பாகிஸ்தானும், இந்தியாவும் சீனாவும், இந்தியாவும் அமெரிக்காவும் ஒப்பந்தங்களைச் செய்து கொள்கின்றன. தமது நாடுகளுக் கிடையிலான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள அவை தமக்குள்ளே பேச்சுக்களை நடத்திக் கொள்வது ஒன்றும் புதிதல்ல. இந்தப் பாணியில்தான் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த அரசும் - புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டமை தவறானதல்ல. அந்த ஒப்பந்தத்தை மீறியமையே தவறான செயலாகும். இந்த மீறலுக்கு யார் மூல காரணம் என்பதை விளக்க வேண்டிய தேவை கண்காணிப்புக் குழுவுக்கு உண்டு. யுத்த நிறுத்தம் மீறப்படும்போது யுத்த தயாரிப்பில் ஈடுபடுவதில் தவறு இல்லை.



யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்யக்கோரி தேசிய பிக்குகள் முன்னணி கொழும்பு விகாரமாதேவிப் பூங்காவில் நடத்திவரும் சத்தியாக்கிரகத்தின் போது பிடிக்கப்பட்ட படம்.

சமாதான முன்னெடுப்புகளுக்கு, யுத்த நிறுத்த ஒப்பந்தம் வழிவகை செய்யும் என்ற நம்பிக்கையோடுதான் அப்போதைய பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க அதில் கைச்சாத்திட்டார் என்பதை எவரும் மறுக்க முடியாது. எத்தனையோ ஓட்டை ஒடிசல்களுடன் இந்த ஒப்பந்தத்தில் அவர் கைச்சாத்திட்டமையே அவர் இழைத்த தவறாகும். அரசாங்க கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்குள் புலிகளின் உறுப்பினர்கள் நுழைந்து, ஆயுதத் தாக்குதல்களை நடாத்துவதற்கு இந்த ஒப்பந்தம் வழிவகுத்தது. ஆனால், பாலியல் துஷ்பிர யோகத்தில் ஈடுபட்ட வெளிநாட்டவரைக் கைது செய்யச் சென்ற, மூன்று பொலிஸ் அதிகாரிகளைப் புலிகள் இயக்கம் பிடித்து மாதக் கணக்காக சிறையில் அடைத்து வைத்தது. இந்த ஒப்பந்தத்தின் பலவீ னமான அம்சங்களுக்கு இது அருமை யான உதாரணமாகும். சமாதானப் பேச்சு வார்த்தைகள் என்று கூறி, ஏற்கனவே பல தடவைகள் இலங்கை அரசுகளை ஏமாற்றிய பிரபாகரன் மீது முற்று முழுதான நம்பிக்கை வைத்ததே, ரணில் விக்கிரமசிங்கவின் தவறாகும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில், அத்துமீறல்கள் இடம்பெறாது என்றோ அல்லது நூற்றுக்கு நூறு சதவீதம் அது அச்சொட்டாகக் கடைப்பிடிக்கப்படும் என்றோ நாம் கூற வரவில்லை. யுத்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகள் நேர்மையுடனும் விட்டுக் கொடுப்புடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டால் மட்டுமே, ஒப்பந்தம் வெற்றியளித்து, சமாதானம் மலரும் என்பதே உண்மை.

இந்த ஒப்பந்தத்தின் விளைவாக (புலிகள் தாக்குதல்களை ஆரம்பிக்காதவரை) இலங்கை மக்கள், குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் எவ்வளவோ நலன்களைப் பெற்றிருக்கின்றார்கள். அரசியல், பொருளாதார, சமூக ரீதியான நலன்கள் ஈட்டப்பட்டிருக்கின்றன.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 2.10 ஆவது ஷரத்து வழங்கிய நடமாடும் சுதந்திரத்தினால், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கிலும் கிழக்கிலும் ஒரு பொருளாதார அற்புதமே நிகழ்ந்துள்ளது என்று கூற முடியும். தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் புலிகள் இயக்கம், படையினர் மீது தாக்குதல்கள் தொடுத்ததை அடுத்து மீண்டும் வடக்கு, கிழக்கு மக்கள் துயரங்க ளைச் சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

இரண்டு மாதங்களாக திரைமறைவுக்குப் பின்னால் இலங்கை அரசாங்கம், புலிகள் இயக்கம் ஆகியவற்றுடன் நோர்வேத் தரப்பு நடத்திய பேச்சுவார்த்தைகளையடுத்து யுத்த நிறுத்த ஒப்பந்தம் 2002ஆம் ஆண்டு அமுலுக்கு வந்தது. யுத்த நிறுத்த கண்காணிப்புக்குப் பொறுப்பாகவிருந்த நோர்வேத் தரப்புக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் இல்லை. எவ்வித அதிகாரமுமற்ற வெறும் 'டயலொக்' மட்டுமே பேசக் கூடிய அதிகாரங்கொண்ட கண்காணிப்புக் குழுவிற்கே நோர்வே தலைமை தாங்குகிறது. வடக்கிலும், கிழக்கிலும் யுத்தம் மோசமடைந்த போது கண்காணிப்புப் பணியைக் கைவிட்டு விட்டு, தமது சொந்தப் பாதுகாப்புக் கருதிய யுத்தம் நடைபெறாத கொழும்புக்கு ஓடியவர்கள் தான் இந்தக் கண்காணிப்புக் குழுவினர். புலிகள் இயக்கத்திற்கு சக்தி வாய்ந்த வானொலிக் கருவிகள், பண உதவிகள் ஆகியவற்றையும் நோர்வே வழங்கி இருப்பதாக குற்றம் சாட்டப் படுகிறது.

இவை அனைத்துக்கும் மத்தியில்தான் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசியல் யோசனைகளை முன்வைக்கும் இறுதிக் கட்டத்தை அரசாங்கம் எட்டியிருக்கின்றது. புலிகள் இயக்கமோ தமிழீழப் போர்ப் பிரகடனம் செய்திருக்கின்றது.

நேர் எதிரான இந்த முரண்பாட்டுக்கு எவ்வாறு தீர்வு காணப்படப் போகின்றது என்பதே இன்றைய பிரதான கேள்வியாகும். சமாதானப் பேச்சுக்களின் முன்னோடியாகத் திகழும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் வெற்றியும் தோல்வியும் இதிலேயே தங்கி இருக்கின்றது.

**சாதனைகளும்...**

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்திய முன்னேற்றங்கள் பற்றி உலக வங்கி மேற்கொண்ட வறுமை மதிப்பீட்டு ஆய்விலிருந்து.

* வடக்கில், முதல் நான்கு வருடங்களிலும் உள்ளூர் மொத்த உற்பத்தி நான்கு மடங்காக அதிகரித்தது.
* கிழக்கில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் முதல் நான்கு வருடங்களிலும் உள்ளூர் மொத்த உற்பத்தி இரட்டிப்பு மடங்காக அதிகரித்தது.
* வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டிலுமே வேலையற்றவர்களின் விகிதாசாரம் வீழ்ச்சி அடைந்தது. 2002 - 2004 காலப் பகுதியில் வடக்கில் வேலையற்றவர்களின் விகிதாசாரம் 13 சதவீதத்திலிருந்து ஒன்பது சதவீதமாக வீழ்ச்சி அடைந்தது.
* கிழக்கு மாகாணத்தில் இதே காலப்பகுதியில், வேலைவாய்ப்பின்மை பதினாறு சதவீதத்திலிருந்து பத்து சதவீதமாக வீழ்ச்சி அடைந்தது.
* பெரு நிலப்பரப்பில் இருந்து வடக்குக்கான ஏ-ஒன்பது பாதையும், கிழக்கிற்கான ஏ-பதினைந்து பாதையும் திறந்து விடப்பட்டன.
* மக்கள் சுதந்திரமாக நடமாடினர், தொழில் முயற்சிகள் பெருகின, உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கப்பட்டன, அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**வேதனைகளும்...**

இராணுவ அறிக்கையின்படி ஐந்து வருட காலத்தில் படைகளைச் சேர்ந்த ஆயிரத்து நூற்றி ஐம்பத்தாறு பேர் கொல்லப்பட்டனர். தொள்ளாயிரத்து நாற்பத்தாறு குடிமக்களும், இரண்டாயிரத்து இருநூற்றி ஐம்பது புலிகளும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

* தேசிய சமாதான கவுன்சிலும், மார்கா நிறுவனமும் ஒன்றிணைந்து நடத்திய ஆய்வறிக்கையின்படி யுத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதாரச் செலவு 2451 பில்லியன் ரூபா ஆகும். இதில் பாதுகாப்புக்கான அரசாங்கத்தின் நேரடிச் செலவினம் சுமார் 342 பில்லியன் ரூபாவுக்கு அதிகமாகும்.
* பொது மக்களின் ஒழுங்கு மற்றும் பாதுகாப்புக்களுக்காக சுமார் 63 பில்லியன் ரூபாவுக்கு மேலாகச் செலவிடப்பட்டுள்ளது.
* அகதிகள் மற்றும் இடம் பெயர்ந்தவர்களின் தேவைகளுக்கென செலவழிக்கப்பட்டமை 53 பில்லியன் ரூபாவாகும்.
* உட்கட்டமைப்பு மற்றும் சொத்துடைமை சேதமதிப்பீடு, 230 பில்லியன் ரூபாவுக்கு அதிகமாகும்.
* உல்லாசப் பயணத்துறை மற்றும் வெளிநாட்டு முதலீட்டு இழப்பு, 36 பில்லியன் ரூபாவை விட அதிகமாகும்.
* வடக்கு, கிழக்கின் பொருளாதார உற்பத்தி பாதிக்கப்பட்டதால் 413 பில்லியன் ரூபா இழப்பு.
* வடக்கு, கிழக்கில் இருந்து தொழில்சார் நிபுணர்கள் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்ததால் ஏற்பட்ட இழப்பு 191 பில்லியுன் ரூபாவை விட அதிகமாகும்.
* புலிகளின் யுத்தச் செலவினம் 74 பில்லியன்-ரூபாவை விட அதிகமாக இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஊரிலிருந்து....



தமிழ் சமுதாயத்தினரிண்ட கல்வி, தரப்படுத்தல் எண்டும் அடக்குமுறை எண்டும் ஒரு காலத்தில சீரழிஞ்சுது. ஆனால் இப்ப நிலைமையைப் பாத்தியளோ. சலிச்சுக்கொண்டு வந்தார் மாஸ்டர். ஒரு மாதிரி கடும் முயற்சிக்குப் பிறகு, கிழக்குக் கம்பஸைத் திறந்தால், முதல்நாள் வளாகத்துக்குள்ள கிளைமோர் வெடிக்குது. ஆறு மாசம் மூடியிருந்த யாழ். கம்பஸைத் திறந்தால் முதல்நாள் மாணவன் சுட்டுக்கொலை.

கொல்லப்பட்ட மாணவன் முந்தி மணல் ஏத்திப் பிரச்சினைப்பட்டு புலிகளால் கொல்லப்பட்ட கம்பஸ் மாணவனிண்ட கூட்டாளியாம். அதோட யாழ். பள்ளிக்கூடங்களிண்ட பகிஷ்கரிப்புக்குக் காரணமாக இருந்த கடத்தப்பட்ட மாணவன் வன்னியில உலாத்தித் திரியிறாறாம். இப்ப ஏதாவது விளங்குதோ?

# கொக்கட்டிச்சோலை இழப்பு புலிகளுக்கு மேலுமொரு பின்னடைவு!

கிழக்கில் அகப்பட்டிருக்கும் புலிகளுக்கு வன்னியிலிருந்து ஆயுத உதவிகளையோ, ஆளணி உதவிகளையோ வழங்க முடியாமல் புலிகள் யோசித்துக் கொண்டிருக்கின்றனர். வாகரையை இழந்த பின்னர், புலிகள் கரையோரப் பகுதிகளை விநியோகப் பாதையாகப் பாவிக்க முடியாமல் இருக்கின்றனர். இந்த நிலையில் கிழக்கில் புலிகளின் பெரும் இருப்பிடமாக கருதப்படும் கொக்கட்டிச்சோலை பகுதியையும் படையினரிடம் இழந்துவிடக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலையை நோக்கிப் படையினர் முன்னேற்ற நடவடிக்கையை மேற்கொண்டால், அதை எந்தளவுக்கு எதிர்கொள்வது என்பது புலிகளுக்குக் கைப்பற்ற வேண்டும்.

எப்படிப்பார்த்தாலும் கொக்கட்டிச்சோலையை முதலில் கைப்பற்ற வேண்டும். இதற்காக படையினர் எங்கிருந்து நகர்வுகளை மேற்கொள்ளமுடியும் என்பதை இனி விரிவாகப் பார்க்கலாம்.

கிழக்குப் படுவான்கரை நோக்கி ஒரு இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட வேண்டும். பின்னர் பட்டிருப்பு இராணுவ முகாமிலிருந்து போரதீவு, பழுகாமம் ஊடாக கொக்கட்டிச்சோலை நோக்காகவும், மண்டூர் இராணுவ முகாமிலிருந்து கம்பியாறு, யானை கட்டிய வழி, பிலாச்சோலை, காக்காச்சிவெட்டை, திக்கோடை, தும்பங்கேணி ஊடாகவும் ஊடறுத்து, படையினருக்குப் பெரும் சவாலாக இருக்கப் போவதில்லை. இதற்குக் காரணம் புலிகள் தற்காப்புத் தாக்குதலை நடத்தும் நிலையிலேயே தற்சமயம் கிழக்கில் இருக்கின்றனர். ஆகவே புலிகளின் எதிர்த்தாக்குதல் பலவீனமாக இருக்கும் பட்சத்தில், கொக்கட்டிச்சோலையில் பாரிய இராணுவ முகாம் ஒன்றினை அமைக்கும் படையினர் அங்கிருந்து உடனடியாகவே மேலும் முன்னேறுவர். மணல்பிட்டி, தெயிலாமுனை, கூழாவாடி ஏத்தம், சொத்தியாவளை, கண்ணன் குடா, சோதியன்கட்டு ஊடாக நகர்ந்து தாண்டியடி சந்திவரையும் செல்வர். இந்த இடைவெளியை படையினர் கடந்து விட்டால் புலிகளிடம் இருக்கும் ஆயுதபலம் புலிகளுக்கு தற்காப்புத் தாக்குதலைக் கூட நடத்தமுடியாதளவுக்கு இருக்கும் என்றே கருதப்படுகிறது. அவ்வாறானதொரு இக்கட்டான நிலையில் கடல் வழியாக வன்னியில் இருந்து புலிகள் எப்படியாவது கிழக்குக்குள் நுழையலாம் என்பதால் கடல் கண்காணிப்பும் அதிகரிக்கப்படலாம். புலிகள் படகுப் பயணத்தை மேற்கொள்ளும்போது கூடவே தற்கொலைப் படகுகளையும் பாதுகாப்புக்காக அழைத்து வருவர். படையினர் தீவிரப்படுத்திவரும் கண்காணிப்பு நடவடிக்கைகளையும், விமானத் தாக்குதல்களையும், கடலிலிருந்து புலிகள் சமாளிப்பது சிரமமாக இருக்கும். புலிகளின் கடற்படையை பலவீனமடையச் செய்யவும், புலிகளின் விநியோகத்திற்கும், நகர்வுக்கும், ஊடுறுவலுக்கும் இருக்கும் ஒரே மார்க்கம் கடற்புலிகளின் நடமாட்டம் மட்டும்தான். ஆகவே கடற்புலிகள் முகாம்களையும், கடல் நடமாட்டங்களையும் இலக்கு வைக்கவேண்டிய கட்டாயத்தில் படையினர் இருக்கின்றனர்.

ஆகவே விமானத் தாக்குதல்கள் மேலும் தொடரும். மட்டக்களப்பில் தெற்கு நீலாவணையிலிருந்து வடக்கே பிள்ளையாரடி வரை விஷேட அதிரடிப்படையினர் பூரண கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நிலையில் எஞ்சியிருக்கும் புலிகளை சரியாக வழி நடத்தக்கூடிய தலைமை இல்லாமல் புலிகள் பின்வாங்கி இறுதியாக எங்கே செல்லப்போகிறார்கள் என்பதும், குழப்பமாக இருக்கிறது. போதிய ஆயுதங்கள் இல்லை. புலிகளிடம் தற்போதிருக்கும் ஆயுதங்களையும், அதற்கான வெடிபொருட்களையும் சிறுகச் சிறுகத் தாக்குதல் நடத்தி முடிவுக்குக் கொண்டுவருவதற்குப் படையினர் திட்டம் தீட்டி வருகின்றனர். படையினரின் திட்டத்திற்கு அமைவாக, புலிகள் வவுணதீவு இராணுவமுகாம் நோக்கியும் ஏனைய இராணுவ இலக்குகள் மீதும் செஷ் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இந்த செல் தாக்குதலில் படையினருக்குக் காயங்கள் மற்றும் சிறிய பாதிப்புகள் ஏற்பட்டாலும், சண்டை ஒன்று துவங்கும்போது புலிகளின் தாக்குதல் பலம் இந்தப் பாதிப்பை நிச்சயம் எதிர்கொள்ளும் என்று படையினர் கருதுகின்றனர்.

கொக்கட்டிச்சோலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு முன்னர் வவுணதீவு இராணுவத்தினர் மீது செஷ் வீச்சுக்களை மேற்கொள்வதை தடுக்க வேண்டியுள்ளது. அதற்காக காக்காச்சி வெட்டை, கரையாக்க தீவு, தாண்டியடி ஆகிய பகுதிகளிலிருக்கும் புலிகளை விரட்டியடிக்க வேண்டும். இந்தப் பகுதி மீதான தாக்குதல்களைத் தனியாக ஆரம்பிக்க முடியாது. ஆகவே தொப்பிக்கல காட்டுப் பகுதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாகவும் தாக்குதல் திட்டம் அமையவேண்டும், அவ்வாறானதொரு தாக்குதலை நடத்துவதற்கு முன்னர் இந்த இரு பகுதிக்கும் பெரும் விநியோகத் தளமாக இருக்கும் கொக்கட்டிச்சோலைதளத்தைக் கொக்கட்டிச்சோலை ஊடாகவும் முதல் கட்ட நடவடிக்கைகளைப் படையினர் மேற்கொள்ள நிலைமை ஏதுவாக இருக்கிறது. இந்த இரு முனைத் தாக்குதல்களையும் எதிர்கொள்ளப் புலிகள் தங்கள் வளங்களை குவிக்க முற்படும்போது, புலிகளுக்கு நெருக்கடியை கொடுக்கும் இன்னொரு களமுனையாக சிங்களக் கிராமமாக இருக்கும் சின்னவத்தை இராணுவ முகாமிலிருந்து முன்னேறும் படையினர், கல்வெட்டை, நெடிய, வெட்டை, 35, 36, 37, 38, 39, 40ஆம் கொலனிகள் ஊடாக முன்னேறி கொக்கட்டிச் சோலையை முற்றுகை இடவும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது.



சின்னவத்தையிலிருந்து நகரும் படையினருக்கு உதவியாகவும், புலிகளின் கவனத்தைச் சிதறடிப்பதற்காகவும் தொப்பிகல காட்டுப்பகுதி மீதும், படுவான்கரை மீதும் வான் படையினரின் கிபீர் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படும். விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் அதே நேரத்தில், மேற்குறிப்பிட்ட பாரிய இராணுவ முகாம்களான சின்னவத்தை, மண்டூர், பட்டிருப்பு முகாம்களிலிருந்து பாரிய எறிகணைத் தாக்குதல்கள் இடம்பெறும்.

இந்த நடவடிக்கையின் பயணமாக கொக்கட்டிச்சோலையைக் கைப்பற்றுவது புலிகள் பின்வாங்கி பதுங்கக் கூடிய அடுத்த இடங்களான இலுப்படிச்சேனை, பூமாச்சோலை, பங்களாவெளி, கரடியனாறு, தரவை ஊடாக தொப்பிக்கல காட்டுபகுதியை நோக்கி பாரிய தாக்குதல்களுடன் ஒரு நகர்வை மேற்கொள்வர். இவ்வாறு புலிகளை கிராமங்களிலிருந்து பின்வாங்கச் செய்து தொப்பிக்கல காட்டுக்குள் நுழையச்செய்து விட்டால் படையினரின் தாக்குதல்களை தொப்பிக்கலை போர்க்களம் இலகுபடுத்திவிடும். தொப்பிகலக் காட்டுக்குள் சண்டை விரிவடையும் போது அவர்களுக்கு நெருக்கடியைக் கொடுக்கவும் திட்டமிட்ட முன்னோடி நடவடிக்கையே தற்சமயம் முல்லைத்தீவு, பூநகரிப் பகுதிகளில் அமைந்துள்ள புலிகளின் கடற்படை முகாம்கள் மீதான விமானத் தாக்குதல்களாகும்.

இந்த விமானத் தாக்குதல்கள் புலிகளின் கிழக்கு மாகாணத்துக்கான நகர்வுகளைக் கட்டுப்படுத்தும் தாக்குதல் மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தை நோக்கிப் புலிகள் கடற்பிரதேசம் ஊடாக நடத்தும் தாக்குதல்களை கட்டுப்படுத்தவுமாக இருக்கிறது. தற்போதைய நிலையில் தொப்பிக்கலக் காட்டுப்பகுதிக்குள் எத்தனை நாளைக்கு தாக்குப்பிடிப்பது, உணவுப் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்பதையும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. இவ்வளவு சாதகமான நிலை இருந்தும் படையினர் கொக்கட்டிச் சோலையைக் கைப்பற்றி தொப்பிக்கலைக்குச் செல்லும் நகர்வை உடனடியாக மேற்கொள்ளலாம். தாமதிப்பதற்கு பிரதான காரணமாக இருப்பது தற்சமயம் நெல் விளைச்சல் அறுவடைக் காலத்தில் இருப்பதாகும். தாக்குதல் ஆரம்பிக்கப்படுமாக இருந்தால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். தவிரவும் நீர் பாய்ச்சல் இருப்பதால் அறுவடையின் பின் நீர்ப்விநியோகம் தடைப்படுவதோடு, விவசாயிகள் பாதிக்கப்படவும் வாய்ப்பு குறைவு என்பதால் இந்த நிலையில் மாற்றம் அவசியமாகிறது. எனவே பாரிய படை நகர்வு என்பது

அலசுவது

**- மதியூகி -**

பொதுமக்களை பாதிக்காத வகையிலும், புலிகளின் தாக்குதல் பலம் இன்னும் பலவீனமடையும் நிலையிலும் விரைவில் ஆரம்பிக்கப்பட வாய்ப்பு அதிகரித்து வருகிறது. கொக்கட்டிச் சோலையை புலிகள் நிச்சயம் இழப்பர். அந்த இழப்பானது கிழக்கில் புலிகளின் பாரிய பின்னடைவாகவே அமையும். ◎

## அதிரடி அய்யாத்துரை



**1. அனைத்துக்கட்சி** கூட்டத்தில, அவையின்ர ஆலோசனைகள் முன்வைக்கப்படும் எண்டும், அதுகளை உள்வாங்கிக் கொண்டு தீர்வு வரைவு ஒண்டு வரையப்பட்டு வெகு விரைவில விவாதத்துக்கு முன்வைக்கப்படும் எண்டு அதிகாரமானவர் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் நீலக்கட்சி, சிகப்புக்கட்சி, காவிக்கட்சி, பச்சைக்கட்சி எண்டு சில முக்கிய கட்சிகளே இன்னும் தங்கட ஆலோசனையை முன்வைக்க இல்லையாம். அதாலை கூட்டமும் தொடர்ந்து தள்ளிப்போய்க் கொண்டிருக்குது. உதுவும் போய் "பழைய குருடி கதவைத்திறவடி" எண்ட கதையாக குப்பை மேட்டுக்குப் போயுடுமோ எண்டு சிலபேர் கவலைப் படுகினம். அதிகாரமானவர் உந்த அனைத்துக்கட்சிக் கூட்டத்தையே சொல்லிச் சொல்லித்தான் கடந்த காலத்தை ஓட்டினவர். அதுவும் கை கொடுக்கயில்லை எண்டால், அதிகாரமானவர் எதிர்காலத்தில் எதைச் சொல்லித் தப்பப் போறார் எண்டு தெரியல்லையுங்கோ. முன்னமும் பல கூட்டுக் கட்சிக் கூட்டங்கள் நடத்தப்பட்டது தான். ஆனால் அதிகாரமானவர் தந்திரமாகக் கையாள்வார் எண்டதாலை உதில ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றினார் எண்டால் அவரின்ர பெயரையும் நாட்டின்ர வரலாறு மிகவும் உன்னதமான வகையில பதிஞ்சு கொள்ளும். என்னவோ எதிர்பார்ப்புகளும் கூட ஒரு கால வரையறையோடைதான் இருக்கு எண்டதாலை சித்திரை மாதம் தமிழ் சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் வரை ஒரு கால எல்லையாக சில பார்வையாளர்கள், குறிச்சு உவச்சிருக்கினம். அதுக்கிடையில அதிகாரமானவர் தீர்வு குறித்த கட்டத்திலை அடுத்த கட்டத்துக்கு நகர இல்லையெண்டால் அதுக்குப் பிறகு சொல்லக் கூடிய வாக்குறுதிகள் நம்பிக்கையை இழந்து போயிடும் எண்டதை சொல்லவும் வேணுமே...

அடுத்த கட்டத்துக்கு மூவ் பண்ணினார் எண்டால் அது நாட்டுக்கு மட்டுமில்லையுங்கோ, அதிகாரமானவரின்ர பொலிரிக்ஸ் எதிராளிகளின்ர திட்டங்களையும் தகர்த்துப் போடும் எண்டும் ஒரு கல்லில ரெண்டு மாங்காய் அடிச்சு ஏற்கனவே ருசி பார்த்த சில பேர் அதிகாரமானவருக்கு அட்வைஸ் சொல்லினமாம்.


**2. எங்கட** கூத்தமைப்புக்காரர் தமிழகத்துக்குப் போய் கலைஞரைப் பார்க்க வேணுமெண்டு கொட்டகை அடிச்சுக் கிடந்தவையெல்லோ, அவையளுக்கு உதய சூரியன் தரிசனம் குடுக்க மாட்டன் எண்டது மட்டுமில்லாமல், கொஞ்சம் கடுப்பாகவும் இருக்கிறன் எண்ட மாதிரி மெசேஜ் அனுப்பினவராம். மெசேஜ் கிடைச்சவுடன வைகோவிற்றப் போய் உதுக்கு மேல் நாங்கள் இங்க இருந்தால் எங்களையும் ரிமாண்ட் பண்ணினாலும் பண்ணுவினம் போலை இருக்கு, நாங்கள் போறம் எண்டு இரவோடு இரவாக பிளேன் ஏறி நாட்டுக்கு ஓடி வந்திட்டினமாம். வந்தவை பக்கத்து வீட்டுக்குத் தெரியாதபடி சத்தம் காட்டாமல் இருக்கினமாம். ரெண்டெழுத்தாரின்ர அமினேஷன் கடத்தல்கள் அதிகரிச்சிருக்கிறதாலை சி.பி.ஐ.யும் தமிழக காவல்துறையும் விசாரணைகளை முடுக்கி விட்டிருக்கினமாம். அதாலை எங்க தன்னையும் இலக்குவச்சி கலைஞர் உந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திப் போடுவாரோ எண்ட பயத்தில வைகோ இருக்கிறாராம். எண்டாலும் தான் சும்மா இருந்தால் தன்ர முழியே தன்னைக் காட்டிக் கொடுத்துப் போடும் எண்டதாலை ஏதாவது ஒரு பிரச்சினையை கையில எடுத்துக் கொண்டு கொஞ்சம் சீரியஸாக இருக்க வேணும் எண்டு யோசிச்சவருக்கு, மீண்டுமொரு கால் நடைப் பவனி எண்டால் சனத்திற்ற எடுபடாது எண்டதாலை நீரணைப் பிரச்சினையை பிடிச்சுக் கொண்டு உண்ணாவிரதமிருந்தால் கலைஞருக்கு ரெண்டு வகையான மெசேஜாக இருக்கும் எண்டதாலை உண்ணாவிரத்தில குதிச்சிட்டாராம். ஆளும் தி.மு.க.வும் எதிர்க்கட்சியான அ.இ.அ.தி.மு.க.வும் குடும்பிச் பிடிச்சண்டை பிடிச்சுக் கொண்டு இருக்கேக்க, வைகோவை ஒரு பொருட்டாகவே யாரும் மதிக்கினமில்லையாம். உவர் முன்னமும் உப்பிடித்தானாம், பொலிரிக்ஸில தன்னை பொருட்படுத்தாத அளவுக்கு நிலைமை போனால் அன்றாடச் செய்திகளிலையாவது போவது தான் அடிபட வேணும் எண்டதுக்காக உப்பிடி ஏதாவது ஒரு பிரச்சாரப் போராட்டத்தை நடத்துவாராம். சரி வைகோவைப் பங்கு, கூத்தமைப்புக்காரர் தமிழ் மக்களின்ர எந்தப் பிரச்சினைக்கும் போராட்டம் செய்யாதவைக்கு எதுக்கு எம்.பி. பதவி எண்டு நான் கேக்கயில்லையுங்கோ சனம் கேக்கினம்.

**3. ஒப்பந்தத்துக்கு** அஞ்சு வயசாகிறதுக்கிடையில அதை குழப்பியடியுங்கோ. இல்லாட்டில் பயங்ரவாதிகளிட்ட நாட்டை ஒப்படைக்கும் படி சர்வதேச சட்டம் சொல்லிப்போடும் எண்டு ஒரு கதையைச் சொல்லிக் கொண்டு காவி உடுப்புக்காரரும், சிவப்புச் சட்டைக்காரரும், ஒரு பிரச்சாரத்தை முடுக்கி விட்டுக் கொண்டு திரியினம். என்னங்கோ அவை சொல்லுறது உண்மையோ எண்டு விஷயம் தெரிஞ்சவையளிட்டக் கேட்டால், அவை ஒரு மாதிரியாப் பார்த்துச் சிரிக்கினமுங்கோ. அவை தெரியாமல் தான் கேக்கினமாம். உந்த ஒப்பந்தம் ஒப்பந்தமாகவே இன்னும் இருக்குதோ, அப்புடி இருந்தால் அதை ரெண்டு தரப்பும் ஒழுங்காக கடைப்பிடிக்கினமோ எண்டதை யாராச்சும் உறுதிப்படுத்தினமோ, ஒப்பந்தம் இருப்பதாகச் சொல்லி யாருக்குக் காது குத்தப் பார்க்கினம். உலகமெல்லாம் ரெண்டெழுத்தாரைப் பயங்கரவாதிகளெண்டும், அரசாங்கத்தை மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கவனமெடுங்கோ எண்டும் சொல்லிக் கொண்டிருக்குது. கண்காணிப்புக்குழுவே கெரில்லாப் பாணியில உருமறைச்சுக் கொண்டு அறிக்கை விட்டுக்கொண்டிருக்கு. வடக்கிலையும் - கிழக்கிலையும் ஏகத்துக்கும் எறிகணைகள் விழுந்து வெடிக்கு. நாளுக்கு நாலுபேர் எண்டு கொலைகள் நடந்து கொண்டிருக்குது பிறகென்ன ஒப்பந்தக் கதை இவைக்கு. உண்மையில கிழக்கில போல வடக்கில படையினர் முன்னேறினால் வெற்றியடையலாம் எண்டதுக்காக உசுப்பேத்தி விடத்தான் உந்த உப்பில்லாத எச்சரிக்கையும், போராட்டமும் எண்டு அவை சொல்லினமுங்கோ. அவர் சொல்லிறதும் உண்மை போலதான் தெரியுது. என்னங்கோ உதுசரியோ, பிழையோ...?

**4. தலைநகரில** என்னதான் பாதுகாப்புக் கெடுபிடிகள் எண்டிருந்தாலும் எங்கட சனத்துக்கு தலைநகர் தானுங்கோ இப்போதைக்கு சேப்டியான இடம். ஏன் உப்பிடிச் சொல்லுறன் எண்டால், கிழக்கில என்.ஜி.ஓ.க்களில தொண்டுப் பணி ஆற்றினவையும், தொண்டுப்பணி எண்ட பேரில டபுல் ஏஜண்டாக இருந்து கொண்டு ஊருக்குள்ள வாலாட்டிக் கொண்டு திரிஞ்சவையும், வடக்கில இருந்து வந்து வெளிநாட்டுக்குப்போக இருப்பவைக்கும் தலைநகர்தான் தஞ்சமுங்கோ. பாவம் பெடியள் எதை மறந்தாலும் அடையாள அட்டையை மறக்காமல் கொண்டு திரியினம். தன்யாத் திரிஞ்சால் யாரும் அப்பிக் கொண்டு போயிடுவாங்கள் எண்டதாலை துணைக்கு ஒரு ஆளோடை திரியினம். ஆக்களைத் தூக்கிறவை என்ன கொள்கையோடை எந்தத் தரப்பைத் தூக்கினமெண்டு ஒண்டும் தெரியுதில்லையே, உந்தக் குழப்பத்தாலை சனம் வீட்டை விட்டு வெளியில் இறங்கப் பயந்து கொண்டு இருக்குதுகள். தலைநகரின்ர பாதுகாப்பு பலப்படுத்தப்படுகுது எண்டினம். ஆனால், உந்தக் கடத்தல்கள் மட்டும் கட்டுப்படுத்தப்பட்ட மாதிரித் தெரியவில்லை எண்டு சனம் ரொம்பவும் ஏமாற்றத்தோடை சொல்லினம். உந்த ஏமாற்றம் சனத்துக்கு மட்டுமில்லையுங்கோ. எனக்கும் இருக்குது. நான் நினைக்கிறன் குற்றவாளிகள் ரொம்பச் சொகுசாக வாகனங்களிலையும், அறைகளிலையும் இருக்கினமாக்கும். ஏன் எண்டால் பாதுகாப்பு ஏற்பாடுகளும், விசாரணைகளும், சாதாரண மட்டத்தில தானே நடக்குது எண்டதாலை அவை வசதி வாய்ப்புக்களோடை இருக்கினம் எண்டுதான் எனக்கெண்டால் சந்தேகமாக இருக்குது.

சந்தோகமானவர்களின்ர நடமாட்டம் குறித்து பாதுகாப்புத் தரப்புக்கு சனம் சப்போர்ட் பண்ணாட்டில் பாதுகாப்புத் தரப்பாலை ஒண்டும் செய்ய ஏலாது எண்டது உண்மைதான். ஆகையாலை சனம் கவனமாக இருக்கவேணுமெண்டதும் என்ர கீழ்படிவான ரிக்குவாஸ்ட்டுங்கோ...வ்.

# பயம்



## போவோம் ரசிப்போம்

**பயத்துக்கும்** மரியாதைக்கும் இருப்பது சின்ன இடைவெளிதான். மதிப்புக்குரிய ஒரு பெரியவரின் வார்த்தைக்காகவும், விருப்பத்துக்காகவும் பணிந்து நடப்பதை மரியாதைக்காக என்றுதான் நினைக்கிறோம். இதேபோல் பலம் மிக்க ஒருவர் நம்மை அடக்கி வைக்கின்றபோது அவரின் கட்டளைகளை ஏற்றுச் செய்வது பயந்து நடப்பது. ஆகவே மரியாதையையும் - பயத்தையும் வேறுபடுத்துவது நாம் யாருக்காக - எதுக்காக அதை வெளிப்படுத்துகிறோம் என்பதுதான். மரியாதையை ஒரு பக்கமாக விட்டுவிட்டு, பயத்தை மட்டும் பார்த்தால் நாம் சிரிப்பதுபோல, அழுவதுபோல பயந்து விடுவதும் ஒரு குணம்தான். எந்தச் சந்தர்ப்பத்தில், எதற்காகப் பயப்படுகிறோம் என்பது முக்கியம்.

நடிகர் ரஜினிகாந்த் சொல்வதுபோல் "பயம் இருக்க வேண்டும்; வாழ்க்கையே பயமாக இருக்கக் கூடாது" என்பதுதான் என் நிலைப்பாடும். சிலருக்கு வாழ்க்கையில் மேலே செல்லவும் பயம், ஆக அடிமட்டத்துக்குச் சென்று விடுவோமா என்றும் பயம். அப்படியானதொரு வாழ்க்கையில் எந்த மகிழ்ச்சியுமில்லை. வாழ்க்கைக்காக சவால்களையும், நெருக்கடிகளையும் எதிர்கொள்ளத் துணியாவிட்டால் காய்ந்து போகும் குளத்தில் வற்றிக் கொண்டிருக்கும் நீரைப்போல் வாழ்க்கை ஆகிவிடும்.

துணிச்சலோடு கருமம் ஆற்றுகின்றபோதுதான் வாழ்க்கை சுவாரஷ்யப்படுகிறது. முயற்சிக்காக வெற்றி கிடைப்பது எத்தனை மகிழ்ச்சியோ, அதுபோல தோல்வியடைவதும் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். இதற்கிடையில் பயம் பயன் தராது.

ஒருவருக்குப் பயந்து கொண்டு சேவகம் செய்கின்ற வாழ்க்கை, அடிமை நிலைக்கு ஒத்ததாகும். அத்தகையதொரு வாழ்க்கையை விடவும், வாழாமை உத்தமம்.

என்னிடம் இரண்டு வகையான பயங்கள் இருப்பதாக நினைக்கிறேன்.


நான் இருக்கும் சூழலில் களவு அல்லது தவறு நடந்து அதற்கான விசாரணை மேற்கொள்ளப்படுமாக இருந்தால், குற்றவாளியை விடவும் எனது முகம் மாறி, குற்ற உணர்ச்சிகள் பூசப்பட்டு விடும். சாதாரணமாக அந்த வேளையில் என்னைப் பார்க்கும் ஒருவருக்கு விசாரணையே இல்லாமல் என்னைக் குற்றவாளியாகத் தீர்மானிக்கும்படியாக இருக்கும். இதுதவிர நான் தனிமையாக இருப்பதை விட கூட்டத்தோடு, குறித்த நபர்களோடு இருக்கின்றபோது அருகிலிருப்பவர்கள் எத்தகையவர்கள், அவர்கள் தங்கள் தேவையை தீர்த்துக்கொள்வதற்காகவும், லாபம் கருதியும் என்ன செய்வார்களோ என்பதாகும்.

காலம் மனிதர்களை மிகவும் மாற்றிவிட்டது.

**மனிதர்கள் உருவங்களாக மட்டும் தான் இருக்கிறார்கள். அவர்களின் எண்ணங்கள், செயற்பாடுகள் என்பன இன்னொரு மனிதனையோ, தனது சூழலையோ பாதுகாத்துக் கொள்வதாக இல்லை. யாரையும், எதையும் என்ன வேண்டுமானாலும் செய்து சுயலாபம், சுய இருப்பு என்பவற்றைப் பாதுகாப்பதே பிரதான நோக்கமாகவிருக்கிறது.**

இத்தகையவர்களுடன் வாழ்ந்தே இந்த உலக வாழ்க்கையைக் கடத்த வேண்டியிருக்கிறது. கட்டாயத்தின் பேரில் வாழ்க்கை என்பதால் சக மனிதனைக் கண்டால் பயமாக இருக்கிறது. சந்தேகப்படவும் தோன்றுகிறது.

சில நல்லவர்களோடு கூட ஒருவகைச் சந்தேகம் கலந்த பயத்துடன் தான் பழக வேண்டியிருக்கிறது. அவரைப் பொறுத்தவரை நாம் கெட்டவர்கள். யாரும் இல்லை நீங்கள் தனிமையில் இருக்கிறீர்கள். உங்கள் உடைகள், பணம், சொத்து என எல்லாவற்றையும் வெளியேயும், வீட்டுக்குள்ளும் போட்டிருக்கிறீர்கள். உங்களுக்கு அவை களவு போய்விடும் என்ற




பயம் இருக்காது. ஆனால் மனித நடமாட்டம் உள்ள ஒரு இடமாக இருந்தால் உங்களால் அப்படி பாதுகாப்பற்ற நிலையில் இருக்கமுடியாது. இதற்குப் பிரதான காரணம் என்னவாக இருக்கும்? சக மனிதன் உங்களிடமிருந்து சூறையாடக் கூடியவன் என்ற பயம் தான்.

இரவு எல்லோருக்கும் பயமான பொழுதாகும். ஏன் பயப்பட வேண்டும். இரவு எங்களை என்ன செய்யும், அப்படிப் பார்த்தால் இருளில் தானே வாழ்கிறோம். சூரியன் வந்து ஒளி தந்தபோது இடைவெளிதானே நமக்குப் பகல், இரவு தன் பாட்டுக்கு இருக்கிறது. நமது பார்வை இருட்டைக் கிழித்துக் கொண்டு பார்க்க முடியாது என்பதால், நமக்கு முன்னால் அருகில் என்ன இருக்கிறது, நமக்கு தீங்கு விளைவிக்கக் கூடியதா என்பதை அறியாமலே பயப்படுகிறோம்.



புகழ் பெற்ற ஒரு வரித் திகில் கதை ஒன்று உண்டு. "உலகில் உள்ள எல்லா உயிரினமும் அழிந்துபோன பிறகு ஒருவன் மட்டும் வீட்டுக்குள் இருக்கிறான். அப்போது அந்த வீட்டை யாரோ தட்டுகிறார்கள்" என்பதுதான் அந்தக் கதை. அந்த மனிதனுடைய மனோ நிலை எப்படிப் பயந்து போயிருக்கும். அப்படித்தான் நம் ஒவ்வொருவரின் நிலைமையும். நாம் மனிதர்களோடும், ஏனைய ஜீவராசிகளோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஏதோ ஒரு துன்பம் நம் கதவைத் தட்டிக் கொண்டே இருக்கிறது. சிலர் துன்பத்தை எதிர்கொள்ள கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்து போராடுகிறார்கள். ஒரு சிலர் துன்பம் தட்டிக் கொண்டு இருந்தாலும் பரவாயில்லை. அது வெளியிலேயே இருக்கட்டும் என்று இருந்து விடுகிறார்கள்.

எதிர்கொள்ள வருவரைக் கண்டு துன்பம் தப்பித்து ஓடிச் சென்று தன் வீட்டுக் கதவைப் பூட்டிக் கொள்கிறது. வீட்டுக்குள்ளேயே பயந்து கொண்டு இருப்பவர்களின் இயலாத்தனத்தைக் கண்டு இத்தகையர்களின் வீட்டு வாசலைத் தட்டியதற்காக துன்பமே நம்மீது அதீத அன்பு காட்டும். ஒருவரிடம் அன்புக்காகப் பயப்படுங்கள். பயத்துக்காக பயப்படுவது அர்த்தமற்றதாகிறது. சிலர் அதீத கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக இருப்பார்கள். அவர்களைக் கேட்டால் கடவுளுக்கு பயந்து வாழ வேண்டும் என்பார்கள். வேறு சிலர் மனசாட்சிக்குப் பயந்து வாழ வேண்டும் என்பார்கள், அப்படி வாழ்ந்தால் தான் வாழ்க்கையில் தவறுகளுக்குள் விழுந்து விடாமல் நேர்த்தியான வாழ்க்கையை வாழ முடியும் என்பார்கள்.

அது அவரவர்களின் நம்பிக்கைதான். ஒருவகையில் கண் காணாத விடயங்களுக்குக் கட்டுப்பட்டு பயந்து விபரீதமான தவறுகளுக்குள் போய் விடாத வாழ்க்கை போற்றுதலுக்குரியதுதான். அத்தகையவர்கள் எதற்காகப் பயந்தார்களோ அதற்கு கட்டுப்பட்டு வாழ்கிறார்கள். சிலர் சொல்வார்கள் எதற்கும் பயமில்லை "இரவுக்கும் பகலுக்கும் பயமில்லை." என்று. இத்தகையவர்கள் பயமறியாதவர்கள் தாங்கள் என்பதில் சந்தேகம் கொண்டவர்கள். இதன் ஏதாவது நன்மையைக் கண்டார்களா என்றால் இல்லை.

ஆபத்தான காட்டுக்குள் செல்கிறோம், அந்தக் கூட்டத்தில் பயமறியாதவன் ஒருவன் இருக்கிறான். அவன் தன்னை நிரூபிப்பதற்காக கூட்டத்துக்கு முன்னால் போகிறான். ஆணவத்தோடு போனவன் கீழே இருந்த குழியில் விழுந்து விட்டான், பின்னால் வந்தவர்கள் தப்பித்துக் கொண்டார்கள். இங்கே பயமறியான் கதை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. பயம் கொஞ்சம் இருக்க வேண்டும். அது தனியே பயமாக இருக்காமல், முன்னெச்சரிக்கை கலந்த பயமாகவும், சிந்தனையோடு கூடிய பயமாகவும், பகுத்தறிவு மிகுந்த பயமாகவும் கலந்திருக்க வேண்டும். எதிரான சக்தி நம்மை பின் தொடரும்போது நமது பாதுகாப்பு கருதியும், நமக்கு வாய்ப்பான சூழல் கருதியும் பின்வாங்குவது ஒருபோதும் பயந்ததாகாது. இங்கே தந்திரத்துக்குப் பலம் சேர்க்கவே பயம் தேவைப்படுகிறது. இந்தப் 'போவோம் ரசிப்போம்' பகுதியை முதன் முதலில் எழுத நினைக்கும் போதும் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களாக, மாட்டீர்களா என்று மனதுக்குள் பயமாகத்தான் இருந்தது. புதிய நடையில் புதிய கோணத்தில் எளிமையாக உங்களோடு எழுத்துக்கள் கைகோர்த்து நடக்க வேண்டுமே அது என்னால் சாத்தியம் தானா என்று பயந்தேன். கால ஓட்டத்தில் நினைத்ததை விடவும் பெரும் வரவேற்பு தந்து நீங்கள் காட்டிய ஆதரவும், தேவையான இடத்தில் நீங்கள் வெளிப்படுத்திய விமர்சனமும் பயம் இருந்த இடத்தை துடைத்துப் போட்டுவிட்டது. எழுத்து உங்களோடு பழக்கப்பட்டு நடக்க வேண்டும் என்று நினைத்த நான், உங்கள் கரம்பிடித்து, எழுத்தும் எண்ணமுமாக நடந்து கொண்டிருக்கிறேன். தோல்வியையும், அவமானத்தையும் நினைத்தால் எதையும் ஆரம்பிக்க விடாமல் பயம் சங்கிலியால் நம்மை கட்டி வைத்து வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிடும். என் எழுத்துக்கள் பயத்தை ஒரு பக்கம் துடைத்துப் போட்டுவிட்டு, மறுபக்கத்தில் உங்களை என்னுடன் கட்டிப்போட்டிருக்கிறது. உங்களுக்கும் எனக்குமிடையில் பயத்துக்கு ஒட்டிக்கொள்ளக்கூட ஒரு காற்று இடைவெளி கூட இல்லையே இனி எதிர்காலம் என்னாவது என்று, பயம் தள்ளி நின்று பயந்துபோய் வேடிக்கை பார்க்கிறது.

**நிரூபித்து காட்டும் என் மலையாள மந்திர சக்தி**
**அதிசயம் ஆனால் உண்மை**

46 வருட காலமாக என் புகைப்படத்தை பத்திகையில் அறிமுகப்படுத்துவது எனது உண்மையான சேவை என்பதற்கு எடுத்து காட்டாகவும் மேலும் எனது மாந்திரீக ஜோதிடம் கலந்த நாளாந்த சேவையைக் கண்டறிய இதோ எனது வெப்தளம் www.drpksamy .com

குறிப்பாக மாந்திரீக துறையில் வாங்கும் பணதிற்கு ரசீது கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே

வெளிநாட்டவருக்கு விஷேச 24 மணித்தியால தொலைபேசி வசதி உண்டு.

**ஜேர்மனி அன்பரின் மடல்** மனித தெய்வமாகிய ஐயாவுக்கு ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையால் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 700KM அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்** பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு: என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்** பெருமதிப்பும் மரியாதையும் கொண்டஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

**குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி** தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப் பட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**பண்டாரவளை அன்பரின் மடல் தீராத தலைவலி தீர்த்துவிட்டது** மதிப்பிற்குறிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத தலைவலியைக் குணமாக்கி என்னைப் பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்.

**சுவிஸ் அன்பரின் மடல் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி** அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தைக் கைகூட வைத்த உங்களுக்குப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்.

**இத்தாலி அன்பரின் மடல் சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி** வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய நேர்ந்த சமயம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல் போதை அடிமைதனத்திலிருந்து விடுபட்டவர்** அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதை பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்தில் புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் ஜாதகத்தில் கூறியது பலிதம்** மரியாதைக்குரிய ஐயா உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் என கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்.

**யாழ்ப்பாணம் அன்பரின் மடல் அதிசய அக்னி குண்டல பூஜை** மதிப்பு, மரியாதை கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதம் தோறும் விசேஷமாக நடைபெறும் அக்கினிகுண்டல பூஜையில் சக்தி பெற்ற வீபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகின்றோம் ஐயா.


**Prof.P.K.SAMY(J.D.G.A.N.) JP ஐயா**
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO-162 KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO-13
011-2470615,011-2342463,011-2342464, FAX-0094-11-2344831
நுவெரலியா கிளை-33 Daily Fair Complex 052-2222508-

# கருவிலேயே கலைந்துபோன பண்டா – செல்வா ஒப்பந்தம்

## தமிழர்களுக்குப் பிரச்சினை உண்டு

**சிங்களத் தலைவர்களின் குறுகிய தேசியவாதம் எப்படி தமிழ் பேசும் மக்களைப் பாதித்து வந்துள்ளதென்பதைக் கடந்த வாரமும் விளக்கினோம். சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. சார்பில் முன்னாள் யாழ். மாவட்ட எம்.பீ., எஸ். தவராஜா சமர்ப்பித்த ஆய்வறிக்கையின் இன்னொரு பகுதி இங்கே தரப்படுகிறது.**

**(சென்ற வாரத் தொடர்ச்சி)**



*மோட்டார் வாகனங்களின் இலக்கத்தகடுகளில் சிங்கள ஸ்ரீ எழுத்து பொறிக்கப்படுவதை எதிர்த்து 1961 ஆண்டு பெப்ரவரி மாதம் யாழ். கச்சேரிக்கு முன்பாக தமிழரசுக்கட்சி முன்னின்று நடத்திய சத்தியாக்கிரக இயக்கத்தின் போது . பிடிக்கப்பட்ட படங்கள் சத்தியாக்கிரகிகளை பொலிஸார் தாக்குவதையும் படங்களில் காணலாம்.*

இதற்குப் பின்னர் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் இலக்கத் தகடுகளில் ஸ்ரீ என்ற சிங்கள எழுத்தை அறிமுகப்படுத்தும் வேலைகள் தொடர்ந்தன. தமிழ்ப் பகுதிகளில் இந்த உத்தரவிற்குப் பகிரங்க எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இனப் பிரிவினை மிகக் கூடியளவிற்கு கூர்மையடைந்து கொண்டிருந்த ஒரு தருணத்தில், "சுயாட்சித் தமிழ் இராஜ்ஜிய" என்ற இலக்கு தமிழ் அரசியல் சமூகத்தின் மத்தியில் கருத்தொற்றுமை பெற்று வந்து கொண்டிருந்த தருணத்தில், இந்த ஒழுங்கு விதி அறிமுகப்படுத்தப்பட்டதனால் அது எதிர்ப்பின் சின்னமாகியது.

ஒரு வருட காலம் நீண்ட இந்த அரசியல் இழுபறி, 1957ஆம் ஆண்டு ஜூலையில் பண்டா - செல்வா ஒப்பந்தம் என்று கூறப்பட்ட இணக்கத் தீர்வுடன் முடிவுக்கு வந்தது. தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஓர் வழிவகையெனக் கொள்ளப்பட்ட இந்த அதிகாரப் பகிர்வு எண்ணக்கரு, குறுகிய காலம்தான் நீடித்தது என்ற போதிலும் இந்த ஒப்பந்தத்தின் ஊடாக முதல் தடவையாக சிங்கள அரசியல் சமூகத்தின் ஒப்புதலைப் பெற்றது. மேலும், காணிக் குடியேற்றங்களில் மாவட்டங்களின் இனப்பரம்பலைப் பேண வேண்டிய தேவையினையும் இந்த ஒப்பந்தம் குறிப்பிட்டது. மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாகச் 'சம அந்தஸ்து' என்பதனைச் சமாந்தரமாகவும், நாட்டின் ஏனைய பகுதிகளில் நியாய பூர்வமான தமிழ் மொழி உபயோகம் என்ற அந்தஸ்தினையும் இந்த ஒப்பந்தம் வழங்கியது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோதிலும், அதனைச் செல்லுபடியாக்குவதற்கு தேவையான சட்டவாக்கங்களை அறிமுகப்படுத்துவதில் நிலவிய தாமதம், தமிழர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியது. இந்த இடைவெளி, வடக்கிலும் கிழக்கிலும் பல்வேறு ஒத்துழையாமை இயக்கங்களுக்கு உந்துதலாக அமைந்தது. இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் நிலவிய தாமதம் குறித்து தமிழ் அரசியல் சமூகம் கொண்டிருந்த சகித்துக் கொள்ள முடியாத தன்மையை 1957, ஆகஸ்ட் 13ஆம் திகதி டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன் தெரிவித்த கீழ்க்கண்ட கருத்திலிருந்து அறிந்து கொள்ள முடியும்.

***"பேச்சுவார்த்தையின் ஊடாக அரசியல் ஒப்பந்தங்களை ஏற்படுத்தும் கொள்கை பயனளிக்காது போல் தென்படுகின்றது. ஏனென்றால், இதற்காக அரசாங்கத்தின் மீது தங்கியிருக்க முடியாது. சிவில் ஒத்துழையாமை இயக்கத்தின் ஊடாக எமது சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது மீண்டும் அவசியமானதாக்கப்படலாம்."***

ஐ.தே.க. இந்த ஒப்பந்தத்தை எதிர்த்தது மட்டுமல்ல, இந்த ஒப்பந்தத்திற்கு எதிரான தமது இயக்கத்திற்கு 'தேவர்களின்' ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக கண்டிக்கு யாத்திரை செல்லவும் தொடங்கியதால், எமது நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் மேலெழும்பத் தொடங்கியது. புத்த பிக்குகளின் அதிகரித்து வந்த அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க முடியாமல், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒன்பது மாதங்களுக்குள், அதாவது 1958ஆம் ஆண்டு ஏப்ரல் 9ஆம் திகதி, இந்த ஒப்பந்தத்தை ஒரு தலைப்பட்சமாக இரத்துச் செய்வதாக திரு. பண்டாரநாயக்கா அறிவித்தார். இறுதியாக இந்த ஒப்பந்தம் சுவடிக் கூடத்தில்தான் ஓய்வு பெறும் இடத்தைத் தேடிக் கொண்டது.

இந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்யுமாறு அழுத்தங்கள் எழுந்த போது திரு. பண்டாரநாயக்கா புத்த பிக்குகளுக்கு என்ன கூறினார் என்பதை நினைத்துப் பார்ப்பது பயன்மிக்கது.

***"நீங்கள் எல்லோரும் இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக இருந்தால், நிச்சயமாக நான் இதனைக் கிழித்தெறிந்து விடுவேன். ஆனால் அது நாட்டின் எதிர்காலத்தை ஆபத்துக்குள்ளாக்கிவிடும். இது குறித்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்."***

இந்த நடவடிக்கையினால் ஆத்திரமடைந்த, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம், 'அஹிம்சை ரீதியிலான சிவில் ஒத்துழையாமை இயக்கத்தில்' ஈடுபடுமாறு ஏப்ரல் 10ஆம் திகதி தமிழ் பேசும் மக்களுக்கு அறைகூவல் விடுத்தது. அத்துடன் உயிர் வாழ்வதற்காக எதிர்த்துப் போராடுமாறும் இல்லையேல் அடக்கப்பட்ட ஓர் இனமாக என்றும் இருக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அறிவித்து, அதுவே தமிழர்களுக்கு இருக்கக் கூடிய ஒரேயொரு மாற்றுவழி என்றும் பிரகடனப்படுத்தியது.

அதன் பின்னர், 'உறுதிமொழிகளுக்குத் துரோகமிழைத்தல்' என்ற சொற்றொடர் தமிழ் அரசியல் சமூகத்தினால் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட வெளிப்படையான உண்மையாகியது.

அறிவிக்கப்பட்டதைப் போன்று, இலங்கையில் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம், பல்வேறு ஒத்துழையாமை இயக்கங்களைத் தொடர்ந்து மேற்கொண்டது.

இத்தகைய அனைத்து வளர்ச்சிப் போக்குகளின் விளைவாக ஏற்பட்டு வந்த கொந்தளிப்பு 1958ஆம் ஆண்டின் தமிழர் விரோதக் குழப்பங்களுக்கு வழி வகுத்தது. வவுனியாவில் நடைபெறவிருந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு, ரயில் மூலம் சென்று கொண்டிருந்த அதன் பிரதிநிதிகளை ரயிலை வழிமறித்து மே 22ஆம் திகதி தாக்கியதன் மூலம் இந்தக் கலகம் ஆரம்பித்தது. இத் தாக்குதலில் நான்கு பிரதிநிதிகள் கொல்லப்பட்டனர். மறுநாள் பிரதிநிதிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த மற்றொரு ரயில் தடம் புரண்டது. ஒரு வார காலத்துக்குள் நாட்டின் சகல பகுதிகளுக்கும் குழுழ்பம் பரவியது.

பாணத்துறையில் பிராமணக் குருக்கள் ஒருவர் மீது உயிரோடு பெற்றோல் ஊற்றிக் கொளுத்தியமை, தமிழர்களின் மனங்களில் இன்னமும் எதிரொலித்துக் கொண்டிருக்கும் மிக மோசமான சம்பவமாகும். பொலநறுவையிலும் ஹிங்குரான்கொடையிலும் ஏனைய அத்துமீறல் சம்பவங்கள் இடம்பெற்றன. இங்கே தமிழர்கள் வாள்களாலும், புல்லு வெட்டும் கத்திகளாலும் வெட்டப்பட்டனர். அல்லது உயிரோடு கொளுத்தப்பட்டனர்.

**இவை அனைத்துக்கும் மத்தியிலும், யாழ்ப்பாணத்தில் அப்போது சுமார் இரண்டாயிரத்து நூறு சிங்களவர் மொத்த எண்ணிக்கையில் வாழ்ந்த போதும் ஒருவருக்குக் கூட தீங்கிழைக்க எந்தவொரு முயற்சியும் எடுக்கப்படவில்லை.**

இக் குழப்பங்களை விளைவித்தவர்களைக் கைது செய்வதற்குப் பதிலாக, அரசாங்கம் தமிழ்த் தலைமைத்துவத்தை தடுப்புக்காவலில் வைத்தது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் உட்பட பல தமிழ் எம்.பி.க்களும் அதன் மாவட்டத் தலைவர்கள் 150 பேரும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். காவலில் வைக்கப்பட்டவர்களில் முஸ்லிம்களும் அடங்குவர். வீட்டுக் காவலில் தடுத்து வைக்கப்பட்ட ஒரேயொரு சிங்களவர் கே.எம்.பி. ராஜரட்ன எம்.பி.யாவார்.

தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) மசோதா 1958 ஜூலை 17ஆம் திகதி (இரண்டாவது வாசிப்பு ஆகஸ்ட் 15ஆம் திகதி) சபையில் நிறைவேற்றப்பட்டது. நியாயமான தமிழ் மொழி உபயோகத்திற்கு, குறைந்தளவு ஏற்பாடுகளையே கொண்டிருந்த இந்த மசோதாவினை, கொழுந்து விட்டெரியும் நெருப்பினை ஒரு வாளி தண்ணீரை ஊற்றி அணைக்க முனையும் முயற்சியெனத் தமிழர்கள் கருதினர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சில நிர்வாகத் தேவைகளுக்காகத் தமிழை பயன்படுத்துவதையும், தமிழர் ஒருவர் தமிழிலேயே அரசுடன் தொடர்பு கொள்ளக்கூடிய உரிமையினையும் இந்த மசோதா வழங்கியது. இந்த மசோதாவின் கீழான சில விதிகள் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் மட்டுமே, அது சட்ட ரீதியானதாகும். அதாவது 1956ஆம் ஆண்டின் உத்தியோக மொழிகள் சட்டம் சட்டபூர்வமாகும் தினத்துக்கு பின்னரே இது அமுலாகும். அந்தத் தினம் 1960ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியாகும்.

தமிழ் மொழியை உத்தியோகபூர்வ மொழியாகப் பயன்படுத்துவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட உரிமைகளை வழங்குவதற்கெனப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மசோதாவொன்று தமிழ் தலைவர்கள் பங்குபற்றாமலேயே நிறைவேற்றப்பட்டது. தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ்த் தலைவர்கள், விவாதத்தில் கலந்துகொள்ள பொலிஸ் காவல் வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டபோதும் அதனை ஏற்றுக்கொள்ள தமிழ் தலைவர்கள் மறுத்ததால், அவர்கள் பங்குபெறாமலேயே நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பான முழுச் செயற்பாடுகளிலும் ஒரு வெள்ளிக் கீற்றின் ஒளியை, இந்த மசோதாவை ஆதரித்து திரு.பண்டாரநாயக்கா ஆற்றிய உரையில் நான் கண்டேன். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மிகப் பெருந்தொகையான தமிழர்கள் உள்ளனரென்ற அடிப்படையிலேயே, சில நிர்வாகத் தேவைகளுக்காகத் தமிழ் மொழியைப் பயன்படுத்துவது தொடர்பான சலுகை வழங்கப்பட்டதென அந்த உரையின்போது அவர் கூறியிருந்தார். தலைவர் அவர்களே, வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தமது அரசியல் அதிகாரத்தைச் ஸ்திரப்படுத்தும் அலகாக, தமிழர்கள் ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்பதை நான் விளங்கப்படுத்த முனைந்தபோது, இதே விடயத்தையே நான் சுட்டிக்காட்டினேன்.

1958ஆம் ஆண்டின் தமிழர் விரோத குழப்பங்களுக்கும், 1959ஆம் ஆண்டு பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா படுகொலை செய்யப்பட்டமைக்கும் பின்னர், தமிழர்களின் அஹிம்சை ரீதியான கிளர்ச்சிகளில் தொய்வு காணப்பட்டது. எவ்வாறெனினும், 1960 மார்ச்சிலும் ஜூலையிலும் நடைபெற்ற இரு பொதுத் தேர்தல்கள், இலங்கை தமிழரசுக் கட்சியின் கொள்கைகளுக்கும் அரசியல் வேலைத் திட்டங்களுக்கும் மீண்டும் தெளிவான ஆணையை வழங்கின.

1960 ஏப்ரலில் ஐ.தே.க.வை அரசாங்கம் அமைக்கவிடாமல் தோற்கடிப்பதற்காகச் சுதந்திரக் கட்சிக்கு, இலங்கை தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்கியது. அதாவது, பண்டா - செல்வா ஒப்பந்தம் பூரணமாக அமுல்படுத்தப்படுமென்று சுதந்திரக் கட்சி வழங்கிய உறுதிமொழியின் பேரில் (1960ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் திகதி செல்வநாயகத்தின் இல்லத்தில் நடைபெற்ற பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுடனான சந்திப்பின்போது) சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு வழங்கியது. எனினும் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆதரவோடு சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு அனுமதியளிக்காமல் டட்லி சேனநாயக்கா பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டார்.

இதன் பின்னர் 1960 ஜூலையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், எந்தக் கட்சியினதும் ஆதரவு இல்லாமலேயே அரசாங்கத்தை அமைப்பதற்குத் தேவையான போதிய பெரும்பான்மையைச் சுதந்திரக் கட்சி பெற்றுக் கொண்டது. பண்டா - செல்வா ஒப்பந்தம் பூரணமாக அமுல்படுத்தப்படுமென்று முன்னர் வழங்கப்பட்ட உறுதிமொழி, 1957ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தம் சந்தித்த அதே விதியைச் சந்தித்துக்கொண்டது. இது, இனப் பெரும்பான்மை ஆட்சியின் அசிங்கமான முகத்துக்கு, மற்றொரு உதாரணமாகும்.

இச் சட்டவிதிகளுக்கேற்ப, 1961ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி, நாட்டின் உத்தியோகபூர்வ மொழியாகவும் நிர்வாக மொழியாகவும் சிங்களம் கொண்டு வரப்பட்டது. அதேவேளை, அந்தத் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் அரசாங்க ஊழியர்கள், சிங்களத்தில் வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்று அரசாங்கம் அறிவித்தது. ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள், நஷ்டஈடு எதுவுமின்றி 1961 டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

தமிழர்களுக்கு எவ்வித நிவாரணமுமின்றி, அரச கரும மொழிச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை, தமிழர்களின் உணர்வுகளைத் தூண்டிவிட்டது. பெருந்தொகையான அரசாங்க ஊழியர்கள் ஓய்வுபெற முன்வந்தனர்.

இந்த ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட்டதன் விளைவாகத் தமிழ் அரசியல் சமூகத்தில் எழுந்த உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு, 1961ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்று ஆதாரமாகும். அந்தத் தீர்மானத்தில், ***"அரசாங்க அலுவலகங்களில் மறியல் போராட்ட இயக்கங்களை நடத்துவதன் மூலம், நேரடி நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும், சிங்களத்தில் அலுவல்களை நடத்தும் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுக்குமாறும், தமிழ் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறும்."***

அத் தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.

தனது நிலையை மீளப் பெறுவதற்குத் தமிழ் அரசியல் சமூகம் எடுத்த சகல முயற்சிகளிலும் தோல்வி கண்டதால், 'சத்தியாக்கிரக இயக்கம்' நடத்துமாறு தமிழரசுக் கட்சி விடுத்த அறைகூவல் பெரு வெற்றியைப் பெற்றது. தலைவர் அவர்களே, யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தை இரண்டு மாதங்கள் சம்பூரணமாக ஸ்தம்பிதமடையச் செய்தததையும், வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ஏனைய பகுதிகளில் ஓரளவு ஸ்தம்பிதமடையச் செய்தததையும் கொண்டு இந்த வெற்றியை நான் மதிப்பிடவில்லை. அது தமிழ் மக்களின் சகல பிரிவினர் மத்தியில் பாரிய ஆர்வத்தை ஏற்படுத்தியதையும், தமிழர்களின் பல்வேறு அரசியல் சமூகத்தினரை ஒரே நோக்கத்தின் கீழ் கொண்டு வந்ததையும் கொண்டு இந்த வெற்றியை நான் மதிப்பிடுகிறேன்.

பாரிய ஆத்திரமூட்டலுக்கு மத்தியிலும் கூட, எவ்விதமான வார்த்தைப் பிரயோகம் அல்லது செயல் ரீதியான வன்செயலில் ஈடுபடக் கூடாதென்று 'சத்தியாக்கிரக இயக்கத்தில்' ஈடுபட்டவர்கள் கடுமையாகத் தடுக்கப்பட்டிருந்தனர்.

(தொடரும்)


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

***இளையராஜாவிற்கு*** மூன்று முகங்கள் உண்டு.

மூன்றடி கொண்டு மூவுலகளந்த முகுந்தனைப் போல், மூன்று முகம் கொண்டு மண்ணுலகளந்த மற்றொரு வாமனனாக நாம் இளையராஜாவைக் கொள்ளலாம்.

அவரது முதல் முகம், மெல்லிசையின் மேன்மைகளைப் பட்டணத்திலிருந்து பட்டிதொட்டி வரை பரப்பியது: அவரது இரண்டாவது முகம், மேலைநாட்டு இசையின் நுணுக்கங்களை, தேம்ஸ் நதித் தீத்திலேயே முழங்கியது; அவரது



மூன்றாவ்து முகம், தொல்லிசையின் பழமையையும், பரிசுத்தத்தையும் தற்போது கா்நாடக இசை வல்லுநா்களிடையே வெளிப்படுத்தியிருக்கிறாா்.

மெல்லிசை என்பது மலினமானது என்றும், தொல்லிசை என்பது தூய்மையானது என்றும், நெடுங்காலமாகவே சில நிரட்சர குட்சிகளின் நிா்ணயமாக இருந்து வருகிறது. இந்த 'இரண்டுங் கெட்டான்' போ்வழிகள்தான், சங்கீத வித்வான்களுக்கும், சினிமா இசையமைப்பாளா்களுக்கும் ஒரு ஜன்மப் பகை இருப்பதாகவும் விமா்சித்து வருகிறாா்கள்.

தமிழில் மெல்லினம், வல்லினம் இருப்பது போல் இசையிலும் மெல்லிசை, தொல்லிசையாக இரு கூறுகள் வகுக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, இவை இரண்டிற்குமிடையே ஒரு தீண்டாமை உணா்வு உண்டு எனத் தீா்மானிப்பவா், ஏழிசையையும், இசைப் பயனையும் என்னவென்றறிய ஏலாதாா். தொல்லிசைக் கலைஞனுக்கும், மெல்லிசைக் கலைஞனுக்கும், நுரையீரலை நிரப்பும் பிராண வாயு, சுதிசுத்தமான இசைதான். இதை, வலது மூக்கில் வாங்கி இடது மூக்கில் விட்டால் என்ன? இடது மூக்கில் வாங்கி வலது மூக்கில் விட்டால் என்ன? இருவகைக் கலைஞா்களுமே சுதியில் லயித்து, ஒரு பிராணாயாமத்தை நிகழ்த்துகிறாா்கள் என்பதுதான் பட்டவா்த்தனமான உண்மை.

தியாகராஜா் மாதிரி, இளையராஜாவும் ஒரு வாக்யேக்காரா்தான்.

'ஆஹா! தியாகராஜரோடு இளையராஜாவை இணைத்துப் பேசுதல் மகத்தான பாவ காரியம்' என்று மகா வித்வான்கள் என்னோடு முட்டி மோத முனையக்கூடாது.

தியாகராஜரைப்போல், இளையராஜாவும் பல கிருதிகளைப் புனைந்து என் செவி குளிரப் பாடிக் காட்டியிருக்கிறாா். அனைத்தும் பக்திப் பனுவல்களே.

தியாகராஜரும், கச்சேரி செய்து காசு பண்ணக் கிருதிகளைப் புனையவில்லை: இளையராஜாவும் பணம் பண்ணுவதற்காக சாஹித்யங்களைச் சமைக்கவில்லை. ஆத்ம திருப்திக்காகத்தான் அவற்றைப் புனைந்திருக்கிறாரே தவிர, அதற்கு விலை வைத்து அவா் வாணிகம் நிகழ்த்தவில்லை. விலைக்கு விற்க, இளையராஜாவிடம் கோடிக் கணக்கான வா்ணமெட்டுகள் ஊற்றெடுத்து வரும்போது, கிருதிகளை மாா்க்கெட் செய்து குடும்பம் நடத்த வேண்டிய கட்டாயம் அவருக்குக் கிஞ்சித்தும் இல்லை. தன்னுடைய ஆத்மானுபூதியை வெளிப்படுத்தவும், அதன் பயனாக இறையருளை யாசித்துப் பெற்றுப், பிறப்பறுக்கவும் தான் இது போன்ற கிருதிகளை, அவா் தன் பல்வேறு பணிகளுக்கிடையே புனைந்து, தானும் சந்தோஷித்து என்னைப் போன்ற இறை பற்றுடையோரையும் சந்தோஷப்படுத்துகிறாா்.

வாழ்க்கையை, 'வைதிகத்திற்கும் லௌகிகத்திற்கு'மாகப் பங்கிட்டுப் பயன்படுத்தத் தெரிந்த பக்குவம், இளையராஜாவிற்கு இறைவன் அருளிய வரம். இளையராஜாவிற்குள் இன்னொரு இளையராஜா இருக்கிறாா் என்பதை நான் உன்னிப்பாகக் கவனித்துத்தான் இந்த உண்மையைச் சொல்லுகிறேன்.

'நாரத கான சபா'வில் உட்காா்ந்து கொண்டு நாவாரக் கா்நாடகக் கிருதியை இசைக்கும் நேரத்தில், அவா் நாலு படங்களுக்கு வா்ண மெட்டுகளை வாா்த்துக் கொடுத்து பல இலட்சங்களைப் பாா்த்துவிட முடியும். இருப்பினும், ஆத்ம திருப்திக்காகத், தானெடுத்த இந்த ஜன்மத்தையும், தான் பெற்ற இந்த இசைப் புலமையையும், ஈஸ்வராா்ப்பணமாக்கி, தன் பிறப்பை அா்த்தமுள்ளதாக்கிக் கொள்ளும் முனைப்பில்தான் அவா் இதுபோன்ற வேள்விகளில் தன்னை அவ்வப் பொழுது ஈடுபடுத்திக் கொள்கிறாா்.

ஒரு திரைப்பட இசையமைப்பாளா் என்கிற முறையில் இளையராஜாவோடு எனக்குக் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதுண்டு. ஓா் இறையருள் மிக்க இசைக்கலைஞா் எனும் வகையில், மாற்றுக் கருத்தே என் இதயத்தில் முளை விட்டதில்லை. அவா் ஒரு மகா புருஷா் என்கிற மதிப்பை, இப்பிறவி முழுதும் நான் என் மனத்துள் பொன்னே போல் வைத்துக் காப்பேன். சுருக்கமாகச் சொல்லப் போனால், திரு. எம்.ஜி.ஆரைப் போல் திரு. இளையராஜாவும் ஒரு விசேஷமான பிறவிதான். இருவருக்குமே உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை தெய்வ சாந்நித்யம் நிரம்பித் ததும்பி வழிவதை, இருவரோடும் நெருக்கமாகப் பழகியவன் என்கிற அனுபவத்தில் அறுதியிட்டுக் கூறுகிறேன்.

தொழில் நிமித்தமாக, திரையிசையிலேயே அதிகம் செவிமடுக்க நோ்ந்தபோதிலும், நேரம் கிடைக்கும் போதெல்லாம் வானொலிப் பெட்டியின் வழியே வரும் கா்நாடகக் கானாம்ருதத்தை, அண்ணன் எம்.ஜி.ஆா். காதாரப் பருகுவது உண்டு. மரபுவழிச் சங்கீதக் கலைஞா்களை, அவா் பெரிதும் மதிப்பவா்.

நான் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவராக இருந்தபோது, ஒருநாள் அதிகாலையில் எம்.ஜி.ஆா். எனக்கு டெலிபோன் செய்து, "வேதாரண்யம் வேதமூா்த்தியின் நாதஸ்வரத்தை காலேல ரேடியோவ்ல கேட்டேன். அற்புதமா இருந்தது. அவருடைய இசை, டிஸ்கில இருந்தாலும் சரி, டேப்புல இருந்தாலும் சரி, அத்தனையும் எனக்கு வேணும். உடனே ஏற்பாடு பண்ணுங்க" என்றாா்.

இந்தத் தகவலை நான் உடனே இயல் இசை நாடக மன்றச் செயலாளராக அப்போது பணியாற்றிக் கொண்டிருந்த என் அருமை நண்பா் திரு.வி.எஸ். ராகவன் அவா்களிடம் சொல்லி, வேதாரண்யம் வேதமூா்த்தியின் நாதஸ்வர இசை பதிவாகியுள்ள ஒலிப்பதிவு நாடாக்களை எங்கிருந்தாலும் வாங்கிப் பெற்று, எம்.ஜி.ஆரிடம் சோ்ப்பிக்குமாறு வேண்டிக் கொண்டேன்.

முதல்வராகப் பணியாற்றிக் கொண்டிருக்கையில், தனது பல்வேறு பொறுப்புகளிடையிலும் கா்நாடக சங்கீதத்தின் பால் எம்.ஜி.ஆருக்கு இருந்த காதலைச் சொல்லவே இந்த நிகழ்ச்சியை இங்கு குறிப்பிட்டேன்.

**(தொடரும்)**







***அவரை*** அரசியல் அரங்கிற்கு கொண்டு வந்தவா் வேறு யாருமல்ல, திரு. ஆனந்த சங்கரி அவா்கள்தான்.

உண்மையில் இந்த படுகொலை நடந்திருக்கவே கூடாத ஒன்று. நீதிக்கும் மனித நேயத்திற்கும் சவால் விடும் கோரச்செயல் என்றுதான் கூற வேண்டும்.

98 இல் யாழ். மாவட்டத்திற்கான உள்ளூராட்சி சபைத் தோ்தல் நடத்தப்பட்டது. ஆயுதப்போராட்ட அமைப்புகளாக இருந்த ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆா்.எல்.எவ். என்பன தனித்தனியாக வெவ்வேறு திசைகளிலும் மிதவாத அமைப்பான கூட்டணி இன்னொரு புறமுமாக தோ்தலைச் சந்தித்திருந்தன.

யாழ். மாவட்டத்தில் மொத்தம் 17 சபைகள். யாழ். மாநகர சபைக்கும், வலிகாமம் வடக்கிற்கும் மட்டும் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தது கூட்டணி. யாழ். மாநகர சபையில் போட்டியிட்ட சறோஜினி யோகேஸ்வரன் அவா்கள் யாழ். மேயராகத் தெரிவாகியிருந்தாா்.

ஈ.பி.டி.பி. 10 சபைகளிலும் புளொட் நான்கு சபைகளிலும் கூட்டணி போட்டியிட்டிருந்த இரு சபைகளிலும் ரெலோ ஒரு சபையிலும் வெற்றி பெற்றிருந்தது.

ஆயுதப்போராட்ட அமைப்புகள் வாக்குகளை பிரித்துக்கொண்டதால் சறோஜினிக்கு வெல்வதற்கான வாய்ப்பு வசதியாகியிருந்தது. உண்மையில் சறோஜினியின் துணிச்சலைப் பாராட்டத்தான் வேண்டும்.

கூட்டணியினா் எல்லோரும் உயிருக்குப் பயந்து ஒளிந்திருக்க, ஒரு பெண் துணிச்சலோடு மரண அச்சுறுத்தலையும் எதிா் கொண்டு அந்த தோ்தலில் போட்டியிட்டிருந்தமை பாராட்டத்தக்கது.

நீண்ட இடைவெளிக்குப் பின்பு யாழ். பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய சறோஜினி, யாழ். மண்ணை விழுந்து முத்தமிட்டு அந்த மண்ணுக்கு மரியாதை செலுத்தி விட்டு தோ்தலில் போட்டியிட்டிருந்தாா்.

புளொட் அமைப்பு 4 சபைகளை அப்போது கைப்பற்றியிருந்தமை உண்மையில் மாணிக்கதாசனின் தீவிரமான செற்பாடுகள்தான் காரணமாக இருந்தது. தாசனின் மறைவிற்குப் பின்பு புளொட் அமைப்பு யாழ். மாவட்டத்திலும் பெரும் பாதிப்பினை இந்த அமைப்பிற்கு ஏற்படுத்தியிருந்தது.

ஈ.பி.ஆா்.எல்.எவ். அமைப்பை பொறுத்தவரை அது சுரேஸ் பிறேமச்சந்திரனின் திருகு தாளங்களோடு சம்பந்தமான ஒரு தொடா்கதை. இதையும் இந்த இடத்தில் கூறித்தான் ஆகவேண்டும்.

சுரேஸ் அணி, வரதா் அணி என்று இரு வேறாக அந்த அமைப்பு பிரிந்து சென்ற பின்னா், அப்போது ஜனாதிபதியாக இருந்த


சறோஜினியின் இறுதிக்கிரியையின் போது.

சந்திரிகாவைச் சந்திக்க சென்றிருந்தனா் அன்றைய வரதா் அணியினா்.

சந்திக்க சென்றவா்கள் சுகுவும் றொபேட் சுபத்திரனும்.

எங்களுக்கு நீங்கள் கட்சிக்குரிய நிதியைச் சரியான முறையில் ஒதுக்குவதில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்தனா் அவா்கள்.

ஏன் இல்லை?... கடந்த உள்ளூராட்சி சபைத் தோ்தலில்

**தேடனாா்**

பெருந்தொகை பணத்தை ஒதுக்கியிருக்கின்றேன் என்றாா் சந்திரிகா.

அதற்குரிய கொடுப்பனவு ஆவணங்களையும் மேசையில் எடுத்துப்போட்டாா் சந்திரிகா!

சுகுவும் றொபேட்டும் தலையில் கையை வைத்து அதிா்ந்து போனாா்கள்.

ஜனாதிபதி சந்திரிகா அவா்கள் ஒதுக்கிய நிதியில் சிறு பகுதி மட்டும்தான் சுரேஸ் பிறேமச்சந்திரனால் கட்சிக்குள் கணக்கு காட்டப்பட்டிருந்தது. மிகுதியைச் சுருட்டி விட்ட சுத்து மாத்து அப்போதுதான் அவா்களுக்கு வெளிச்சத்திற்கு வந்தது.

சிறு தொகையைக் கட்சிக்கு கணக்கு காட்டிவிட்டு பெருந்தொகையைத் தனது சொந்த அலுவலுக்குச் சுருட்டி விட்டாா் சுரேஸ்.

மத்திய கமிட்டி, ஜனநாயகம், கூட்டு முடிவு என்று பம்மாத்து விடும் சுரேஸ் பிறேமச்சந்திரன், மத்திய கமிட்டிக்குக் கள்ளக்கணக்கு காட்டி கட்சிப் பணத்தை சுருட்டிக்கொண்டது குறித்து சுகுவும் றொபேட்டும் தலையில் அடித்துக்கொண்டனா்.


இதுதான் சுரேஸ் பிறேமச்சந்திரனின் மத்திய கமிட்டி ஜனநாயகம் என்று நொந்து கொண்டனா் கட்சி உறுப்பினா்கள். இதை இன்னொரு இடத்தில் நோக்கலாம்...

யாழ். மேயராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த சறோஜினி புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டாா். ஏற்கனவே அவரது கணவா் தலைவா் அமிரின் தளபதி யோகேஸ்வரன் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்த துயரத்தோடு சறோஜினியின் மீதான படுகொலைத் துயரமும் நிகழ்ந்திருந்தது. சறோஜினியின் இடத்திற்கு பொன் சிவபாலன் நியமிக்கப்பட்டிருந்தாா். அப்போது பிரதி மேயராக பதவி ஏற்றவா்தான் ரவிராஜ்.

புலிகளின் மரண அச்சுறுத்தலையும் எதிா் கொண்டு ரவிராஜ் பிரதி மேயரானாா். சில நாட்களில் பொன் சிவபாலனும் புலிகளால் படுகொலை செய்யப்பட ரவிராஜ் யாழ். மேயராக துணிச்சலோடு பதவி ஏற்றிருந்தவா்.

அரச பாதுகாப்பு அவருக்கு தேவையான அளவு இருந்தது. ஆனாலும் நாளும் பொழுதும் ஒரு பிஸ்டலை தனது இடுப்பில் செருகியிருந்தாா் ரவிராஜ்.

**(சாட்சிகள் தொடரும்)**




**இதற்கிடையே** கப்பலில் வந்த இளைஞா்களை கிராவின் படைகள் சிறை வைத்தது. பின்னா் தெரிய வந்த செய்திகள் பிடலுக்கு ஆச்சரியமாக இருந்தது. டொமினிக்கன் குடியரசின் தலைவரான டிரோகிலோ, அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டிடம் தன்னைக் காப்பாற்றும்படி தூது அனுப்பியிருக்கிறாா். கம்யூனிஸ்டுக்கள் படையெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்திருக்கிறாா். உடனடியாக கியூபாவின் தலைவா் கிராவுக்கு, ரூஸ்வெல்ட் அவசர உத்தரவிட்டுள்ளாா். அதாவது அவா்களை உடனடியாக கைது செய்யும்படியான உத்தரவு அமெரிக்காவிலிருந்து வந்தது. ஆகவேதான் போா் கைவிடப்பட்டு படைகள் திருப்பி அழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டதாகும். இந்தக் கைது நடவடிக்கையை எதிா்த்த மாணவா் தலைவா் ஒருவா் கிராவின் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டாா்.

இதன் பின்னா்தான், நடந்தது புரட்சிப் போா் அல்ல, பணத்துக்காகவும், அதிகாரத்தைப் பிடிக்கவும், புரட்சி வேடம் போடுபவா்களால் நடத்தப்பட்ட சதி என்பது பிடலுக்குத் தெரிந்தது.

ஹிட்லரும், முசோலினியும் கூட தேசியம், சோஷலிஸம் எனக் கூறித்தானே சா்வாதிகார பாசிஸப்படியில் ஏறினா் என்பதை பிடல் நினைவு கூா்ந்தாா்.

கரைக்குவந்து சோ்ந்தவுடன் அருகாமையிலிருந்த பிடலின் பிறந்த


**தருவது**
**எம். கேஷிகன்**

ஊரான பிரான் நகரத்துக்கு வந்தாா். கடலில் நீண்ட தூரம் நீந்தியதால் மிகவும் உடல் நலம் பாதிக்கப்பட்டவராக வீடு வந்து சோ்ந்தவா் அடுத்த நாளே ஹவானாவுக்குச் சென்றாா். டொமினிக்கன் குடியரசை வீடுவிக்கப் "புரட்சிப் படை" என முழங்கியவா்களின் அந்தரங்கங்கள் அம்பலத்துக்கு வந்து கொண்டிருந்தது. மக்கள் இந்தச் செய்திகளைக் கேட்டு ஆச்சரியப்பட்டாா்கள். கியூபாவின் காவல் துறை அதிகாரியாக இருந்த கலாபாரியாவைக் கடத்தல் குற்றத்திற்காக அரசு கைது செய்தது. கலாபாரியாவின் காலணிக்குள் அமெரிக்க டொலா்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது. இதே குற்றச்சாட்டில் உடந்தையாக இருந்தாா் என்பதற்காகக் கல்வி அமைச்சராக இருந்த அலெனும் கைது செய்யப்பட்டிருந்தாா். இந்தக் கைதுகளை அறிந்த பிடல் இவா்களுடன் தொடா்பு பட்டிருந்ததற்காக வெட்கப்பட்டாா். அவா்கள் மீது கோபமாகவும் வந்தது.

இந்தக் காலகட்டத்தில் பத்திரிகைகள் பல திடுக்கிடும் தகவல்களைச் சம்பவங்களின் தொடா்ச்சியாக வெளியிட்டன. இதில் முக்கியமாக 1944 முதல் 1948 வரையான கிராவின் ஆட்சிக்காலத்தில் சுமாா் 64 அரசியல் படுகொலைகள் நடத்தப்பட்டிருந்ததும், மேலும் 100 பேரைப் படுகொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தோற்றுப்போனதும் முக்கிய செய்தியாகப் பரவியது.

இதைத்தொடா்ந்து மக்களின் கருத்துக்கள் கிராவின் ஆட்சி மீது கொண்டிருந்த அதிருப்தியை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது. கல்வி அமைச்சா் அலென் உடனடியாகப் பதவி விலக்கப்பட வேண்டும், கிராவின் ஆட்சியும் அகற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கிளா்ச்சிகள் தொடங்கின.

ஹவானா சென்று மாணவா்களைச் சந்தித்து நிலைமையை விளக்கிய பிடல், செப்டெம்பா் 30 ஆம் திகதி மச்சோடா ஆட்சியின் போது கொல்லப்பட்ட மாணவா்களின் நிகழ்ச்சியில், கிராவின் ஆட்சிபற்றியும், அவரது ஆட்சியைத் தூக்கி எறிய வேண்டும், இதற்காகக் காலம் கனிந்து விட்டதையே மக்களின் கிளா்ச்சிகள் எடுத்துக் காட்டுவதாகவும், இதற்கு மாணவா்கள் துணிந்து முன்



வரவேண்டும் என்றும் முழங்கினாா்.

டொமினிக்கன் குடியரசின் விடுதலையைக் காட்டிக் கொடுத்த துரோகிகள், நாளை கியூபாவையும் விற்றுவிடுவாா்கள். அந்நிய சக்தியிடமும் இந்த அடிமைத் துரோகிகளிடமும் மண்டியிட்டு வாழ்வதைவிட நாம் சாவது மேல் என ஆவேசமாகப் பேசினாா்.

பிடலின் இந்த உரை, மக்களின் மத்தியில் உண்மையான மாற்றத்துக்கு வழிவகுத்தது. இதற்கு வலுவூட்டுவது போல் கியூபாவின் பல இடங்களில் நடந்த கிளா்ச்சிகள் இருந்தன. பிடல் மிகவும் துணிச்சல் மிகுந்தவராகத் தெரிந்தாா். 1944 செப்டெம்பா் மாதம் தொடக்கம் ஹவானா நகரம் போா்க்களம் போல் பதற்றமாகவே இருந்தது. எந்த வேளையில் என்ன நடக்கும் என்ற ஒருவகை அச்சம் நிலவியது. நகரின் இந்தப் பரபரப்புக்குப் பல்கலைக்கழகம் மையப்பகுதியாக இருந்தது. மாணவா் தலைவரை சந்தித்துப் பேசிய பிடல், கல்வி அமைச்சரின் பதவி விலகலை வலியுறுத்தி ஆா்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்த வேண்டும் எனக்கேட்டாா். மாணவா்களும் அதற்கு இணங்கினாா்கள். மாணவா்கள் வீதியில் இறங்கி ஆா்ப்பாட்டம் செய்தனா்.

**(அடுத்துவம் தொடரும்)**

# உங்கள் காதலின் தன்மையை சரிபார்த்துக் கொள்ளுங்கள்

**ஏப்ரல் 14 முதல் மே 13 வரை பிறந்தவர்கள்:**

காதல் விஷயத்தில் மிகவும் சுறுசுறுப்பானவர்கள். தூது விடும் பழக்கம் இவர்களிடத்தில் கிடையவே கிடையாது. எல்லாம் நேரடிப் பாய்ச்சல்தான். தங்கள் இச்சைப்படி எதிர்ப் பாலினரை வளைப்பதற்காகப் பல்வேறு யுக்திகளைக் கையாளும் இவர்கள், அதற்காக பொய் சொல்லக்கூட தயங்கமாட்டார்கள். காதலில் ஒருவேளை தோல்வி ஏற்பட்டால் சட்டென்று இன்னொருவரைக் காதலிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

இந்தத் திகதிகளில் பிறந்த பெண்களுக்கு தன் கையே மேலோங்கி நிற்க வேண்டுமென்ற எண்ணமும் இருக்கும். தாம்பத்திய உறவில் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அவசரக்காரர்கள். ஆனால் அனுபவிக்கத் தெரிந்தவர்கள்.

**மே 14 முதல் ஜூன் 13 வரை பிறந்தவர்கள்:**

இயற்கையிலேயே இளமையும், வனப்பும் மிக்கவர்கள். உணர்ச்சிபூர்வமானவர்கள். காதல் கற்பனைகளில் சிறகடித்துப் பறக்காமல் பூமியில் கால் பதித்து நடப்பார்கள். அன்போடு பழகுவதில் இவர்களுக்கு ஆர்வமிருக்கும். தங்கள் மீது அன்பு செலுத்துவோரிடம் அதிகம் பரிவு காண்பிப்பார்கள்.


இந்தத் திகதியில் பிறந்த பெண்களுக்கு கூடிக்குலாவத் தெரிந்த கணவனைத்தான் பிடிக்குமே தவிர, வெறுமனே கொஞ்சிப் பேசும் கணவனைப் பிடிக்காது. ஆண்கள், மகிழ்ச்சிகரமான மணவாழ்க்கை நடத்துவதிலும், மனைவியைத் திருப்திப்படுத்துவதிலும் வல்லவராக இருப்பார்கள்.

**ஜூன் 14 முதல் ஜூலை 13 வரை பிறந்தவர்கள்:**

இவர்களுக்குக் காதல் என்பது மனதளவில்தான். செயலில் அத்தனை தீவிரம் காட்டமாட்டார்கள்.

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற எண்ணம் இவர்களிடம் உண்டு. எனவே எதையும் நளினமாக ரசித்து அனுபவிக்கவே விரும்புவார்கள்.

தாம்பத்திய உறவைப் பொறுத்தவரை உள்ளத்திற்காக ஒருவகையாகவும், உடலுக்காக ஒரு முறையாகவும், உலகத்திற்காக ஒரு வழியாகவும்



வகுத்துக் கொண்டு இன்பம் அனுபவிப்பார்கள்.

இந்த மாதத்தில் பிறந்த பெண்களின் உண்மையான உணர்ச்சிகளைப் புரிந்து கொள்வது ஆண்களுக்குக் கடினமாகத் தோன்றும். ஆண்கள் கல்யாணத்திற்கு முன்பு எப்படிப்பட்டவராக இருந்தாலும் கணவரான பின்பு சபலபுத்தி குறைந்து குடும்ப வாழ்வே முக்கியமாகிவிடும்.

**ஜூலை 14 முதல் ஜூலை 13 வரை பிறந்தவர்கள்:**

ஆழ்ந்த அன்புணர்ச்சியும், காதல் உணர்வும் இல்லாத வாழ்க்கையை இவர்கள் விரும்பவே மாட்டார்கள். முக்கியமாக தன் உள்ளுணர்வின் ஆழ்ந்த கருத்துக்களையோ, அடிப்படை நோக்குகளையோ பிரதிபலிக்கக் கூடியவரையே விரும்புவார்கள்.

இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் தன் கணவனை எப்போதும் கைப்பிடிக்குள்ளேயே வைத்திருக்க விரும்புவார்கள்.

ஆணாக இருந்தால் தன்னில் இலயிப்பும், தன்னைப் பற்றியே அதிக அக்கறையும் கொண்டிருப்பார்கள். தாம்பத்திய உறவைப் பொறுத்தவரை அதன் உச்சத்தை அடையும் வரை இவர்கள் ஓயவே மாட்டார்கள்.

**ஆகஸ்ட் 14 முதல் செப்டெம்பர் 13 வரை பிறந்தவர்கள்:**

அறிவிற் சிறந்த இவர்கள் காதலில் மட்டும் பகுத்தறிவுக்கு இடந்தராமல் உணர்ச்சி வேகத்திலேயே ஈடுபடுவார்கள். பண்டம் மாற்றிக் கொள்வதைப் போலக் காதலை மாற்றிக் கொள்ளமாட்டார்கள்.

தாம்பத்திய உறவைப் பொறுத்தவரை இவர்கள் நினைப்பில் காமவுணர்ச்சி எழுந்தவுடனேயே அதற்குரிய வடிகாலைத் தேடிக்கொள்ள முனைந்து விடுவார்கள்.

இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் தம் எண்ணப்படியும் தீர்மானத்தின்படியுமே எல்லோரையும் ஆட்டிப்படைத்து அதிகாரம் செய்வார்கள். ஆண்கள், குடும்ப நிர்வாகத்தின் பொறுப்புக்களை ஏற்கப் பொருத்தமானவராகவும், குடும்பத்தில் பற்றுடையவராகவும் விளங்குவர்.

**செப்டெம்பர் 14 முதல் அக்டோபர் 13 வரை பிறந்தவர்கள்:**

இவர்களுடைய காதல் மென்மையாக இருக்கும். அதிக உணர்ச்சி வசப்பட்டால் உலகமே இருண்டதுபோல தோன்றும். பகலிலும் கதவுகளை அடைத்துக்கொண்டு காதலைப்பற்றிக் கனவு காண்பார்கள்.

ஆனால், நடைமுறையில் மிகமிக மெதுவானவர்கள். மற்றவர்களைவிட முன்யோசனையோடும் பகுத்தறிவோடும் நுட்பமான உணர்ச்சிகளோடும் நடந்து கொள்வர். இவர்களைப் பொறுத்தவரை தாம்பத்திய வாழ்க்கையே ஒருவித்தை. தாம்பத்திய உறவே ஒரு கலை. தாம்பத்தியமே ஒரு கணக்கு.

இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் கவனிப்பில் உள்ள வீட்டுப் பொருட்கள் வீணடிக்கப்படுவதோ, அலட்சியமாக உதாசீனப்படுவதோ இராது. ஆண்கள் தங்கள் வாழ்க்கைத் துணைவியை, குடும்ப வாழ்க்கையில் தன்னோடு பங்குபெறும் பங்காளியாகவே பாவிப்பார்.

**அக்டோபர் 14 முதல் நவம்பர் 13 வரை பிறந்தவர்கள்:**

இவர்களது காதலில் ருசிகரமான அனுபவங்கள் அனைத்தும் உண்டாகும். அதாவது காதலில் இன்பத்தை மட்டுமன்றி காரசாரம், கசப்பு முதலான சுவைகளையும் கூட ரசித்து அனுபவிப்பார்கள். அமைதியான, ஆனந்தமான சூழ்நிலை இவர்களுக்கு ஏற்படும்போதெல்லாம் யாருடனாவது சேர்ந்து பழகுவதையும் ஜாலியாகப் பேசிக் கொண்டிருப்பதையும் விரும்புவார்கள்.

இந்த மாதத்தில் பிறந்த ஆண்கள் காதல் துறையில் அசகாய சூரர்களாக இருப்பர். பெண்கள், மற்றவரது தேவையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நடந்துகொள்வர்.

**நவம்பர் 14 முதல் டிசம்பர் 13 வரை பிறந்தவர்கள்:**

இவர்கள் தாதல் விஷயத்தில் ஆவேசம் உடையவர்கள். கல்யாணமான பிறகும்கூட காதலிக்கும் நபர்களாக இருப்பார்கள். ஒருவனுக்கு ஒருத்தி என்பது இவர்களுக்கே பொருத்தமுடையதாக இருக்கும். மோக வேட்கையை ஆன்மீகத் தேடலாக மாற்றிவிடுவார்கள்.

இந்த மாதத்தில் பிறந்த பெண், தம் கணவரையும், வீட்டையும், குடும்பத்தையும் கவனிப்பதில் மிகவும் அக்கறை எடுத்துக்கொள்வாள். ஆண்களாக இருந்தால் மற்றவர்களிடம் உள்ள திறமைகளைவிடக் குறைகளே இவர்களது கண்களுக்குத் தெரியும்.

**டிசம்பர் 14 முதல் ஜனவரி 13 வரை பிறந்தவர்கள்:**

இவர்கள் காதல் விஷயத்தில் ஒன்று, அக்கறையே இல்லாமல் இருப்பார்கள். அல்லது ஆவேசப்பட்டுவிடுவார்கள். பெரும்பாலும் இவர்கள் காதலிப்பதும், காதலுக்கு இடம் கொடுப்பதும் அபூர்வம். இவர்கள் திருமணம் செய்துகொள்வதற்காகவே காதலிப்பார்கள். இவர்களுக்குக் காதலில் ஆசையைவிட காமத்தின் வேகமே அதிகமாக இருக்கும். உள்ளுணர்வை உடலுணர்வு மிஞ்சிவிடும்.

இந்த மாதத்தில் பிறந்த ஆண்கள் திறமைசாலிகள். தன் நலத்தைவிட குடும்பநலனே முக்கியம் என்று நினைப்பார்கள். பெண்கள், கணவரின் பிரியத்திற்கு ஏற்பவே நடந்து கொள்வர்.

**ஜனவரி 14 முதல் பெப்ரவரி 13 வரை பிறந்தவர்கள்:**

இவர்களின் காதல் ஆழமானது. காதலித்துத் திருமணம் செய்துகொள்வதைவிட, திருமணம் செய்தபிறகு காதலிப்பதையே விரும்புவார்கள். காதலிக்க ஆரம்பித்துவிட்டால் இரவு பகல் பாராமல் காதலிப்பார்கள். தாம்பத்திய உறவைப் பொறுத்தவரை இவர்களுக்கு எந்த நேரத்திலும் உடல் உணர்ச்சிகள் உந்திக் கொண்டிருக்கும்.

இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் காதல் விஷயத்தில் எச்சரிக்கையாகவே இருப்பார்கள். ஆண்கள், காதலிக்கும்போது அந்தரங்க உறவின் இன்பத்தை வற்புறுத்திப் பெறமுயல்வதும் உண்டு.

**பெப்ரவரி 13 முதல் மார்ச் 14 வரை பிறந்தவர்கள்:**

இவர்களது காதல் உள்ளத்தில் நிறைவுபெற்ற பிறகுதான் உடலுணர்வுகளாக வெளிப்படும். உள்ள நிறைவோடு காதல் ஏற்பட்டுவிட்டால், எந்தக் கட்டுப்பாட்டையும் இவர்கள் மீறிவிடுவார்கள். இவர்களது காதல் பெரும்பாலும் முதலில் நட்பில்தான் தொடங்கும்.

தாம்பத்திய உறவைப் பொறுத்தவரை சமுதாயத்தின் ஒழுக்க விதிகளுக்குக் கட்டுபட்டே இவர்களது உறவு இருக்கும்.

இந்த மாதத்தில் பிறந்த பெண் தன் விஷயத்தில் யாரும் தலையிடக்கூடாது என்று விரும்புவாள். ஆண்கள் தங்களுக்குச் சமமாக தோழமை உணர்ச்சியுடையவர்களையே அதிகம் விரும்புவார்கள்.

**மார்ச் 14 முதல் ஏப்ரல் 13 வரை பிறந்தவர்கள்:**

இவர்கள் பெரும்பாலும் கண்வீச்சினால் கவர்ந்திழுப்பார்கள். அல்லது கண் வீச்சினால் கவரப்படுவார்கள். காதல் அனுபவத்தைவிடக் காதலைப்பற்றி அதிகம் கனவு காணும் இவர்களது தாம்பத்தியம் உணர்ச்சிவசப்பட்டதாக இருக்கும்.

இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் தன் கணவருக்கு ஆத்மார்த்த துணைவியாக விளங்க ஆசைப்படுவார்கள். ஆண்கள் தமது மனைவியை அன்போடு நேசிப்பவராகவும், மனைவிக்குரிய அந்தஸ்தையும் மதிப்பையும் தருபவராகவும் இருப்பர்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 9, கூட்டெண் - 1

9, 18, 27 போன்ற திகதிகளில் பிறந்து, இவர்களது பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வருமேயானால், இவர்கள் செவ்வாய், சூரியன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர் புத்திக்கூர்மையுடனும், சுறுசுறுப்புடனும், நிர்வாகத் திறமையுடனும், பார்ப்பதற்குக் கவர்ச்சியாகவும் காட்சியளிப்பர்.

எப்பொழுதும் தூய்மையான ஆடையை அணிந்து முகச் செழிப்புடன் இருப்பர். தைரியமாக எதையும் செய்யத் துணியும் இவர்கள், சில நேரங்களில் சிந்திக்காது சில காரியங்களைச் செய்து, பின் வருந்துவர். பெண்களாக இருந்தால் ஆண்களாலும், ஆண்களாக இருந்தால் பெண்களாலும் பொருளாதார முன்னேற்றத்தை அடைகின்றனர்.

ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால், பெண்களால் மனவேதனை அடைவர். தைரியமாகச் செயற்படும் இவர்களுக்கு ஆரம்ப வாழ்க்கை போராட்டமாக இருந்தாலும், பின் வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பர். பல்வேறு சோதனைகளைச் சந்தித்து வந்ததால் அனுபவமிக்க மனிதனாக வாழ்கின்றனர். கல்வியில் தடை ஏற்பட்ட போதிலும் வாழ்க்கையை வெற்றிகரமாக அமைத்துக் கொள்வர்.

இளமையில் துணிகரமாகத் தன்மனதில் உதித்ததை எல்லாம் செய்துவிடுவர். இவர்கள் மனம் நீர்வீழ்ச்சி, மலைப்பிரதேசங்கள், நீர்த்தேக்கங்கள், கடற்கரை ஓரம் போன்றவைகளைக் கண்டு அமைதி கொள்ளும். எப்பொழுதும் சுதந்திரமாக வாழ ஆசைப்படும் இவர்கள் பிறர் கட்டுப்பாட்டின் கீழ் வாழ மாட்டார்கள். அரசியலில் ஈடுபாடும், இலக்கிய ஈடுபாடும் கொண்ட இவர்கள், தனது கருத்துக்களைப் பேசும் பொழுது காரசாரமாகப் பேசுவர்.

இன்னும் சிலர் அரசியலில் நல்ல நிலையை அடைகின்றனர். இவர்களுக்கு நண்பர்கள் அதிகம் இருப்பதால் செலவும் அதிகம். அதே நேரங்களில் செலவு இல்லாமலே ஒரு காரியத்தைச் செயற்படுத்தவும் முடியும். தன் பிறந்த திகதிக்குப் பொருத்தமான எண்ணில் பெயர் அமைந்துவிட்டால் நல்ல மனைவி, நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தை, பெருஞ்செல்வம் ஆகியவற்றைப் பெற்று வாழ்கின்றனர். பெண்களால் வீண் குழப்பங்களும், கோர்ட் வழக்குகளும் வந்து மனவேதனை அடைவர். இதனால் பெயரைப் பொருத்தமான நல்ல எண்களில் அமைத்துக் கொள்ளவும்.

சட்டம், சமயம், ஜோதிடம், தத்துவம், மருத்துவம் போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும். எதிர்ப்புகள் வந்து விட்டால் தன்னைவிடப் பெரியவர்களாக இருந்தாலும், பலம் கூடியவராக இருந்தாலும், கடுமையாக எதிர்ப்பர். 'மனிதன் என்று பிறந்துவிட்டால் மாய்வதென்பது உண்மையடா' என்று கூறி எதிலும் துணிந்து செயற்படுவர். இதற்கு ஏற்றாற்போல் பெயரும் நன்றாக அமைந்துவிட்டால் நல்ல முன்னேற்றத்துடன் வாழ்வர்.

தன் மனத்திருப்திக்காகச் செலவு செய்யத் தயங்கமாட்டார். ஆனால் பணம் இல்லாதபோது, மனம் உடைந்து இருப்பர். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் பிறந்த ஊரைவிட்டுச் சற்றுத் தொலைவில் உள்ள ஊரை நாடி வாழ்க்கையில் உயர்வடைவர். நண்பர்களுக்குக் கஷ்டம் வருகின்றபோது முன்நின்று உதவி செய்வர். எப்பொழுதும் எதையாவது சிந்தனை செய்து கொண்டேயிருப்பர்.

இயற்கைக் காட்சிகளையும் நீர்வீழ்ச்சிகளையும், தொழிற் கூடங்களையும், கடற்கரை ஓரங்களையும் கண்டு மனம் அமைதி கொள்ளும். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் வக்கீல், டாக்டர், இஞ்சினியர், பெரிய தொழில் அதிபர்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்களாகவும் காணப்படுகின்றனர். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் மேற்குறிப்பிட்ட நல்ல பலன்கள் குறைந்து கஷ்டங்களையும் போட்டிகளையும் சந்திக்க நேரும். இதனால் பெயரைப் பொருத்தமான நல்ல எண்களில் மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம்.

**தொழில்**

இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் உத்தியோகம் செய்பவர்களாகவும், சிலர் தொழில் செய்பவர்களாகவும் இருக்கின்றனர். இவர்கள் செய்ய வேண்டிய தொழில் காண்ட்ராக்ட், ஏஜென்சீஸ், நெருப்பு சம்பந்தமான தொழில், மெட்டல் சம்பந்தமான தொழில், எழுத்து சம்பந்தமான தொழில், பேப்பர் சம்பந்தமான தொழில் போன்றவற்றால் பொருள் ஈட்டுவர்.

**நோய்**

அவர்களுக்கு உஷ்ண சம்பந்தமான நோய்களும், முதுகு வலி, கண்நோய், இரத்த அழுத்தம், இடுப்பு வலி, மூட்டுவலி, நரம்புத் தளர்ச்சி, சிறுநீரகக் கோளாறு போன்றவைகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

இவர்களுக்கு செவ்வாய், சூரியன், சுக்கிரன் போன்ற ஆதிக்கமான 27, 45, 19, 37, 46, 64; 15, 24, 33, 42, 51, 60, 69; 14, 23, 32, 41, 50, 59, 77 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண் - 9, 5, 1, 6.

யோகமான திகதிகள் - 5, 14, 23; 6, 15, 24; 9, 18, 27; 1, 10, 19, 28.

யோகமான மோதிரக்கல் - பவளம், மாணிக்கம், கனகபுஷ்பராகம், தங்கபுஷ்பராகம், நவரத்தினம்.

யோகமான நிறம் - வெளிர்நீலம், மஞ்சள், சிவப்பு.


ஆகாத திகதி - 2, 11, 20, 29, 7, 16, 25.

ஆகாத நிறம் - கறுப்பு, பச்சை.


வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

பண்டாரவளை அதிசிறந்த மலையாள மகா வசிய மாந்திரீகம்..

ஸ்ரீ மகா பத்திரகாளித் தாயின் அருளைப் பெற்றுள்ள



உங்களுடைய வெற்றி சுகம், சந்தோஷத்துக்கு சேவை செய்வேன் இன்றே அழையுங்கள். 057-2224591-92

ஷர்மா சுவாமிகள்

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அறிலிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுப்பட இருதடவை. யோசிக்காமல் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.

சந்திப்பு

பண்டாரவளையில்

திங்கள் முதல் சனிக்கிழமை வரை

காலை 8.00 மாலை 6.00

நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில் IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை

ஞாயிறு விடுமுறை கவனிக்கவும்.

வெளிநாட்டவருக்கு விசேட ஏற்பாடுகள்!
தொ. பே. +94-572232441
+94-773227005

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்

தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கடித உறையொன்றை அனுப்புங்கள்.

சகலவிதமான வசிய மாந்திரீகம்

- வீடு, வியாபார விருத்தி
- விவசாய விருத்தி
- நோய் நொடி சுகப்படுத்தல்
- விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர.
- தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
- குழந்தைப் பாக்கியம் கிட்ட
- விலைபோகாத காணிகள் விற்பனையாக
- எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
- ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
- மண் பரீட்சை செய்தல்
- பிராணிகளை அகற்றுதல்

சகல பரீட்சைகளுக்கு சக்திமிக்க எழுத்து மந்திரம்.

ஷர்மா சாமி அவர்கள்

P.O. Box 2, BANDARAWELA / பண்டாரவளை Regd. No. U/B 99/83
Tel. 077-3227005 057-2224591-92 078-5224681 Fax: 057-2232441
Website : sharmasami.com sribathrakaliamman_temple@yahoo.com

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...



> அன்னம் நறுநெய் பாலும்
> அதிசயமாத் தருவாய்!
> நின்னருளை வாழ்த்தி என்றும்
> நிலைத்திருப்பேன், திருவே!
> - சுப்பிரமணிய பாரதியார்


## ஆத்திசூடி

### தானமது விரும்பு

நீ ஆதரவற்ற மக்களுக்கு உன்னால் செய்யதக்க உதவிகளை விருப்பத்துடன் செய்து அவர்களது துன்பங்களைத் கடை. -ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

## புத்தி 'மான்'



**பொதுவாக** காடுகளில் விலங்கினங்கள் அதனதன் இனத்தோடு கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வரும். யானையைப் பார்த்தோமானால் அவைகள் எல்லாம் எங்கு சென்றாலும் கூட்டமாகவே செல்லும். அதைப் போல மான் கூட்டம். இப்படி எல்லா வனவிலங்குகளும் கூட்டம் கூட்டமாக வாழும்.

அந்தக் காட்டில் மான்கள் ஒரு கூட்டமாக வாழ்ந்து வந்தன. அந்த மான்கள் கூட்டத்தோடு அவற்றின் அருகிலேயே காட்டு நாய் கூட்டம் ஒன்றும் இருந்து வந்தது. இவைகள் எங்கு சென்றாலும் கூட்டம் கூட்டமாக சேர்ந்தே செல்லும். ஓரிடத்தில் தங்கினாலும் சேர்ந்தே செல்லும்.

இவ்வாறிருக்கையில் அங்கிருந்த நரி ஒன்று இந்த ஒற்றுமையைக் கண்டு மிகவும் கவலை அடைந்தது. மான்களோடு காட்டு நாய்கள் சேர்ந்தே இருப்பதால் மான் குட்டிகளைத் தனக்கு இரையாக்கிக் கொள்ள முடியவில்லையே என்று நரிக்கு வருத்தமேற்பட்டது. இதற்கு ஏதாவதொரு முடிவு கட்டியாக வேண்டும் என்று நரி திட்டம் போட்டது.

காட்டினுள்ளே அழகிய தடாகம் ஒன்று இருந்தது. அதில் அல்லி பூக்களும், குவளை மலர்களும் பூத்து அழகாய் இருந்தன. பல வகையான மீன்கள் துள்ளிக் குதித்து விளையாடிக் கொண்டிருக்கும். மீன்கள் இருப்பதால் அதன் நீர் எப்போதும் தெளிவாக இருக்கும்.

நீர், நிலையின் ஓரமாக நின்று மான் ஒன்று நீர் அருந்திக் கொண்டிருந்தது. சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த நரி அதன் பின்னே வந்தது. நரி தன் பின் வருவதை அறிந்த மான் மிரட்சியுடன் நரியைத் திரும்பிப் பார்த்தது.

அதைப் பார்த்த நரி என்ன மான் நண்பரே! சுகமா? என்றது.

### பாப்பா முரசு சிறுகதை

சுகம். என்ன விஷயம்? என்று சற்று கடுமையாக கேட்டது மான்.

உடனே நரி, என்ன நண்பரே! கோபமாக பேசுகிறீர். உம்மிடம் ஒரு நல்ல விஷயம் சொல்லி விட்டு போகலாம் என்று வந்தேன் என்றது பவ்வியமாக.

அப்படியா! என்ன நல்ல விஷயமோ?எகத்தாளமாக கேட்டது மான்.

நீங்களெல்லாம் எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள். ஆனால், நீங்களோ இந்த காட்டு நாய்களுடன் சேர்ந்து உலவுகின்றீர்கள். அவைகளோடு நீங்கள் சேரலாமா? அவைகள் பசி எடுத்தால் உங்கள் குட்டிகளை இரவு நேரத்தில் கவ்விக் கொண்டு கடித்து தின்று விடும். அதனால் தான் சொல்கிறேன். அவைகளோடு நீங்கள் சேர வேண்டாமென்று.

பசப்பு வார்த்தை பேசிய நரி, நான் வருகிறேன், நன்றாக யோசித்து முடிவு எடுங்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றது.

நரி சொன்னதைக் கேட்ட மான் குழப்பமடைந்தது. மர நிழலில் படுத்திருந்த மான் சற்று கவலையுடன் இருப்பதைப் பார்த்த மற்ற மான்கள், அதன் அருகே சென்று ஏன் இவ்வாறு சோகமாய் இருக்கிறாய் என்று கேட்டன.

அந்த மான், நரி அதனிடம் சொன்ன எல்லா விவரங்களையும் கூறியது. அது சொன்னதைக் கேட்ட மற்ற மான்களும் யோசிக்கத் தொடங்கின.

சிறிது நேர யோசனைக்குப் பின் கூட்டத்திலிருந்த ஒரு மான் வந்து, நண்பர்களே! உங்கள் பயம் தேவையில்லாதது. நரி தந்திர குணமுள்ளது. நம்மிடமிருந்து காட்டு நாய்களைப் பிரித்துவிட்டால் அது எளிதாக நம்மைக் கொன்று சாப்பிடலாம் என திட்டமிட்டே இப்படியொரு சதித் திட்டத்தைச் சொல்லியுள்ளது. எனவே நரியின் பேச்சை நாம் பெரிசுபடுத்த வேண்டாம். எப்பொழுதும் போல் நாமும், காட்டு நாய்களும் ஒற்றுமையாக இருப்போம் என்றது.


உடனே இன்னொரு மான், நாய்கள் நன்றியுள்ளவை. அது மட்டுமல்ல, அவைகள் நமக்கு காவலாகவும் உள்ளன என்றது.

அதுசமயம் அந்தப்பக்கம் வந்த காட்டு நாய்களில் ஒன்று நண்பர்களே! நன்றாகச் சொன்னீர்கள். நீங்கள் புத்தியுள்ள மான்கள். அதனால்தான் எல்லோரையும் புத்திமான், பல மான் என்கிறார்கள் என்று சொல்லியது.

இதுவரை எல்லாவற்றையும் புதர் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த நரி ஆளைவிட்டால் போதுமென்று நைசாக நழுவியது.

## வண்ணத்துப் பூச்சி - உலக அழகியே!

**பூமியில்** இந்த வண்ணத்துப்பூச்சி தோன்றி ஏறக்குறைய 65 முதல் 135 மில்லியன் ஆண்டுகள் ஆச்சுன்னு சொல்றாங்க. 25 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த மெட்டல் பட்டர்பிளையோட படிமத்தைக் கண்டுபிடிச்சிருக்காங்க.



வண்ணத்துப் பூச்சிங்கிற அழகு தேவதை உலகிலுள்ள எல்லா நாடுகளிலேயேயும் பரவி இருக்கு. ஆனா, ரொம்ப குளிரான பகுதிகளில் மட்டும் வண்ணத்துப் பூச்சிகள் கிடையாது. ஒண்ணு கேட்குறீங்களா? வண்ணத்துப் பூச்சிக்கு நீ அழகின்னு யாரும் ஐஸ் வச்சா பிடிக்காது. இந்த அழகுப் பூச்சியை பார்ப்பதையே ஒரு பொழுதுபோக்கா மக்கள் வச்சிருக்காங்க.

வண்ணத்துப்பூச்சிகளில் சுமார் 15,000 முதல் 20 ஆயிரம் வகைகள் உள்ளன. எல்லா வகைகளையும் ஒரே நேரத்தில் பார்க்க முடியுமா?...நிச்சயமா இதைப் படிக்கிற எல்லார் கனவிலேயும் இன்னைக்கு வண்ணத்துப் பூச்சிகள் பறக்கப்போவுது.


நம்ம வீட்டுத் தோட்டத்தையும் நம்ம ஊருக்குள்ளேயும் பறக்கிற வண்ணத்துப் பூச்சி, எத்தனை கிலோ மீட்டர் பறக்க முடியும்ன்னு நினைக்கிறீங்க? சும்மா, கெஸ் பண்ணி சொல்லுங்க பார்ப்போம்.

ஒரு நூறு கிலோமீட்டர், இருநூறு கிலோமீட்டர்...? என்னங்க இவ்வளவு கஞ்சத்தனமா சொல்றீங்க. இன்னும் கொஞ்சம் அதிகமாகச் சொல்லுங்க பார்ப்போம். ஆயிரத்து 600 கிலோ மீட்டர்...போதுங்களா சாமிகளா!

மோனார்க் வண்ணத்துப் பூச்சிகள் 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் கிலோமீட்டர் வரை பறந்து போகுது. எங்கேன்னு கேட்கிறீங்களா?...மெக்ஸிகோ முதல் வட அமெரிக்கா வரை. நாம வழக்கமாகத் தட்ப வெப்ப சூழலுக்கு ஏற்ப பறவைகள் பறந்து வருவதைக் கேள்விப்பட்டிருப்போம். சின்ன வண்ணத்துப் பூச்சிகள் பாருங்கள் எவ்வளவு கி.மீ பறந்து போகுது?...

வண்ணத்துப் பூச்சிகள் முட்டைகளை இலைகளில் போடுது. அந்த முட்டைகள் இலைகளோடு ஒட்டியிருக்கிற மாதிரி அதோட பசையும் சேர்ந்து இருக்கு. முட்டை, லார்வா கூட்டுப்புழு, என்கிற மூன்று நிலைகளைக் கடந்த பின்னாடி வருதுன்றது லேசான விஷயம் கிடையாது. நம் கண்ணையும் கருத்தையும் கவர்கிற வகையில் சிறகடிக்கிற வண்ணத்துப்பூச்சி, வளர்வதற்கே எவ்வளவு சிரமம் இருக்கு? அப்ப நம்ம வாழ்க்கையை என்னன்னு சொல்றது?

விண்ணை வண்ணங்களால் அளக்கிற வண்ணத்துப்பூச்சிக்கு நான்கு இறகுகள் உண்டு. அந்த இறகுகளில் தான் நம் இதயங்களைக் கவர்கின்ற வண்ணங்கள் ஒட்டிக் கொண்டிருக்கின்றன.



வண்ணத்துப்பூச்சி பறந்து வந்து, மலர் மீது வந்து அமர்ந்து தேன் உறிஞ்சும் காட்சி அழகோ அழகுதான். வண்ணத்துப்பூச்சியின் ஆயுட்காலம் ஒரு வாரம் முதல் ஒரு வருஷம் வரைதான். கொஞ்ச நாட்கள் வாழ்க்கை வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை எவ்வளவு அழகா இருக்கு?...நம்ம லைப் எப்படி இருக்கணும்?...

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 27.02.2007

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 683**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 681

**பரிசுக்குரியவர்:**
**டி.ஆர்.ஜெனிங்ஸ் டிவீன்ஸ்ரன்**
**82, புதுச் செட்டித்தெரு கொழும்பு -13**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ரா.திவ்யா<br>175, லோவர் வீதி, பதுளை. | கே. பிரசாந்தி<br>89, பாபாதி இல்லம், ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகாலை. |
| சா. அப்துல் காமின், பிரதான வீதி, பதுளை | பஸ்மினா<br>கிங்ஸ்ரன் கல்லூரி, முகத்துவாரம். |
| எஸ்.விக்னேஸ்வரி<br>22, புதுச்செட்டித்தெரு, கொழும்பு -13 | எவ்.அக்ஷா இல. 99, டி.எஸ்.பொன்சேகா மாவத்த, கொழும்பு - 05 |
| எம்.ஜனார்த்திகா<br>இல.31, ரொஜிட்டா பஜார், கொட்டகலை. | என். தயாளன், 135/88, தர்மராம புரம், பாமன்கடை, கொழும்பு - 6. |
| ச.லக்ஷகா<br>இல. 28, காளி கோவில் வீதி, குருமன்றகாடு | து.யதுஷா<br>வவுனியா மத்தி, வவுனியா. |


## சில விடுகதைகள்

1. காவலுக்கு வேண்டியவன் ஆனால் ஆளிருக்கும் போது அவன் அவசியப்படமாட்டான் அவன் யார்?
2. காலை அலங்கரித்தபடி கலகலக்கும் சலசலக்கும் அது என்ன?
3. நகராமல் இருப்பவன் காற்றுக்கு மட்டும் தலைவிரித்து ஆடினான் அவன் யார்?
4. இவன் இருக்கும் இடத்தில் யாரையுமே இருக்க விடமாட்டான் அவன் யார்?
5. மணியோசைக்கு நகரமே நகர்ந்து போகுது அது என்ன?
6. அங்கும் இங்கும் ஓடி ஆட்டக் கணக்கு சொல்வான் அவன் யார்?
7. வாழ்க்கைத் தத்துவம் சொல்லும் இந்த விளையாட்டில் மேலிருப்பவன் கீழே வருவான் கீழிருப்பவன் மேலே போவான் அவன் யார்?
8. தண்ணீக்குள் வீரியம் தரையிலோ பூஜ்யம் அவன் யார்?
9. கறுப்பர் கூட்டத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாய் வெள்ளையர் படை அது என்ன?
10. குட்டைத் தண்ணீரில் எட்டுக்கப்பல் அலுங்காமல் குலுங்காமல் பயணம் போகுது அது என்ன?

**விடைகள்**
1. பூட்டு - சாவி
2. கொலுசு
3. மரம்
4. ஓட்டை
5 ரெயில்
6. விளையாட்டுப் பந்து
7. ராட்டினம்
8. முதலை
9. தலையில் நரைமுடி
10. தவளை.





## சூரிய சக்தி





**நள்ளிரவுச்** சூரியன் என்றழைக்கப்படும் சூரிய சக்தியில் இயங்கும் காரை 'வோட்டர் லூ' பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழுவினர், மிக நீண்ட தூரம் சூரிய சக்தி மின்சக்தியில் இயங்கும் வாகனத்தில் பயணம் செய்தவர்கள் என்ற சாதனையை நிலை நாட்டியுள்ளனர். கனடாவின் ஒன்றாரியோ மாநிலத்திலுள்ள 'வோட்டர் லூ' பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழுவினர் கனடா 'வோட்டர் லூ' பல்கலைக் கழகத்திலிருந்து புறப்பட்டு அமெரிக்காவுக்கு ஊடாகப் பயணித்து மீண்டும் கனடாவை வந்தடைந்தனர். 9364 மைல்கள் (15070 km) பயணித்தனர். 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ஆம் திகதி வோட்டர் லூ பல்கலைக்கழகத்திலிருந்து புறப்பட்டு அதே வருடம் செப்டெம்பர் 15 ஆம் திகதி கனடாவின் ஒட்டாவா மாநிலத்திலுள்ள பார்ளிமென்ட் ஹில் பகுதியை வந்தடைந்தனர். முன்னைய சாதனையை விட இரட்டிப்பு மடங்கு தூரம் பயணம் செய்து இந்தப் புதிய சாதனை ஏற்படுத்தப்பட்டது.

## கொலைகாரன்



**புல்டொக்** என்பது அவுஸ்திரேலியாவில் வாழும் ஒருவகை எறும்பின் பெயர். இதைக் கொலைகார எறும்பு என்று கூட அழைக்கலாம். அந்த அளவுக்கு இந்த இன எறும்புகள் மிகப் பயங்கரமானவை. இந்த எறும்புகள் கடித்தால் மனிதன் ஒருவன் 15 நிமிடங்களுக்குள் மரணித்துவிடுவான். 1936 ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டுவரையிலான 52 வருட காலப்பகுதியில் இந்தப் பயங்கர எறும்பு கடித்து மூன்றே மூன்று பேர்தான் இறந்துள்ளனர் என்று கூறுகின்றது உலக சாதனைப் புத்தகமான கின்னஸ். 1988 ஆம் ஆண்டு இந்தவகை எறும்பு கடித்து விவசாயி ஒருவர் மரணமானார் என்று கூறப்படுகின்றது.

## முட்டாள்கள்



**உளவு** பார்க்கும் ஆளில்லாத விமானங்கள் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பிரிட்டிஷ் காலாற்படையினர் தரையில் ஆளில்லாமல் இயங்கக்கூடிய யுத்த வாகனமொன்றினைத் தயாரித்துள்ளனர். இந்த நவீன தொழிநுட்பம் கொண்ட ஆளில்லாமல் இயங்கும் யுத்த வாகனம் அண்மையில் பிரிட்டனிலுள்ள சலிஸ்பரி சமவெளியில் ஒத்திகை பார்க்கப்பட்டது. எதிர்காலத்தில் பிரிட்டிஷ் காலாற்படை அதிக தொழிநுட்பங்களுடன் கூடிய யுத்தக் கருவிகளைக் கண்டு பிடிக்க இந்த ஆளில்லா யுத்த வாகனம் நகரப் பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட தொழிநுட்பத்தில் புதிய சாதனை என்று கருதப்படுகின்றது.


இந்த ஆளில்லா தன்னியக்க யுத்த வாகனத்தில் நாலா திசையையும் நோக்கித் தானாகச் சுடக்கூடிய இயந்திரத்துப்பாக்கி பொருத்தப்பட்டிருக்கின்றது. நகரப்பகுதிக் கட்டங்களுக்குள் ஆபத்தான ஆயுதங்கள் குண்டுகள் இருக்கின்றனவா என்று கண்டு பிடிப்பதற்கான உணர் கருவிகளை இந்தக் கவச வாகனம் சுயமாகவே கட்டடங்களுக்குள் வீசக்கூடிய திறனுள்ளது. குறித்த தகவல்கள் அருகேயுள்ள படை வீரர்களுக்குக் கிடைத்ததும் அவர்கள் தேவையான நடவடிக்கைகளை எடுக்கமுடியும். ஆயுதங்கள் உட்பட ஆயுதங்களைக் கொண்டுள்ள யுத்த களத்திற்குத் தேவையான மனித இயந்திரங்களும் கணனியின் மௌஸ் தானாவவே இயங்கி கட்டடங்களைத் தகர்த்து படையினரும் முன்னேறிச் செல்ல வாய்ப்பளிக்கும் தொழிநுட்ப வசதியும் இதில் உண்டு. உயரமான கட்டடங்களுக்குள் படைவீரர்கள் நுழைவதற்கு வசதியான மென்ரக ஏணிகளும் இந்த ஆளில்லா கவச வாகனத்தில் இருக்கின்றன.

**பிரிட்டனிலிலுள்ள** கும்பிரியாவென்ற பகுதியில் 'கிராமத்து முட்டாள்கள்' ஒன்றுசேர்ந்து அசாதாரணமான போட்டியொன்றினை வருடா வருடம் நடத்தி வருகின்றார்கள். நாயைப் போன்று உறுமுவதுதான் அந்தப் போட்டி. நல்ல காலம் நாயைப் போலக் குரைக்கச் சொல்லவில்லை இந்த முட்டாள்கள். வருடா வருடம் நடத்தப்படும் எக்ரமொன்ற் கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தையின் போதே, இந்த உறுமல் போட்டியும் நடத்தப்படுகின்றது. இப்படி உறுமி உறுமியே பத்துத் தடவைகள் உலக சாம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றிருக்கிறார் கோர்டன் மற்றின்சன் என்ற பிரித்தானியர். 1967 இலிருந்து 1972 வரையும் 1974 இலிருந்து 1977 வரையும் இந்தச் சாதனையைப் புரிந்திருக்கிறார். சுங்கான் புகைக்கும் போட்டியையும் இந்தக் கண்காட்சியில் நடத்துகின்றார்கள் இந்தக் கிராமத்து முட்டாள்கள்.

## தானியங்கி



## நீளம்



**சுமார்** 24 வருடங்களாகக் கைவிரல் நகங்களைக் கண்ணைப் போலப் பேணி வளர்த்துச் சாதனை படைத்திருக்கிறார் அமெரிக்காவைச் சேர்ந்த லீ ரெட்மொண்ட் என்ற பெண்மணி. அம்மணிக்கு ஏன் நகங்களில் அவ்வளவு ஆசையென்று கேட்டுவிடாதீர்கள். நாளாந்தம் ஒலிவ் எண்ணெய்யும், நகங்களைத் தடிப்பாக்கும் பொருட்களையும் பூசி, நகங்களை 24 அடி 7 அங்குலத்துக்கு வளர்த்திருக்கிறார். அதாவது பத்து நகங்களின் மொத்த அளவு அதுதான். இவரின் நகங்களைக் காசு கொடுத்துக் கொள்வனவு செய்ய ஒருவர் முன்வந்தார். ஆனாலும் அம்மணி மறுத்துவிட்டார். குளியலறை, கழிப்பறைக்கெல்லாம் எப்படிப் போய்வருவீர்கள் என்று கேட்டபோது, 'மிகக் கவனமாக' என்று பதிலளித்தார் லீ.

## சினிவி

முகப்பில் :


ஜீவா - பூஜா
பொறி



# நயன்தாராவின் தற்கொலை முயற்சி!

**நடிகை** நயன்தாரா தற்கொலை செய்து கொண்டதாக செல்போன் எஸ்.எம்.எஸ்.மூலம் தமிழ்நாடு முழுவதும் சிலர் வதந்தியை பரப்பினார்கள். இந்த வதந்தி கேரளா, ஆந்திரா மாநிலங்களுக்கும் பரவியது. இதனால் நயன்தாராவின் ரசிகர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.

திரையுலகில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில் நடிகை நயன்தாரா திருவனந்தபுரத்தில் நிருபர்களிடம் கூறியதாவது :-

நான் தற்போது தெலுங்கில் 'துளசி' என்ற படத்தில் நடிகர் வெங்கடேசனுக்குச் ஜோடியாக நடித்து வருகிறேன். கடந்த வாரம் படப்பிடிப்பின் போது வெங்கடேஷின் மூட்டில் காயம் ஏற்பட்டது. இதனால் ஒரு வாரம் படப்பிடிப்பு ரத்து செய்யப்பட்டது.

இதனால் நான் எனது சொந்த ஊருக்கு வந்து விட்டேன். எனது பெற்றோர் மற்றும் சகோதரருடன் பல்வேறு இடங்களுக்குச் சென்று வந்தேன். ரொம்ப நாளைக்குப் பிறகு நல்ல உணவை சாப்பிட்ட திருப்தி இருந்தது.

எனக்காக எனது சகோதரர் துபாயில் இருந்து கேரளா வந்தார். குடும்பத்தினருடன் அமர்ந்து மனம் விட்டு பேசியதால் கவலை மறந்து புத்துணர்ச்சியுடன் இருக்கிறேன். இனி தெலுங்கு படப்பிடிப்பில் கலந்து கொள்ள இருக்கிறேன்.

கடந்த சில நாட்களாக என்னைப் பற்றி சிலர் தவறான வதந்திகளைப் பரப்பி வருகிறார்கள். இது பற்றி நான் ஒரு போதும் கவலைப்பட மாட்டேன். எனக்குத் தமிழ் ரசிகர்களிடம் உள்ள நல்ல இமேஜை கெடுக்க, எனக்கு வேண்டாதவர்கள் செய்யும் இந்த சதி வெற்றி பெறாது.

என்னைப் பற்றி வெளிவரும் வதந்திகளுக்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை. தற்போது எனது முழுக் கவனமும் 'துளசி' படத்தில் தான் இருக்கிறது.

அதில் நன்றாக நடித்து நல்ல பெயரை சம்பாதிக்க விரும்புகிறேன்.

இவ்வாறு நயன்தாரா கூறினார்.

# ரீமாசென்னுடன் மோதல் இல்லை - ஜெயம்ரவி!

**ஜெயம்** ரவி 'தாம் தூம்' என்ற படத்தில் நடிக்கிறார். இதில் ரீமாசென் ஜோடியாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்நிலையில் திடீரென்று அப்படத்தில் இருந்து ரீமா சென் விலகி விட்டார்.

படத்தில் முக்கியத்துவம் குறைக்கப்பட்டதாலும் டூயட் பாடல் காட்சி ஒதுக்காததாலும் கோபத்தில் விலகியதாகக் கூறப்பட்டது. ஜெயம் ரவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகவும் செய்தி வெளியானது.

இது பற்றி ஜெயம்ரவியிடம் கேட்டபோது மறுத்தார். அவர் கூறியதாவது :-

ரீமாசென் தவிர்க்க முடியாத காரணத்தால் 'தாம் தூம்' படத்தில் நடிக்கவில்லை. அந்தப் படத்தில் நடிக்க முடியவில்லையே என்ற வருத்தம் அவருக்கு உள்ளது. அந்த வருத்தத்தை அவர் வெளிப்படுத்தினார்.

எதிர்காலத்தில் நாங்கள் இருவரும் நிச்சயம் சேர்ந்து நடிப்போம் எங்களுக்குள் எந்த பிரச்சினையும் இல்லை.

'தாம் தூம்' ஹாலிவுட் படம் மாதிரி இருக்கும். மருத்துவக் கல்லூரி மாணவனாக இதில் நடிக்கிறேன். மேல்படிப்பு படிப்பதற்காக ரஷ்யா செல்கிறேன். அங்கு ஒரு பிரச்சினை ஏற்படுகிறது. அதிலிருந்து எப்படி மீள்கிறேன் என்பதுதான் கதை என்றார் ஜெயம்ரவி.


பரத் - சந்தியா
கூடல் நகர்



# சினிமினி

யுவன் சங்கர்ராஜா தன் சம்பளத்தை 70 லட்சத்திற்கு உயர்த்திவிட்டார். வெயில் பட பாடல்கள் ஹிட் என்றவுடன், தன் சம்பளத்தை 40 லட்சமாக உயர்த்திவிட்டார் ஜி.வி.பிரகாஷ். 50க்கு குறையாமல் வாங்குகிறார் வித்தியாசாகர். நடிகர்களின் சம்பளத்தைக் குறைக்க சொல்லி வற்புறுத்துகிறார்களே. கொஞ்சம் இவர்கள் பக்கமும் பாருங்களேன் என்கிறார் பிரபல நடிகர் ஒருவர்.

ரஜினி நடித்த 'பொல்லாதவன்' பட தலைப்பை மீண்டும் வைத்திருக்கிறார்கள். இந்த பொல்லாதவனில் நடிக்கவிருப்பவர் தனுஷ். இந்த டைட்டிலை பெற முறைப்படி ரஜினியிடம் நேராக பேசினாராம் படத்தின் இயக்குனர் வெற்றிமாறன். ரஜினியும் மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டாராம். மாமனார் ஆஸ்தி மட்டுமல்ல...டைட்டிலும் மருமகனுக்குதான் போலிருக்கிறது.

# சொந்தக் குரலில் நவ்யா நாயர்!

**சொந்தக்** குரலில் சினிமாவில் பேசுவது சில நடிகைகளுக்கு எவரெஸ்ட் சிகரம் ஏறுவது போல. அதனால் தான் சொந்தக் குரலில் பேசுவதை பெரிய சாதனை ரேஞ்சுக்கு பேசுகிறார்கள்.

நடிக்க வந்த புதிதில் இரவல் குரலில் நடித்த சந்தியா, இப்போதுதான் சொந்தக்குரலில் பேசுகிறார். 'கூடல் நகர்' படத்துக்கு நான்தான் டப்பிங் பேசப்போறேன் என்கிறார் உற்சாகமாக. பத்மப்பிரியா வேறொருவர் தனக்கு குரல் கொடுப்பது அத்தனை சரியல்ல என்று கூறியது கேரளாவில் பெரிய பிரச்சினையாகி பிறகு மன்னிப்பு கேட்டார். நவ்யா நாயருக்கும் சொந்தக் குரலில் பேச ஆசை. கொஞ்சம் கரடுமுரடான குரல் இவருடையது. இதனால் தமிழ் இயக்குனர்கள் யாரும் இவரது குரலை பயன்படுத்தவில்லை. முதன் முறையாக மாயக்கண்ணாடியில் சொந்தக் குரலில் பேச அனுமதித்திருக்கிறார் சேரன். நவ்யாவின் கரகர குரலை பயன்படுத்த சேரனுக்கு எப்படி துணிச்சல் வந்தது?

'மாயக் கண்ணாடி' சில விருதுகளையாவது பெறும் என நினைக்கிறார் சேரன். நடிப்பவர்களே டப்பிங் பேசினால்தான் விருது கிடைக்கும். இதனால்தான் தனது ஹேராம் படத்தில் ஷாருக்கான் உள்பட அனைவரையும் சொந்தக் குரலில் பேச வைத்தார் கமல்ஹாசன். சேரன் மாயக்கண்ணாடியில் நவ்யா நாயர் டப்பிங் பேச சம்மதித்ததற்கும் இதுவே காரணம். வரும் தமிழ் புத்தாண்டு அன்று மாயக்கண்ணாடி திரைக்கு வருகிறது.


அசின்




பிரசன்னா - ஷீலா
சீனாத்தானா001

## மாளவிகாவின் செக்ஸ் புகார்!

'கறுப்புதான் எனக்கு பிடிச்ச கலரு' பாடல் மூலம் ரசிகர்களைக் கவர்ந்த மாளவிகா இடையில் வாய்ப்பின்றி இருந்தார். 'வாளமீனுக்கும் விலாங்கு மீனுக்கும்' பாடல் மீண்டும் பிரபலப்படுத்தியது. தற்போது நிறைய படங்கள் கைவசம் வைத்துள்ளார். கூடவே சர்ச்சைகளும் மாளவிகாவை துரத்துகிறது.

தெலுங்கு நடிகர் ராஜேந்திரபிரசாத் மீது ஏற்கனவே செக்ஸ் புகார் கூறினார். ஒரே போர்வைக்குள் இருவரும் நெருக்கமாக இருப்பது போல் ஒரு காட்சி எடுத்தனர். அப்போது ராஜேந்திரபிரசாத் சில்மிஷம் செய்தார். மாளவிகா ஆத்திரத்தில் படப்பிடிப்பை ரத்துச் செய்து விட்டு வெளியேறினார். நடிகர் சங்கத்திலும் புகார் செய்தார். இந்த சம்பவம் தெலுங்கு தமிழ் பட உலகில் பரபரப்பை ஏற்படுத்தியது.

கடந்த வாரம் சபரி பட தயாரிப்பாளர் சேலம் ஏ.சந்திரசேகரன் சம்பளப் பாக்கி வைத்திருப்பதாகவும் அதை வசூலித்து தரும்படியும் நடிகர் சங்கத்தில் புகார் செய்தார். மாளவிகா சூட்டிங்குக்கு ஒழுங்காக வரவில்லை என்றும் தங்குவதற்கு ஐந்து நட்சத்திர ஓட்டலில் அறை கேட்டு அடம் பிடித்தார் என்றும் இவரால் பல லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும் தயாரிப்பாளர் குறைபட்டார்.

இந்த நிலையில் எஸ்.ஜே.சூர்யா பாடல் காட்சியில் மாளவிகாவிடம் சில்மிஷம் செய்ததாக புகார் கிளம்பியுள்ளது.

ஷக்தி சிதம்பரம் இயக்கும் 'வியாபாரி' படத்தில் இருவரும் சேர்ந்து நடிக்கிறார்கள். இப்படத்துக்கான பாடல் காட்சி கிழக்கு கடற்கரைசாலையில் உள்ள கேரள ஹவுசில் படமாக்கப்பட்டது.

மாளவிகாவுக்கு கொசு கடிக்கும். உடனே அவர் கொசு கடிக்குது கொசு கடிக்குது என்று பாட ஆரம்பிப்பார். அவருடன் எஸ்.ஜே.சூர்யாவும் சேர்ந்து பாடுவார். தேவா இசையில் கவிஞர் வாலி இப்பாடலை எழுதியுள்ளார்.

பாடல் காட்சியில் மாளவிகாவிடம் நெருக்கமாக நடித்தபோது எஸ்.ஜே.சூர்யாவின் கை விரல்கள் மாளவிகா உடலில் தப்புதப்பாக ஊர்ந்ததாம். இதனால் கடுப்பான மாளவிகா படக்குழுவினர் முன்னிலையிலேயே எஸ்.ஜே.சூர்யாவை கன்னாபின்னாவென்று திட்டினாராம். எஸ்.ஜே.சூர்யா மன்னிப்பு கேட்டாராம்.

மாளவிகா வருகிற 18ஆம் திகதி சென்னையில் பத்திரிகையாளர்களை சந்தித்து பேட்டி அளிக்கிறார். அப்போது பரபரப்பான தகவல்களை வெளியிடுவார் என்று தெரிகிறது.

இதற்கிடையில் மாளவிகா மனேஜர் முனுசாமி கூறுகையில் எஸ்.ஜே.சூர்யாவுக்கும் மாளவிகாவுக்கும் மோதல் இல்லை என்றும் சுமுக உறவு உள்ளது என்றும் தெரிவித்தார். எஸ்.ஜே.சூர்யாவுக்கு எதிராக பேட்டி எதுவும் கொடுக்கவில்லை என்றும் மறுத்தார்.

# 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

## செல்வி ஜோ. நகோமி (ஜெஸ்னா)/25.02.2007



திரு. திருமதி ஜோன் - சுபா தம்பதியரின் செல்வப் புதல்வி நகோமி தனது முதலாவது பிறந்த தினத்தை, திருமதி நவமணி, சிவநாகதம்பிரான் வீதி, அம்றோஸ் வீதி, கருவேப்பங்கேணியிலுள்ள பாட்டியின் இல்லத்தில் 25. 02. 2007 (ஞாயிற்றுக்கிழமை) பி.ப. 4.00 மணிக்கு வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரைப் பாசமுள்ள அப்பா, அம்மா, அப்பம்மா (திருமதி சூசையம்மா), அம்மப்பா (டேவிற்), அம்மம்மா (சாரதா), பாட்டி, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அத்தை, மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார் மற்றும் தோழர்மார், உற்றார், உறவினர்கள் அனைவரும் அன்னை வேளாங்கண்ணி மாதா அருளால் அன்பிலும், பண்பிலும் சிறந்து வீரத்துடனும் விவேகத்துடனும் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்-
திரு. திருமதி ஜோன்பிஷர் சுபாஜினி.


சிபி - நிலா லீ

## நடிகை கடத்தல் – தாயார் கண்ணீர்!

'திருமகன்' உட்பட பல படங்களில் நடித்துக் கொண்டிருப்பவர் ப்ரீத்தி வர்மா. இவரை அருண் என்பவர் கடத்திவிட்டதாக ப்ரீத்தியின் தாயார் புகார் கொடுத்திருக்கிறார்.

ஆந்திராவிலுள்ள ராஜமுந்திரியில் ப்ரீத்தி வர்மா நடிக்கும் 'ராமுடு மஞ்சு பாலுடு' என்ற தெலுங்குப் படத்தின் படப்பிடிப்பு நடந்து வருகிறது. இதற்காக தனது தாய் தம்பியுடன் ராஜமுந்திரி சென்றிருந்தார் ப்ரீத்தி. மொத்தம் 13 நாள்கள் ஷூட்டிங்.

ஒன்பது நாள்வரை பிரச்சினை ஏதுமில்லை. பத்தாவது நாள் காலை ப்ரீத்தியின் தம்பிக்கு உடல் நலமில்லாமல் போக, அவரது தாயார் ஹோட்டலில் ப்ரீத்தியின் தம்பியுடன் தங்கியிருக்கிறார். ப்ரீத்தி படப்பிடிப்புக்குத் தனியாகச் சென்றுள்ளார்.

மாலையில் ப்ரீத்தி வர்மா திரும்பி வரவில்லை. படப்பிடிப்பு குழுவிடம் கேட்டதற்கு, ப்ரீத்தி இன்று படப்பிடிப்புக்கே வரவில்லை என பதில் கிடைத்திருக்கிறது.

ப்ரீத்தி வர்மா அருண் என்ற கேரளாவை சேர்ந்த இளைஞருடன் நெருங்கி பழகிவந்திருக்கிறார். அவர் ப்ரீத்தியை கடத்தியிருக்கலாம் என கண்ணீருடன் கூறினார் ப்ரீத்தியின் தாயார்.

ஆனால், திடீர் திருப்பமாக ப்ரீதி வர்மாவிடமிருந்து அவர் அம்மாவுக்கு கடிதம் ஒன்று வந்துள்ளது. அதில் தனது தாய், தந்தையை கடுமையாக திட்டி எழுதியிருந்தார் ப்ரீத்தி வர்மா. மேலும் கே.கே.நகர் காவல் நிலையத்திற்கும் அவர் கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார். அதில், தனக்கு விருப்பமில்லாத தொழிலில் தன்னைத் தனது தாயும் தந்தையும் வற்புறுத்தி ஈடுபடுத்துவதாக ப்ரீத்தி தெரிவித்துள்ளார். இதனால் அவரது அம்மா, அப்பா இருவரிடமும் தீவிர விசாரணை மேற்கொண்டிருக்கிறது பொலிஸ்.

ப்ரீத்தி வர்மா கடத்தப்பட்டாரா? இல்லை இஷ்டப்பட்டு தலைமறைவானாரா? பதில் தெரியாமல் காவல்துறை குழம்புகிறது.

## ஸ்ரேயாவுக்கு சந்தியா பின்னணிக் குரல்

**ரஜினி** நடிக்கும் 'சிவாஜி' படம் பலத்த எதிர்பார்ப்பை கிளப்பியுள்ளது. சந்திரமுகி ரிலீசுக்குப் பின் இப்படத்தில் அவர் நடித்துள்ளார். மெகா பட்ஜெட்டில் தயாரானது. ரஜினி ஜோடியாக ஸ்ரேயா நடித்தார். மணிவண்ணன், சுமன், ரகுவரன், விவேக், வடிவுக்கரசி என பலர் நடித்துள்ளனர்.

2005 டிசம்பர் 13ஆம் திகதி முதல் கட்ட படப்பிடிப்பு தொடங்கியது. ஏவிஎம்.ஸ்டுடியோ, பி.அண்ட்சி மில், புளியந்தோப்பு பொலிஸ் நிலையம், கும்பகோணம் கோவில், புதுவை நகராட்சி அலுவலகம் என பல இடங்களில் படப்பிடிப்பு நடந்தது.

ஐதராபாத், பெங்களூர், புனே நகரங்களிலும் பிரமாண்ட 'செட்'கள் அமைத்து படப்பிடிப்பு நடத்தப்பட்டது. நயன்தாரா ஒரு பாட்டுக்கு ஆடியுள்ளார். இப் பாடல் காட்சியில் புனேயில் கரகாட்ட கலைஞர்களை வைத்து படமாக்கினார்கள். வெளிநாட்டு அழகிகளை வரவழைத்து ஒரு பாடல் காட்சியும் எடுக்கப்பட்டது. வெனிஸ் நகர செட் அமைத்து ஒரு பாடலை எடுத்தனர்.


சண்டைக்காட்சிகளும் நவீன முறையில் படமாக்கப்பட்டுள்ளது.

இறுதி கட்டப் படப்பிடிப்பை அமெரிக்காவில் நடத்த இயக்குநர் ஷங்கர் முடிவு செய்தார். இதற்காக சில நாட்களுக்கு முன்பு ரஜினியும் படக்குழுவினரும் அமெரிக்கா சென்றனர். அங்கு ஒரு வாரமாக படப்பிடிப்பு நடந்தது. ரஜினி இரட்டை வேடத்தில் நடிக்கிறார். தந்தை கெட்டப் அமெரிக்காவில் படமாக்கப்பட்டது.

பலத்த பாதுகாப்புடன் ரகசியமாக படப்பிடிப்பு நடந்தது. படப்பிடிப்பை சிலர் படமெடுத்து இண்டர் நெட்டில் வெளியிட்டதால் சிவாஜியில் ரஜினி கெட்டப் வெளியே தெரிந்துவிட்டது. எனவே படப்பிடிப்பு எச்சரிக்கையாக நடத்தப்பட்டது. படப்பிடிப்பு 13.02.2007 அன்று முடிந்தது. ஒரு வருடத்துக்கு மேலா நடந்த படப்பிடிப்பு முடிந்துவிட்டது.

ஏவி. எம்.ஸ்டுடியோவில் ஏற்கனவே இரு வாரங்கள் டப்பிங் பேசினார். அமெரிக்காவில், படமான காட்சிகளுக்கு அடுத்த டப்பிங் பேசுகிறார். ஸ்ரேயாவுக்கு சந்தியா பின்னணி குரல் கொடுக்கிறார். ஷங்கரின் 'காதல்' படம் மூலம் அறிமுகமானவர் சந்தியா என்பது குறிப்பிடத்தக்கது. பல படங்களில் தற்போது பிசியாக நடித்து வருகிறார். இடையில் ஸ்ரேயாவுக்கு பின்னணி குரல் கொடுத்து டப்பிங்கும் பேசி வருகிறார்.

தமிழ் புத்தாண்டில் சிவாஜி ரிலீஸ் ஆகிறது.


ஷில்பாசெட்டி


...ன்னா - ஷீலா
...ாத்தானா001




## சிறகொடிந்த சமாதானப் புறா

அமைதியின்
சின்னமானதால்
அந்த வெண்புறா
புளகாங்கிதத்தில்
தன்னையே...
மறந்து போனது.

எம் தேசத்தில்
அமைதியே
கொலைசெய்யப்படும்போது
வெண்புறா...
இருந்தென்ன? இறந்தென்ன?

மனிதம் அவதறித்த
எம்மண்ணில்
ஒற்றுமை...
மறைந்துகொண்டே வருகின்றது.
காக்க வேண்டிய
மானிடமும் அதை
மறந்துகொண்டே வருகின்றது.

இருட்டறைதனில்
ஒளியிழந்த...
விளக்காய் இங்கே
சமாதானம்.

கரம் தண்ணில்
தீதனை
ஏந்தியிருந்தும்
விளக்கதனை
ஏற்ற மறுப்போராய்
நாம்.

சாந்திக்காகப்
பறக்கவிடும்
வெண்புறாக்களின்
சிறகுகளிலும்
செந்துளிகள்...
அவை வர்ணம் அல்ல
மானிட இரத்தம்
சிந்தியதற்கான
ஆதாரம்.

சிம்மாசனத்தில்
அமரவேண்டிய
சமாதானமென்ற
வெண்புறா
சிறகொடிக்கப்பட்டு
இரும்புக் கூண்டிலே
அடைக்கப்பட்டிருக்கிறது.

தேடுபவர்கள்
திறவுகோள்தனை கண்டும்
தேடிக்கொண்டே...

அமைதியை
அவனிக்கு
அறிமுகம் செய்த
வம்சத்தில்
உதித்த
எம்மவர்கள்

இன்று அமைதிதனிற்கு
சமாதி
கட்டுவதில்
அலாதிப் ப்ரியமுள்ளவர்களாய்!!!

*-ஏ.எச்.ரைஸாத்,*
*கிண்ணியா - 03.*

## காதலும் வாழ்க்கையும்

முன்பெல்லாம் சுவாசிப்பது
உயிர் வாழ்வதற்காக
இப்போதெல்லாம் சுவாசிப்பது
உன்னோடு வாழ்வதற்காக.

வாழ்க்கையென்பது
விருந்தோம்பலானால்
காதல்தான் பசி
நாம் இங்கு விருந்தாளியாவோம்!
வாழ்க்கையென்பது மேகமானால்
மழைத்துளியே காதல்!
பூமியாய் நாம் பெருவோம்!

வாழ்க்கையென்பது ஆயுளானால்
காதல்தான் மரணம்
நாம் இங்கு கடந்த காலங்களாவோம்!

வாழ்க்கையென்பது மொழியானால்
'தமிழ்' தான் காதல்
வார்த்தையாய் நாம் பிறப்போம்!

வாழ்க்கையென்பமு கிராமமானால்
வயல்வெளியாய் நாம் செழிப்போம்
காதலாய் நதி!

வாழ்க்கையென்பது வல்லரசானால்
அடிமையாய் நாம் மடிவோம்
அடக்குமுறைகள் காதல்!

காதலே வாழ்க்கையானால்
போராட்டமே காதல்
நாம் இங்கு போராளியாவோம்!
வெற்றி நமதே வாழ்க்கை கிட்டும்.
வாழ்க்கையென்பது ஈழமானால்
நாம் இங்கு போர்களாவோம்
சமாதானப் புறாவாய் காதல்!
இந்தப் பிரபஞ்சம் சுற்றி
பறந்து வருவோம் வா...
நம் காதல் சிறகு இன்னும்
படபடத்தபடி...!

*-ஏ.எப்.எம்.றியாட்,*
*முள்ளிப்பொத்தானை.*

## சிறகொடிந்த சமாதானப் புறா

எத்தனை ஆண்டுகள் எம்மை
இவ்யுத்தம்
கட்டிப் போட்டுக் கால் கை
உடைத்து
நித்திரை குழப்பி நிம்மதி பறித்து
மூலைக்குள் கிடவென முடக்கிப்
போட்டது
எல்லாம் தாங்கி இறுதி வரைக்கும்
இருந்தோம் நிச்சயம் விடியல்
வருமென.

என்ன கொடுமை? ஏனிந்த
நிலைமை?
பிணக்குகள் கூடிப் பேச்சுக்கள்
முறிந்தன
எங்கள் தேசத்துத் தீர்வு யோசனை
இன்னும் இன்னும் இழுபறி நிலையில்
இதுதான் எங்கள் தலைவிதி என்று
இதயங்கள் ஆயிரம் சரிந்து
விழுந்தன.

விண்ணில் பறந்த வெள்ளைப்
புறாவும்
விம்மி அழுது மண்ணில் புரண்டது
சீச் சீ என்ன மனிதர்கள் என்றது
சிறகை ஒடித்துக் காற்றில் எறிந்தது
போரிங்கு ஓயாதோ? புன்னகை
மலராதோ?
அவலங்கள் தீராதோ? அமைதிதான்
நிலவாதோ?

*-எஸ்.நாகராஜன்,*
*காரைதீவு - 02.*

## கனவுகளூடே கருவான உன் நினைவுகள்

புல்லாங்குழல்
துளைகளுக்குள்ளே
உருக்குலைந்த
ராகங்களின்
விசும்பலைப் போல...

என் நினைவுகளுக்குள்ளே
சிதறிப்போன
உயிர் காதலுக்காய்
ஒரு துளி
கண்ணீர் வடிக்கிறேன்...

உன் மறுப்புக்களால்...
உன் வெறுப்புக்களால்...
உன் கண்கள்
உமிழ்த்தும்
கசப்பான பார்வைகளால்...
எரிந்துபோன
என் இதயப்புத்தகத்தில்
மிச்சமிருப்பது
உன்னைப் பதித்த
நினைவுச் சுவடுகள்
மட்டுமே!

உன் வார்த்தைகள்
என் உணர்வுகளை
இதமாக வருடும் போது
உடைந்தோடும்
பனித்துளியாய்
என்னுள்
சுவாசச் சிதறல்கள்...

என் இதயத்து
இம்சைகளுக்குள்
இறுகிக் கிடக்கும்
ரணங்களுக்காய்
ஒதுக்கப்பட்ட
ஆராத கணங்கள்
கோடிமுறை கொளுத்தியும்
சோரம் போகாத
சோதனைகள்
தான்!!
நிசப்தமான
என் இரவுகளுக்குள்ளும்
கனவுகளாக வந்து
கொச்சப்படுத்தும்
உன் அனல் விழிகள்
ஆயிரம் முறை
அழித்தாலும்
காயம் மட்டுமே எஞ்சும்
சுவடுகள்...

நீயாக நீ இருக்கிறாயோ
என்னவோ!
சத்தியமாய் நான்
நீயாகத்தான் இருக்கிறேன்
உன் நினைவுகளுடனே...

இருந்தும்...
உன் ஆசைகளில்
இல்லை...
உன் தூக்கி எரியப்பட்ட
இதய நினைவுகளில் கூட
நான் இல்லையே!!...
ஏன்!!
நான் - உந்தன்
நினைவுகளால்
அதுவும்
வேண்டாத
நினைவுகளாய் கூட
இருக்க
தகுதியற்றவளா?...


*-ஷபானா கலாம்,*
*வத்தளை.*

## குருதிப் புறா

மயில் குயில் மைனா கிளி
இவை எதற்குமே கிட்டாத பெருமை
உனக்கு மட்டும் கிட்டியதேன்
யேசுவின் பிறப்பைக் கூற
மரியாளின் தலை மீது இறங்கினாயாமே
அதனாலா, அன்றேல்
முத்திரை தோன்றாக் காலத்தினுன்
முழங்காலில் தூது கட்டி அனுப்பியதாலா
அல்லது பறவைகளிலேயே நீ மட்டும்
நீரை உறிஞ்சிப் பருகும் சிறப்பினாலா
காரணம் என்னவாக இருப்பினும்
அன்று உன்னைச் சமாதானச்
சின்னமாகத் தேர்ந்தெடுத்த மனிதன்
இன்று போர்ப்பிரியன்; குருதியுறுஞ்சி.
அதுதான் சமாதானக் குறியாக
உலகை வலம் வர வேண்டிய
உன் சிறகுகளை, வாளால் வெட்டியும்
ஈட்டியால் குத்தியும்
துப்பாக்கிக் குண்டுகளால் துளைத்தும்
பறக்க முடியாப் பறவையாக்கி விட்டான்.
நீ இப்பொழுது வானத்தில் பறக்கும்
வெள்ளைப் புறாவல்ல.
காலொடிந்து சிறுகறுந்து நிலத்தில்
உயிர் துடிக்கும் குருதிப்புறா.

*- அ.சந்தியாகோ,*
*கண்டி.*

# கெட்ட நடிகை!




சர்வதேச 'ராசீஸ்' சஞ்சிகை அண்மையில் ஒரு தெரிவினை மேற்கொண்டது.

அதாவது, இதுவரையில் உலகத் திரையரங்குகளில் திரையிடப்பட்ட மிகவும் கெட்ட திரைப்படத்தை அச்சஞ்சிகை தேர்ந்தெடுத்துள்ளது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட திரைப்படம் 'பேசிக் கின்ஸ் டின்ச்ட் - 2' என்பதாகும்.

இத்திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்துள்ள பிரபல நடிகை ஸெரோன் ஸ்டோன் உலகிலேயே கெட்ட நாயகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# திருமணமாம்!



இளம் பாடகியான பியோன்சே கர்ண கடூரமான பாடகரான ஜே-இசட் என்பவரை வெகு விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போகிறாராம்.

இப்படி ஒரு செய்தி இணையத்தளம் மூலம் இப்போது வெளியாகி இருக்கின்றது.

என்றாலும், தான் இசெட்டின் பிறந்த தின விழாவிற்குச் சென்று வந்தேன்! அவ்வளவுதான் என பியோன்சே கூறி வருகிறார்.

பியோன்சே இப்போது நடிப்புத் துறையிலும் காலடி எடுத்து வைத்திருக்கிறார். கடந்த வருட இறுதியில் அமெரிக்காவில் திரையிடப்பட்ட 'Dream Girls' திரைப்படத்தில் இவர் முக்கியப் பாத்திரமேற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியன் திரைப்படத்தில் ஆடிய ஊர்மிளாவை எவரும் மறந்திருக்க முடியாது. அத்திரைப்படத்தில் அவர் காட்டிய கவர்ச்சி அதற்குக் காரணம்.

ஹந்தித் திரைப்பட இயக்குநர் ராம் கோபால் வர்மாவின் ஆஸ்தான நடிகை என வர்ணிக்கப்படும் ஊர்மிளாவிற்கும் ஓர் கனவு இருந்தது.

சிறு பிராயம் தொட்டே இவர் பிரபல பாடகி ஆஷா போன்ஸ்லேயின் ரசிகையாம்.

இந்த நிலையில் ஆஷா போன்ஸ்லேயுடன் இணைந்து ஒரு பாடல் பாடும் வாய்ப்பு இவருக்கு அண்மையில் கிடைத்துள்ளது.

ஆமாம். ராம் கோபால் வர்மாவின் 'கம்பனி' என்ற திரைப்படத்தில் இந்தப் பாடல் வருகிறது.


# கனவு!






# முக சுருக்கம் எதனால் ஏற்படுகிறது?

**காலத்தை** நம்மால் நிறுத்த முடியாது. ஆனால், வயதாகும் நம் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க முடியும். வீட்டில் வேலை செய்யும் பெண்கள் முதல், அலுவலகங்களில் 12 மணி நேரம் உட்கார்ந்தபடியே வேலை செய்யும் பெண்கள் வரை பெரும்பாலானோர் உடல் நலம் மற்றும் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவதில்லை என்று ஆராய்ச்சி வல்லுநர்கள் அறிந்துள்ளனர். இந்தியாவில் 28 சதவீதத்தினர் எந்த வித உடற்பயிற்சியும் இல்லாமல் இருப்பதாகவும், நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டோர் 3 சதவீதத்தினர் என்றும் கணக்கிக்கெடுக்கப்பட்டுள்ளது. உடலின் உட்புறத்தில் சீரான மாற்றங்களை




ஏற்படுத்தினால், உடலின் மேற்புறமும் நல்ல வளம் பெற்றுச் செழிப்புடன் காணப்படும். இதைப் பலரும் புரிந்து கொள்வதே இல்லை. இதற்கு மாபெரும் சான்று தான் தெருவுக்குத் தெரு முளைத்துள்ள பியூட்டி பார்லர்கள். தோற்றத்தில் அழகு கூட்ட என்னென்னவோ செய்து பார்க்கும் நாம், உடலின் உள்ளே இருக்கும் கோளாறுகளைச் சரி செய்வதில் அக்கறை காட்டுவது இல்லை; அதைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. இதற்கு எடுத்துக்காட்டுத் தான், அழகு சாதனப் பொருட்களின் விற்பனை வளர்ந்தோங்கி நிற்பது. பியூட்டி பார்லர்களை நடத்தும் பெரும்பாலான அழகுக் கலை நிபுணர்கள், அவரவர் கற்றுக் கொண்ட அழகுக் கலைகளை அப்படியே தனது கஸ்டமர்களிடம் பரிசோதனை செய்து பார்க்கின்றனர். அவர்கள் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருட்கள் சருமத்திற்கு தீங்கு விளைவிப்பவையா? இல்லையா? என்பது குறித்து யாருமே சிந்திப்பதில்லை.

உதாரணமாக, சில பியூட்டி பார்லரில், முகத்திற்குப் பொலிவு கொடுக்கும் பேஷியல் சிகிச்சைக்குப் பிறகு, ஒரு க்ரீம் தடவுகின்றனர். அந்த கிரீமைத் தடவினால், சற்று நேரத்தில் முகத்தின் நிறம் கூடி, பளிச்சென்று ஆகிவிடும். இதைத்தான் பெரும்பாலான பெண்கள் விரும்புகின்றனர். ஆனால், பேஷியல் செய்யும்போது பயன்படுத்தப்படும் பொருட்கள், அதன் பிறகு தடவப்படும் கிரீம் ஆகியவை இரசாயனக் கலவைகள் நிறைந்தவையா, மூலிகையை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டவையா, மூலிகை தான் என்றாலும், இப்போது பளிச் சென்று காணப்படும் முகம், நாளடைவில் ஏதாவது பாதிப்புக்கு உள்ளாகுமா போன்ற விஷயங்கள் குறித்து யோசித்தால், அழகுக்குக் கொடுக்கப்படும் அளவுக்கதிகமான முக்கியத்துவம் விளங்கும். முகம் எவ்வளவு அழகாய் இருந்தாலும், உடல் ஆரோக்கியத்துடன் இருந்தால் தான் அந்த முகத்தில் ஒளி கூடும். ஆரோக்கியத்தைப் பற்றிச் சொல்லும்போது நாம் அன்றாடம் சாப்பிடும் உணவு வகைகள்



முக்கியத்துவம் பெறுகின்றன. பச்சைக் காய்கறிகளும், கீரைகளும், பழங்களும், சிறிதளவு அரிசி, கோதுமை ஆகியவற்றுடன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால், நோய் நொடி இன்றி ஆரோக்கியமாக வாழலாம். மலச்சிக்கல் இல்லாமல், மன அழுத்தம் இல்லாமல், கோபத்தைத் தவிர்த்து, தினமும் உடற்பயிற்சி செய்து வாழ்ந்தால் உட்புற அழகு, வெளிப்புற அழகு ஆகிய இரண்டும் நம்மை மிளிர வைக்கும். இவை தவிர, பருவ வயது மாற்றங்களினால் உடலில் ஏற்படும் உபாதைகளைச் சரிவர நிர்வகிக்கத் தெரியும் பெண்கள் ஆரோக்கியமாக வாழ்கின்றனர்.


பெரும்பாலான நடிகைகளும், மாடல்களும் இப்போது தங்கள் உடல் நலத்தைக் காப்பதில் அக்கறை செலுத்தி வருகின்றனர். அதனால்தான் அவர்களால் நாள் ஒன்றுக்கு 18 மணி நேரம் கூட



வேலை செய்ய முடிகிறது. இப்படி நடுத்தர வயதில் ஆடி, ஓடி வேலை செய்த பிறகு, மெலிதாய் நெற்றியில் ஒரே ஒரு கோடு விழும்போது மனதில் பயம் பற்றிக் கொள்கிறது. உடனே வயதாகி விட்டதாகக் கவலைப்படத் தொடங்குகிறோம். உடலில் சுருக்கங்கள் எப்படி ஏற்படுகின்றன? உடலின் மேல் தோலை அல்ட்ரா வயலட் கதிர்கள் தாக்குவதால் ஏற்படும் சுருக்கம் ஒரு வகை. உடலின் உட்புறத் தோலில் ஏற்படும் சுருக்கம் மற்றொரு வகை. பெரும்பாலோருக்கு ஏற்படும் முகச் சுருக்கம் இரண்டாவது வகையைச் சார்ந்தது. இப்போது புரிகிறதா? வெளிப்புறத் தோலுக்கு எத்தனை தான் சிகிச்சை அளித்தாலும், உள்ளே தசைகள் இறுக்கமாக, உறுதியாக இருந்தால் தான் வெளித்தோற்றத்திலும் அழகைக் காண முடியும். எனவே, அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதேவேளையில், ஆரோக்கியத்துக்கும் முக்கியத்துவம் கொடுங்கள்.

# ஆண்களுக்குச் சமமாக பெண்களுக்கும் தலைவலி!


**ஆண்களுக்குத்** தான் முன்பெல்லாம், ஏன்...இப்போதும் கூட, பெண்களைக் காட்டிலும் அதிக தலைவலி வருகிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இப்போதெல்லாம் பெண்களுக்கும், தலைவலி பரவலாக வருவது அதிகரித்து விட்டதாக தெரிய வந்துள்ளது. இதற்குக் காரணம், ஆண்களைப் போலவே, எதிர்பார்ப்பு முதல் ஏமாற்றம் வரை உள்ளதால், பெண்களுக்கு ஸ்ட்ரெஸ் முதல் செக்ஸ் வரை பிரச்சினைகள் வரும் போது தலைவலி வருகிறது என்பது



தான் டாக்டர்கள் கருத்து. பொதுவாகவே, தலைவலி என்பது, நோய் மூலமாக வரக்கூடிய அறிகுறியாக இருக்கலாம். சில மருந்துகளால் ஏற்படலாம். போதை பழக்கத்தால் ஏற்படலாம். மதுப்பழக்கம் காரணமாக இருக்கலாம்.

இன்னும் சொல்லப்போனால், செக்ஸ் விஷயங்களால் தலைவலி வரக்கூடும். இதெல்லாம் இதுவரை ஆண்களுக்கு மட்டும் என்று கருதப்பட்டு வந்தது. இப்போது பெண்களுக்கும் அதிக அளவில் தலைவலி வரத் துவங்கிவிட்டது. பலரும் சிறிய வயதில் கூட தலைவலி என்று தலையை பிடித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். மனிதனின் பழக்கவழக்கங்களால் பொதுவாக தலைவலி வரும். இது ஒரு போபியா என்று கூட கூறலாம் என்பதும் டாக்டர்களின் கருத்து. தனக்குப் பிடிக்காத உணவு, பிடிக்காத விஷயம், விரும்பாத வேலை, விரும்பாத பாடல் என்றெல்லாம் கூட சிலருக்கு தலைவலிக்குரிய காரணமாக இருக்கின்றன. அதனால் தான் அவர்களுக்கு இந்த விஷயங்கள் எல்லாம் அலர்ஜியாக இருக்கின்றன.


சிலர் பகலில் தூங்கி, இரவில் அதிக நேரம் கண்விழிப்பர். இதுவும் தவறு. என்ன தான் பகலில் தூங்கினாலும், இரவில் எவ்வளவு தூங்குகிறோமோ, அதைப் பிரித்து, ஓரிரு மணிநேரம் தூங்கி எழுந்து விட வேண்டும். அப்படி சீரமைக்காமல், பகலிலும் சரியாகத் தூங்காமல், இரவிலும் சரியாகத் தூங்காமல் இருப்பவர்களுக்கும் தலைவலி வருமாம். நம்மவர்களுக்குத் தான் இப்படி என்றால், வெளிநாடுகளில், பெரும்பாலும் செக்ஸ் விஷயங்களால் தான் தலைவலி வருகிறதாம் பெண்களுக்கு. இதனால் லண்டன் போன்ற நகரங்களில் செக்ஸ் தெரபி சொல்லித்தரும் மருத்துவ மையங்கள் அதிகரித்து விட்டன. 'செக்சுவல் டிஸ்பங்க்ஷன் அசோசியேஷன்' அமைப்பு இது தொடர்பாக தொடர்ந்து செய்து வரும் சர்வேயில், செக்ஸ் விஷயங்களில் ஆண்களுக்குத் தான் தலைவலி வரும். சரியாக செக்ஸ் உறவு கொள்ளாவிட்டாலோ, திருப்தி தராவிட்டாலோ, தலைவலி வரும். ஆனால், இது இப்போதெல்லாம் பெண்களுக்கும் வரத் துவங்கி விட்டது. அவர்களின் எதிர்பார்ப்பை ஆணால் பூர்த்தி செய்ய முடியாவிட்டால், பெண்களுக்கு எரிச்சல் மட்டுமின்றி தலைவலியும் அடிக்கடி வருகிறது என்று இந்த செக்ஸ் சங்கத் தரப்பில் கூறப்படுகிறது.



# இயற்கை உணவுகளைச் சாப்பிடுங்கள்!

உடல் பராமரிப்பைப் பற்றி எந்நேரமும் கவலைப்படும் பெண்கள் ஏராளம்.

கவலைப்பட்டுப் பலனில்லை தோழிகளே! நீங்கள் சாப்பிடும் உணவு, உங்கள் மன ஓட்டம், உங்கள் சுற்றுச்சூழல் ஆகியவை உங்கள் உடல் பராமரிப்பை நிர்ணயிக்கின்றன. மன அமைதி கெட்டு, தூக்கம் வராமல் சோம்பிக் கிடத்தல், வெறும் ரசம் சோறு போதும்...என்ன வேண்டிக்கிடக்கு சாப்பாடு...என்ற எண்ணம், உங்களைச் சுற்றிலும் கந்தல் உடைகள், அழுக்கு பேப்பர்கள், தேவையே இல்லாத பொருட்களைப் பரப்பி வைத்தபடி அமர்ந்து உணவு உண்பது, தூங்குவது ஆகியவை உங்களைப் புரட்டிப் போட்டு விடும். சீக்கிரமே வயதான தோற்றத்தை ஏற்படுத்தி விடும்.



வெளியில் பூச்சு பூசி நம்மை அழகாகக் காட்டுவதை விட, ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தால் உடல் பொலிவு பெறும். அழகும் கூடும். இதை விட்டு விட்டு மற்ற வழிமுறைகளை நாடுவது நல்லதல்ல. நாம் உண்ணும் உணவு நம் வெளித்தோற்றத்தையும் சீரமைக்கிறது. வயதான தோற்றம் ஏற்படுவது ஏன் தெரியுமா? சர்க்கரையும், ஸ்டார்ச்சும் கலந்த உணவைச் சாப்பிட்டு, மன அழுத்தத்துடன் வாழும் முறைதான். நல்ல நிறமுடைய பழங்கள், பச்சைக் காய்கறிகள், ஒமேகா - 3 அமிலம் நிறைந்த மீன் வகைகள் சாப்பிடுவது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவும். பச்சைக் காய்கறிகள், எண்ணெய் அதிகம் கலக்காத உணவு வகைகள், ஒரு கப் நிறைய பழங்கள் சாப்பிட்டு வந்தால், நாளடைவில் நீங்கள் வித்தியாசத்தை உணர்வீர்கள்.

சத்தான காய் கறிகள், பழங்கள் சாப்பிடுவது பணகக் காரர்களுக்கு மட்டுமே உரித்தான உணவு முறைகள்; நமக்கெல் லாம் பழம், காய் கறி வாங்கிக் கட்டு ப்படி ஆகாது என்று யோசிப் பவர்களே... தினமும் ஒரே ஒரு காய கறி வாங்க முடியாதா உங்களால்? மாத பட் ஜெட்டில் இதற்கென சிறு தொகை ஒதுக்க முடி யாதா? மற்ற செல வுகளைக் குறையுங்க ளேன். ஒரே ஒரு மாதம் முயற்சித்துப் பாருங்களேன். வித்தியாசம் தெரியும். பச்சை கேரட், ஆப்பிள், பீன்ஸ், வாழைத்தண்டு ஆகியவற்றைச் சாப்பிடுவது மிகச் சிறந்தது. இப்போதெல்லாம் உடல் பருமனைக் குறைக்க டாக்டர்கள் மேற்கொள்ளும் சிகிச்சை முறையே, கலோரி அளவு அடிப்படையில் தான். நீங்கள் எந்த உணவு உட்கொண்டாலும், அதிகமாய் சாப்பிட்டு விட்டேன்...உடல் ஊதிப் போய்விட்டது என்று குத்துமதிப்பாக புகார் கூறினால், நீங்கள் என்ன உணவு சாப்பிட்டீர்கள் என்பதை வைத்து அதில் உள்ள கலோரி அளவைக் கொண்டு தான் டாக்டர்கள் சிகிச்சையை மேற்கொள்கின்றனர். எனவே, உணவு சாப்பிடுவதில் இயற்கை முறையை நாடினால், அதிக சிக்கல் இல்லாத வாழ்க்கை வாழலாம்.



# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

**கேள்வி இல்லை! பதில் இல்லை!**
**பொருட் கொள்வனவு அவசியமில்லை!**
**வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!**

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

61

பெயர் : ....................

முகவரி : ....................

....................

....................

தே.அ. அட்டை இல : ....................

கையொப்பம் : ....................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:

27.02.2007

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -60**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

**பரிசுப் போட்டி இல - 59**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

D.சண்முகம்
இல. 361, முகவர் தபால் நிலையம், இறத்தோட்டை வீதி, கம்மடுவ, மாத்தளை.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது -ஷோபா-*

## உளுந்துப் பிட்டு

***தேவையான பொருட்கள் :-***

உளுந்து - 50 கிராம்

கோதுமை - 50 கிராம்

அரிசி - 50 கிராம்

நல்லெண்ணெய் - 100 மி.லி.

கருப்பட்டி - 1/4 கிலோ

உப்பு - தேவையான அளவு

தேங்காய் சிறிதளவு.

***செய்முறை :-***

முதலில் உளுந்து, கோதுமை, அரிசி மூன்றையும் நன்றாக வறுத்து, திரித்து மாவு போல் வைத்துக் கொள்ளவும். பிறகு அடுப்பில் வாணலியை வைத்து நல்லெண்ணெய் ஊற்றவும். நன்றாகக் காய்ந்ததும் திரித்த மாவை உப்பு போட்டு பிரட்டி வைத்துக் கொண்டு அதில் போட்டு நன்றாக வறுத்துப், பிறகு கருப்பட்டியை போட்டு கொஞ்சம் தேங்காய் போட்டு இறக்கி விடவும் புட்டு ரெடி.




# பட்டாம்பூச்சி

**அண்டோனியோ** என் கையைப் பிடித்து, சுவருக்கு அழைத்துச் சென்றான். அதைத் தாண்டிக் குதிப்பது வெறும் குழந்தை விளையாட்டுத்தான். ஆறே அடி உயரம் தானே? இருந்தாலும் அதன் உச்சியில் இருந்த கண்ணாடித் துண்டுகளில் ஒன்று என் கையைக் கிழித்து விட்டது. அது ஒன்றும் பெரிய விஷயமில்லை.

அண்டோனியோ படு சூரன். பத்து அடிக்கு அப்பால் என்ன இருக்கிறதென்று பார்க்க முடியவில்லை. அப்படியொரு மழை கொட்டுகிறது. ஆனால் அவனால் மட்டும் எப்படியோ வழிகாட்ட முடிந்தது. உபயோகப்படுத்திக் கொண்டு, கிராமத்துக்கு நேர் குறுக்காகவே



போனான். பிறகு கடற்கரைக்கும், புதர்ப் பகுதிக்கும் நடுவிலிருந்த சாலையில் செல்லலானோம்.

இரவு வெகு நேரமான பின்னர் ஒரு வெளிச்சம் தெரிந்தது. புதருக்குப் பின்னால் வெகு தூரம் மறைந்து சென்று மறுபடி சாலைக்கு வந்தோம். அதிர்ஷ்டவசமாக, சாலையில் அதிக நடமாட்டம் இல்லை. பொழுது விடியும் வரை மழையிலே நடந்தோம். நாங்கள் புறப்படும்போது அண்டோனியோ எனக்கு ஒரு கோகோ இலை கொடுத்திருந்தான். அவன் சிறையில் மெல்லுவதைப் போலவே நானும் அதை மென்றேன். காலை விடிந்தபோது எனக்குக் கொஞ்சம் கூடக் களைப்புத் தோன்றவில்லை. அந்த இலைதான் காரணமோ? நிச்சயம் அப்படித்தான் இருக்கும்.

வெளிச்சமாய் இருக்கிறதே என்று கவலைப்படாமல் நாங்கள் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தோம். நடு நடுவே அவன் கீழே படுத்து, தண்ணீர் ஓடும் சாலையில் காதை வைத்துக் கேட்பான். பிறகு மேலே செல்வோம்.

அண்டோனியோ நடக்கும் முறை விசித்திரமானது. அது ஓட்டமுமல்ல, நடையுமல்ல. சின்னச் சின்னத் தாவலாகக் குதித்துக் கொண்டே செல்வான். ஒவ்வொரு குதியும் சீராக ஒரே அளவு தூரம் இருக்கும். காற்றில் படகு வலிப்பதுபோல் கைகளை நீட்டி ஆட்டிக் கொண்டிருப்பான். திடீரென்று அவன் காதில் ஏதோ சத்தம் கேட்டது போலிருக்கிறது. என்னைப் புதர்ப் பகுதிக்கு இழுத்துக் கொண்டு ஓடினான். இன்னும் மழை கொட்டிக் கொண்டுதான் இருந்தது. ஆம்! ரோடு எஞ்சின் ஒன்று எங்கள் கண் முன்னே வந்து கொண்டிருந்தது - சாலையைச் சமானப்படுத்துவதற்காகத்தான்.

காலை பத்தரை மணியாகிவிட்டது. மழை நின்றிருந்தது. ஆதவன் வெளிப்பட்டான். ஒரு மைல் தூரத்துக்கு, சாலையில் போகாமல் புல்வெளியில் நடந்தோம். பிறகு புதர்ப் பகுதிக்குள் மறைந்து கொண்டோம். முடிச்சுப் போட்ட மாதிரி மிகவும் அடர்த்தியாயிருந்த முள் செடிகளுக்கு நடுவே படுத்துக் கொண்டோம். பயப்படுவதற்கு ஒன்றுமேயில்லை என்று எனக்குத் தோன்றியது. இருந்தாலும் அண்டோனியோ என்னைப் புகைபிடிக்க - ஏன், கிசுகிசுவென்று பேசக்கூட அனுமதிக்கவில்லை.
அண்டோனியோவைப் போலவே நானும் கோகோ இலைகளை இடைவிடாமல் மென்று கொண்டிருந்தேன். ஆனால் கொஞ்சம் குறைவாக. இருபது இலைகளுக்கு மேல் ஒரு பையில் வைத்துக் கொண்டிருப்பதை அவன் எனக்குக் காட்டினான். அவன் சிரித்தபோது அவனுடைய அருமையான பற்கள் இருட்டில் பளபளத்தன.

எங்கு பார்த்தாலும் ஒரே கொசு! அவன் ஒரு சுருட்டைக் கடித்து மென்றான். நிகோடைன் நிறைந்த உமிழ்நீரை எடுத்து முகத்திலும், கைகளிலும் பூசிக் கொண்டோம். அதற்கப்புறம் கொசுத் தொல்லை ஒழிந்துவிட்டது.

இரவு மணி ஏழாயிற்று. ஆனால் சாலையில் மிக அதிகமாக நிலா

எழுதியது: ஹென்றி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

வெளிச்சம் பரவியிருந்தது. அண்டோனியோ என் கைக்கடிகாரத்தில் ஒன்பது மணியைச் சுட்டிக்காட்டி 'மழை' என்றான். ஒன்பது மணிக்கு மழை பெய்யும் என்று அவன் சொல்கிறானெனப் புரிந்து கொண்டேன். சரியாய் ஒன்பது மணிக்கெல்லாம் நிஜமாகவே மழை பெய்யத் தொடங்கிவிட்டது. மீண்டும் புறப்பட்டோம். பின்தங்கி விடக்கூடாதென்று, நானும் அவனைப் போலவே கைகளைத் துடுப்புப் போட்டுக் கொண்டு குதித்துக் குதித்துச் செல்லும் வித்தையைப் பயின்றேன். அது கஷ்டமாக இல்லை. ஓடாமலேயே, வேகமான நடையைக் காட்டிலும் விரைவாகச் செல்ல முடிந்தது. அந்த இரவு, மூன்று முறை நாங்கள் புதருக்குள் சென்று மறைந்து கொள்ள நேரிட்டது. ஒரு கார், இரண்டு கழுதைகள் பூட்டிய சிறிய வண்டி ஆகியவை எங்கள் எதிரில் வந்ததால், கோகோ இலை இருந்ததோ, நான் பிழைத்தேனோ! பொழுது புலர்ந்தபோது எனக்குத் துளியும் களைப்புத் தோன்றக் காணோம். எட்டு மணிக்கு மழை நின்றது. முந்தின நாளைப் போலவே இன்றும் செய்தோம். சுமார் ஒரு மைல் தூரம் புல்வெளியில் நடந்த பின்னர் புதரில் மறைந்து கொண்டோம்.

இந்தக் கோகோ இலைகளில் ஒரு கஷ்டம் என்னவென்றால், நம் தூக்கத்தைத் தடுத்துவிடும். தப்பி வந்ததிலிருந்து நாங்கள் கண்ணைக் கொட்டக்கூட இல்லை. அண்டோனியோவின் விழிகள் ஒரேயடியாய் ஊதிக் கிடந்தன. கருவிழி இருக்குமிடமே தெரியவில்லை. என் கண்ணிலும் அப்படித்தான் இருந்திருக்கும். சந்தேகமே இல்லை.

இரவு ஒன்பது, மழை பெய்தது. ராத்திரி இந்த நேரத்துக்கு ஆரம்பிக்க வேண்டுமென்று மழை காத்திருந்தது என்றுகூடச் சொல்லலாம்.

அன்று இரவு முழுவதும், அடுத்த நாள் காலையிலும் கணிசமான நேரத்துக்கு நடைபோட்டோம் - குதித்துக் கொண்டு சென்றோம் என்று கூறலாம். நாங்கள் அணிந்திருந்த உடைகள் வெயிலில் உலர்ந்துவிட்டன. நாங்கள் மழையில் நனையத் தொடங்கி மூன்று நாட்கள் ஆகிவிட்டன. முதல் தினம் ஒரு கட்டி பழுப்புச் சீனி தின்றதைத் தவிர, மூன்று நாட்களாக எதுவும் சாப்பிடவில்லை.

சாலை, கடற்கரையை ஒட்டினாற்போல் சென்றது. அண்டோனியோ அதைக் குறுக்கே கடந்தான். ஈர மணல் மீது நடந்தோம். அண்டோனியோ நின்றான். கடற்கரையில் ஓரிடத்தில் வட்ட வடிவமாகப் படர்ந்திருந்த தடத்தில் அண்டோனியோ தன்னிடமிருந்த குச்சியால் குத்தினான். குச்சியை வெளியே எடுத்தபோது, அதன் நுனியில் ஏதோ ஒன்று முட்டையின் மஞ்சள் கருபோல ஒட்டிக் கொண்டிருந்தது. அங்கே அவன் ஒரு பள்ளம் தோண்டினான். நானும் உதவி செய்தேன். கைகளால் மண்ணைப் பறித்துப் போட்டோம்.

என்ன ஆச்சரியம்! அங்கே முட்டைகள் ஏராளமாக இருந்தன. எவ்வளவு என்று என்னால் நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை. இருநூறு முந்நூறு இருக்கும். அவை கடல் ஆமையின் முட்டைகள். அவற்றுக்கு ஓடு கிடையாது. மேல் தோல்தான் உண்டு. அண்டோனியோ தன் சட்டையைக் கழற்றினான். அது நிறைய முட்டைகளை நிரப்பினான். சுமார் நூறு இருக்கலாம். கடற்கரையை விட்டுப் புறப்பட்டு, புதர்களுக்குள் மறைந்து கொள்வதற்காகச் சாலையைக் குறுக்கே தாண்டினோம். நன்றாய் ஒளிந்து கொண்ட பின்னர், சாப்பிடத் தொடங்கினோம். மஞ்சள் கருவை மட்டிலும். அதை எப்படித் தின்பது என்று அண்டோனியோ சாப்பிட்டுக் காட்டினான். தன் ஓநாய்ப் பற்களால் முட்டையின் தோலைக் கடித்து உரிப்பான். வெள்ளைத் திரவத்தை வடிய விடுவான். பிறகு மஞ்சள் கருவை விழுங்க வேண்டியது. ஒன்று அவனுக்கு, ஒன்று எனக்கு என்று கணக்கில்லாமல் மாற்றி மாற்றிக் கடித்து உரித்துக் கொண்டேயிருந்தான். வயிறு வெடித்துவிடும் அளவுக்குத் தின்ற பிறகு இருவரும் படுத்துக் கொண்டோம் சட்டையைச் சுருட்டித் தலைக்கு அணையாக வைத்துக் கொண்டு.

அண்டோனியோ சொன்னான்: "நாளைய தினம் நீ பாட்டுக்குத் தனியே போகலாம். இரண்டு நாள் போ. நாளை முதல் பொலிஸ் இருக்காது"

அன்றிரவு மணி பத்து. நாய்கள் குரைத்ததையும், ஒரு சிறிய வீட்டிலிருந்து வெளிச்சம் வந்ததையும் கொண்டு, கடைசிக் காவல் நிலையத்துக்கு வந்துவிட்டோம் என்று கண்டு கொண்டோம். அதன் பிறகு, எவ்வித முன்னெச்சரிக்கையும் தேவைப்படாமலே இரவு முழுவதும் நடந்தோம். அது அகலமான பாதையல்ல. சொல்லப் போனால் ஒரு வண்டிப் பாதையைக் காட்டிலும் பெரிதாயில்லை.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*




# துளிர் விடும் மலையகம்

துளிர்: 22

**இங்கே** பெண்ணே பாதிக்கப்படுகிறாள். ஆண்கள் கருத்தடைசெய்வது மிகவும் அபூர்வம் ஆகும். தங்களின் இன்ப வாழ்கை அற்றுப்போகும் என்ற ஒரு சுயநலமான நோக்குடனேயே கருத்தடை செய்யாமலிருக்கின்றனர். இதிலும் ஆணுக்காக பெண் அடிமையாக்கப்படும் அவலநிலை தெரிகிறது. ஆண்களுக்கென்று ஆயிரமாயிரமாய் கருத்தடை சாதனங்கள் இருந்தாலும் அதனைப் பயன்படுத்தி, பெண்ணுக்குரிய துன்பத்தை நீக்குவோம் என்ற சிறிதும் கரிசனையற்ற ஆண் உள்ளங்கள் மலைநாட்டில் மலிந்துகிடக்கின்றன.

தேயிலைத் தோட்டத்தொழிலாள குடும்பங்கள் அதிகமாக தகரடப்பா போன்ற அமைப்பில்லுள்ள வீடுகளிலே வாழ்கின்றனர். இந்த நிலைமை பற்றி 1ஆம்அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தேன். இச் சுகாதாரமற்ற சூழலில், பருவப்பெண்களே அதிகமாக துன்புறுகின்றனர். உடல்ரீதியான இயற்கை நிகழ்வுகளான சிறுநீர்கழித்தல், மலங்கழித்தல், மாதவிலக்கு போன்றவற்றின்போது, ஒழுங்கான மலசலகூடம் இல்லாதபடியால் பருவப்பெண்கள் துன்புறுகின்றனர். இருக்கும் ஒரே ஒரு அறையிலே உடை மாற்றுதல் கடினமாகும். மாதவிலக்கின்போது உண்டாகும் சுகயீனங்களின் வேதனைகளைக் குறைப்பதற்கு ஓய்வு எடுக்கமுடியாமலும் அவஸ்தைப்படுகின்றனர். வேலைக்குச் சென்று மலைகளில் கால்கடுக்க நின்று, கொழுந்து பறித்து, அதனைச் சுமந்து வருவதும், உடலுக்கு மென்மேலும் இவ்வேளைகளில் அதிக வருத்தத்தைக் கொடுக்கிறது. அத்தனையையும் தாங்கிக் கொண்டு இப்பெண்கள் உழைக்கின்றனர். மேலும் காலை 7.00 மணியிலிருந்து பகல் 12.00 மணி வரை ஒரே நிலையிலிருத்தல் வேதனைக்குரியது. வேலைத்தளத்தில் மேற்பார்வையாளர் ஆணாக இருப்பதனால் உண்மை நிலையினைக் கூறமுடியாது இப்பெண்கள் தவிக்கின்றனர். இவ்விதமாக சாதாரணமாக ஏற்படும் தலைவலி, வயிற்றுவலி போன்ற சிறு நோய்களின் போதும் அல்லல்படுகின்றனர். அவ்வேளை உடனடி நிவாரணிகளான பெனடோல், டிஸ்பிரீன் போன்றவைகளும் கிடைக்காது. இருந்தபோதும் அனைத்து வேதனைகளையும் சகித்துக்கொண்டு, தங்களுக்கென்று ஒருவித சுகமும் காணாத துயர வாழ்க்கையினை இப்பெண்கள் தொடர்கின்றனர்.

ஆணாதிக்கத்தில் அடிமையாய் போன மலையகமாது, மதுவிற்கும் அடிமையானால் அவளது வாழ்க்கை எங்குபோய் முடியும் என்று சொல்வதற்கில்லை. பொதுவாக பிரசவ வேதனையும், மாதவிலக்கின் வேதனையும் நீக்குவதற்காக மது அருந்தும் வழக்கத்தை மூதாதையர் கைக்கொண்டனர். இதனைத் தொடர்ந்த மலையகப்பெண்கள் மதுவிற்கே அடிமையாகிப்போனார்கள். இதனால் பணவிரயமும், கருவிலுள்ள குழந்தைகளுக்குப் பாதிப்பும், குடும்பத்தில் பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளது. இந்நிலை மலையகத்தில் பெருகிவருவதால் இருள் நிறைந்த சோகநிலை தோற்றுவிக்கப்படுகிறது.

சுகாதாரமாய் வாழுவதற்கு மனிதனுக்கு உணவு மிக அவசியமாகும். இவ்வுணவு பற்றாக்குறையினால், மலையக மக்கள் வருமானத்திற்காக எதைக் செய்தபோதும் போதா நிலையே உள்ளது. சிலவேளை தங்களையே வருமானாக்கிக் கொள்ளும் பெண்களும் உள். கணவன் இறந்துபோனாலோ அல்லது விவாகரத்து பெற்ற பெண்கள் இவ்விதமான இழிவான செயல்கள் மூலம் வருமானம் தேடுகின்றனர். சிலர் இனம், மதம், பேதம் அனைத்தையும் மாற்றி, வெளிநாடு செல்கின்றனர். இதற்கு குடியுரிமை பெற்றிருந்தாலும் பிரஜாவுரிமை பெறாததே ஒரு காரணமாயுள்ளது. வெளிநாடு செல்வதற்கு முன் எத்தனையோ ஏஜன்சிகளின் ஏமாற்றுவித்தைகளில் பணத்தையும் இழந்து வேலையும் கிடைக்காமல் நொந்துபோன பெண்கள் தோட்டத்தில் உள்ளனர் . அவ்விதம் சென்ற பெண்களின் குடும்பங்களில் பிரச்சினைகளுக்கும் குறைவில்லை. குழந்தைகள் தாய்பாசத்தை இழந்து, வெறுப்புதன்மைக்கு ஆளாக்கப்படுகின்றனர். கணவனோ, மனைவி அனுப்பும் பணத்தில் குடித்து, கும்மாளமடித்து வீணாக செலவு செய்கிறார்.சில ஆண்கள், புது இல்லற வாழ்கை ஆரம்பித்து பிள்ளைகளை கவனிக்காமல், புதிய உறவாக வந்த பெண்ணுடன் காலம் கழிக்கிறான். சில ஆண்டுகள் முடிந்து மனைவியர் வரும் போது குடும்பம் பாழ்பட்டுக் காணப்படும். சென்ற இடத்திலும் ஆண்மக்களுக்கு தங்கள் கற்பை விலை பேசும் சந்தர்பங்களிலெல்லாம்,அப்படி செல்லாது எப்படியோ சமாளித்து கஷ்டப்பட்டு உழைத்து அனுப்பும் பணம் விழலுக்கிறைத்த நீர்போல முடிந்திடும். இறுதியில் இங்கிருந்தாலும் பரவாயில்லை என்று எண்ணுமளவிற்கு காணப்படும். வெளிநாடுகளிலும் அடிமை போலவே இப்பெண்கள் நடத்தப்படுகின்றனர். இந்த நிலைமையைப் பெண்கள் உணர்ந்தும், ஜாக்கிரதையாக செயற்பட்டால் எதிர்காலம் சுபிட்சமாக அமையும் .

ஓய்வும் பொழுபோக்குகளும் மனம், உடல் ஆகியவற்றை பெருமளவு வருத்தி உழைப்பவர்களுக்கு ஓய்வும் இன்பமும் அவசியமாகும். தோட்ட அமைப்பு



முறையில் ஆண்களுக்கு அதிகமும் பெண்களுக்கு மிக குறைவாகவும் ஓய்வு உள்ளது. அதிகாலை 5.00மணியிலிருந்து இரவு 9.00மணிவரை ஓய்வில்லாமல் பெண்கள் வேலை செய்கிறபடியால், ஓய்வுநேரம் கிடைப்பது அரிது. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளாக இருந்தாலும் அன்றைய தினம் வீடு,சுற்றாடல், சுத்தம் செய்தல், உடைகழுவுதல், குளித்தல் போன்றவைகளுக்காக பெண்கள் நேரத்தை செலவிடுகின்றனர். இங்கேயும் ஆண்களின் கரிசனையற்ற தன்மையினாலே பெண்களுக்கு ஓய்வு கிடைப்பபதில்லை என்பது தெளிவாகிறது.

ஸ்ரீ முகன்

வேலைமுடிந்து 2.00மணிக்கு வரும் ஆண்கள் வீட்டுக்கடமைகளான தண்ணீர் எடுத்தல், விறகு சேகரித்தல், பிள்ளைகளைப் பராமரித்தல் போன்ற வேலைகளை செய்தால், பெண்களுக்கு சிறிது ஓய்வு கிடைக்கும். இவ்வாறான வேலைகளை "பெண்களது வேலைகள்" என்று ஆண்கள் முத்திரையிட்டு கொள்வதனாலும், கலாசார ரீதியாக கௌரவ குறைவு என்பதனாலும் செய்யாமலிருக்கின்றனர்.

ஆனால் வெளியிடங்களிலும் உணவு விடுதிகளிலும், தண்ணீர் எடுத்தல், சமைத்த பாத்திரம் கழுவுதல் போன்ற வேலைகளை ஊதியத்திற்காகச் செய்கின்றனர். இதன் மூலமாக கௌரவம் குறைவதில்லை என தங்களையே ஏமாற்றும் ஆண்களாக உள்ளனர்.

*(துளிர்க்கும்)*

**அது** போதாதென்று வீட்டு வாடகை பாக்கியை உடனடியாகக் கொடுக்கவில்லையென்றால் காலி செய்ய வேண்டும் என வீட்டின் சொந்தக்காரர் மிரட்டல் கடிதம் அனுப்புகிறார். அதைத் தற்செயலாக பார்த்த சாப்ளினுக்கு மேலும் அதிர்ச்சி. அவளுக்குப் பண உதவிகள் செய்ய பல வேலைகளைச் செய்கிறார்.


அந்த நேரத்தில் வெளிநாடுகள் சென்று திரும்பி வந்த அந்தக் குடிபோதை பணக்காரனை மீண்டும் சந்திக்கிறார். இரவு நேரத்தில் மீண்டும் அதே விசாரணை. விடிந்தவுடன் அதே பிரிவுபசாரம்!

குருட்டுப் பெண்ணுடன் ஒருநாள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது ஒரு பத்திரிகையின் செய்தி சாப்ளின் கண்ணில் படுகிறது. வியன்னா நகரத்திலிருந்து அமெரிக்காவிற்கு வர இருக்கிறார் ஒரு கண் டாக்டர். அவரால் பார்வை அற்றவர்களுக்குப் பார்வை கொடுக்க முடியும். அதற்குத் தேவையான பணத்தைத் தான் கொடுப்பதாக அந்தப் பெண்ணிடம் சொல்லி சந்தோஷ மூட்டுகிறார்.

மறுநாள் இரவு பணகாரனை வீட்டில் சந்திக்கிறார். அவன் அந்தப் பெண்ணின் அறுவை சிகிச்சைக்குத் தேவையான பணத்தை சாப்ளின் கையில் திணிக்கிறான் குடிபோதையில். அந்த நேரத்தில் வீட்டைக் கொள்ளை அடிக்க இரண்டு



திருடர்கள் புகுந்து விடுகிறார்கள். அவர்கள் பணக்காரனைத் தாக்கி வீழ்த்துகிறார்கள். அவர்களுடைய துப்பாக்கியின் உதவியால் சாப்ளின் அவர்களையே விரட்டி விடுகிறார்.இதற்குள் பட்லர் பொலிஸை வரவழைக்கிறான்: பணக்காரனின் பர்ஸிலிருந்த பணத்தில் பாதியைக் காணோம். அது சாப்ளினின் பாக்கெட்டில் இருப்பதினால் அவர்தான் திருடன் என்று நிர்ணயிக்கப்படுகிறது. பணக்காரன்தான் கொடுத்தான் என்று கூறும் சாப்ளினை யாரும் நம்பவில்லை. குடிபோதையிலிருந்து வெளிவந்த பணக்காரனுக்கு சாப்ளினை வழக்கம் போல அடையாளம் தெரியவில்லை. அவன்தான் திருடன் என்று ஊர்ஜிதம் செய்கிறான்.



# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்

தந்திரமாகப் பணத்தோடு அங்கிருந்து சாப்ளின் தப்பித்துக் கொள்கிறார். அதைக் குருட்டுப் பெண்ணிடம் கொடுத்து விட்டுச் சென்றுவிடுகிறார். பொலிஸ் சாப்ளினைப் பிடித்துச் சிறைக்கு அனுப்புகிறது. சில மாதங்கள் சிறை வாசத்திற்குப் பிறகு வெளியே வருகிறார் சாப்ளின். அங்குமிங்கும் அலைகிறார். சிட்டியில் பலர் இவரை ஏளனமாகப் பார்த்துச் சிரிக்கிறார்கள்.

அந்த நேரத்தில் வசதியான நிலைமையில் பூ விற்றுக் கொண்டிருக்கும், பார்வையைத் திரும்பப் பெற்ற பெண்ணைப் பார்க்கிறார் சாப்ளின். அவளுக்கு சாப்ளின் யார் என்பதே தெரியாது. அவளும் இவரைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கிறாள். அவளுக்குப் பார்வை வந்துவிட்டதைப் பற்றி சாப்ளினுக்கு அளவு கொள்ளாத சந்தோஷம். ஆனால் அது அவளுக்குத் தெரியாது! அந்த நேரத்தில் முன்னால் அங்கு காரை நிறுத்திய பணக்காரர், மீண்டும் அங்கு வந்து காரை நிறுத்துகிறார். அவர்தான் தனக்கு உதவிய பணக்காரர் என்று நினைக்கிறாள் அந்தப் பெண். பூ வாங்கவில்லையா? என்று அவள் கேட்டபொழுது பதில் சொல்லாமல் சென்று விடுகிறார். இதையெல்லாம் சோகம். சந்தோஷம் போன்ற பலவகையான உணர்ச்சிகளோடு பார்த்துக் கொண்டு நிற்கிறார் சாப்ளின்.

சாப்ளினுக்கு ஒரு காசை எடுத்துக் கொடுக்கிறாள் யாரோ பிச்சைக்காரன் என்ற எண்ணத்தில். அது நழுவிக் கீழே விழுகிறது. அதை அவளே எடுத்து சாப்ளின் கையில் வைக்கிறாள். அவர் கையைப் பிடித்த பொழுது அவளுக்குப் புரிகிறது சாப்ளின் யாரென்று. தனக்கு மறுவாழ்வு கொடுத்தவன் பணக்காரனல்ல, இந்த ஏழைதான் என்பது அவளுக்குப் புரிகிறது. தனக்குக் கண் பார்வையைக் கொடுத்தவன் தன்னைவிட ஏழையானவன் என்பது அவளுக்கு விளங்குகிறது. "நீயா?" என்கிறாள் அவள் உணர்ச்சி ததும்ப. "ஆமாம்" என்கிறார் சாப்ளின்.

"சிட்டி லைட்ஸ்" படம் மறுவாழ்வு பெற்ற அந்தப் பெண்ணைச் சாப்ளின் பார்க்கும் குளோசப் ஷாட்டோடு முடிகிறது. அவருடைய பார்வையில் ஒரு பக்கம் சந்தோஷம்... ஒரு பக்கம் சோகம்.... ஒரு பக்கம் ஏமாற்றம்... மற்றொரு பக்கம் ஏக்கம்... இப்படிப்பட்ட உணர்ச்சிகளை ஒரே பார்வையில் ஒரே ஷாட்டில் முகத்தில் காட்டுகிறார் சாப்ளின்.



இந்தக் க்ளோசப் காட்சி சரித்திரம் படைத்தது. படத்தின் மகத்தான வெற்றிக்குப் பெருமளவில் உதவியது. இன்றைய அளவிலும் பரபரப்பாகப் பேசப்படுகிறது. க்ளோசப் காட்சிகளைப் பற்றித் திரைப்பட வல்லுநர்கள் பேசும்பொழுது இந்தக் காட்சியைத் தான் முதலில் குறிப்பிடுவார்கள்!

நான் சிட்டி லைட்ஸ் படத்தை மீண்டும் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் ஒரு காட்சியில் பார்த்தபொழுது இந்தக் கடைசி க்ளோசப் காட்சியைப் பார்த்த பல ஆண்களும் பெண்களும் கதறி அழுதார்கள். அந்த அளவிற்குப் பார்ப்பவர்களை உணர்ச்சி வசப்படுத்திய காட்சி அது. அவ்வளவு திறமைக்கு இருப்பிடமாக சார்லி சாப்ளின்.

சார்லி சாப்ளின் புகழ் ஏணியில் யாரும் எட்டிப் பார்க்க முடியாத வெற்றியின் உயரங்களைத் தொட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அவருடைய தாயார் திடீரென்று மரணம் அடைந்தார். லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் எல்லா வசதிகளோடும் அந்தத் தாய் வாழ்ந்த பொழுதிலும் அவருடைய மனநிலை முழுமையாக மாறவில்லை. கடைசி நாட்களில் மருத்துவமனையில் இருக்கும்பொழுது அவரை வைத்தியம் பார்க்கும் டாக்டர் சாப்ளின், ஸிட்னி இருவரையும் பற்றி உற்சாகமாகப் பேசினார். பதிலுக்கு அந்தத் தாய் மகன்களே இல்லை என்றார்!

தாயின் பிரிவினால் சாப்ளின் ஆழ்ந்த வருத்தத்தில் மூழ்கிவிட்டார். தன் அந்தஸ்துக்கும், தாய் மேல் இருந்த பாசத்திற்கும் ஏற்றது போல் தகுந்த மரியாதைகளுடன் அவரை அடக்கம் செய்தார்.

*(தொடரும்)*

# காதலும் அந்த உறவும்!

**திருமணத்திற்குப் பின்னான பாலுறவு என்பது நமது அன்பான உணர்வுகளை நாம் கொண்டிருக்கும் காதலை வெளிப்படுத்தும் இன்னொரு வழியாகும். நம்மை நேசிக்காதவருடனான பாலுறவு என்பது துயரமான ஒன்றாகும்.**



**காதலும், பாலுறவும் பிரிக்கப்பட முடியாதவை என்று எழுதப்படாத சட்டம் ஒன்றுள்ளது. காதலை காப்பாற்றிக் கொள்ள சிலர் பாலுறவை நாடுகிறார்கள். சிலர் பாலுறவை திருமணத்திற்குப் பிறகு எனப் பாதுகாத்து வைக்கிறார்கள்.**

**பாலுறவில்லாத காதல் திருமணத்திற்கு முன்பு ஏற்றுக் கொள்ளத்தக்கது. காதலோடு பாலுறவு என்பது திருமணத்திற்குப் பின்பு பிரிக்க முடியாத பந்தமாகிறது.**

**பாலுறவு பல பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையக் கூடியது, வெறியை தணிக்கக்கூடியது. மனதை நெருக்கும் பிரச்சினையிலிருந்து தீர்வளிக்கக் கூடியது. நமது வாழ்வில் எப்போதோ நிகழ்ந்த கசப்பான நிகழ்ச்சிகளைக் கூட நெருக்கமான பாலுறவு மறக்கடித்துவிடுகிறது.**

**இதெல்லாம் திருமணத்திற்குப் பின் இருந்தால் நல்லது. முன்பு இருந்தால் அதுவே பிரச்சினையாகி உறக்கமில்லாத நிலையை உண்டாக்கி கவலைக்கு வழிவகுத்துவிடும்.**

**பலர் தங்களுக்குப் பாலுறவு பிரச்சினைகள் இருக்கும் என குழம்புகிறார்கள். புதிய சூழலில் புதிய நெருக்கடியில் எவ்வளவுதான் நெருக்கமாக இருந்தாலும் பாலுறவு சிக்கல்கள் எழுவது இயல்பு. அன்பும் நம்பிக்கையும் இருக்குமானால் எத்தகையப் பிரச்சினைகளையும் தீர்த்து விடலாம்.**

**காதலர் இருவரும் தயக்கமோ கூச்சமோ தாழ்வு மனப்பான்மையோ இன்றி பிரச்சினைகளையும் இந்தப் பிரச்சினையைப் பற்றியும் மனம்விட்டுப் பேச வேண்டும், விவாதிக்க வேண்டும்.**

**கவலைகளையும் உணர்வுகளையும் பகிர்ந்து கொள்ளும் போது, பிரச்சினைகள் சீராவதைப்போல ஒருவர் உடலைப் பற்றி இன்னொருவர் நன்றாகத் தெரிந்து கொள்ளும்போது பயம் தெளிகிறது,**



**தைரியம் பிறக்கிறது, தன்னம்பிக்கை வலுக்கிறது, பாலுறவுச் சிக்கல்கள் தீர்ந்து விடுகின்றன.**



# “பெண் சிவாஜி” சின்னவர் சாதனை!

**இந்திப்படம்**

1972ஆம் ஆண்டு ‘குன்வாராபாய்’ என்ற இந்திப் படத்தில் மனோரமா கதாநாயகியாக நடித்தார். இதில் இந்தி நடிகர் முகமூத் கதாநாயகனாக நடித்தார்.

இந்தப் படத்தில் மனோரமாவே இந்தியில் பேசி நடித்தார்.

படத்தை எடுப்பதற்கு முன்பு, இந்திப் பட உலகின் நகைச்சுவை நடிகரான முகமூத், மனோரமாவைத் தேடி வந்து, “நீங்கள் நடிப்பதாக இருந்தால் ஒரு படம் எடுக்கப் போகிறேன். இல்லையென்றால் கைவிட்டு விடுவேன்” என்று கூறினார். அந்தப் படத்தில் நடிப்பதற்காக இந்தி கற்றார் மனோரமா.

**தில்லானா மோகனாம்பாள்**

1968 ஆம் ஆண்டு “தில்லானா மோகனாம்பாள்” படம் வெளியானது. இதில் ஜில் ஜில் ரமாமணி என்ற குணச்சித்திர வேடத்தில் நடித்தார் மனோரமா.

இந்தப் படத்தில், சிவாஜியுடன் தோன்றியபோதெல்லாம், கலகலப்பை உண்டாக்கினார். மனோரமாவின் திரை உலகப் பயணத்தில், இப்படம் ஒரு மைல்கல்.

“தில்லானா மோகனாம்பாள்” படத்தில் நடித்தது பற்றி மனோரமா கூறியதாவது:-

“என்னை நல்லதொரு குணச்சித்திர நடிகை என மக்கள் மன்றத்தில் அறிமுகப்படுத்திய பெருமைக்குரிய படம் ‘தில்லானா மோகனாம்பாள்’தான்.

முதல் நாள் படப்பிடிப்பின் போது, டைரக்டர் ஏ.பி. நாகராஜன் என்னை தனியாக அழைத்து, “மற்ற நடிகர், நடிகைகளைப் பற்றி ஒன்றும் கவலைப்படாதே. அவர்கள் வெறும் கதாபாத்திரங்கள்தான். அவர்கள் எல்லோரையும் விட நீதான் பெரிய ஆள் என்பது போல் நினைத்துக் கொண்டு தைரியமாக நடி” என்று உற்சாகப்படுத்தினார்.

**என் அண்ணன்**

தில்லானா மோகனாம்பாள் படத்தில் அண்ணன் சிவாஜியுடன் நடித்தது, மறக்க முடியாத அனுபவம்.



சிவாஜியுடன் 150 படங்களில் நடித்து உள்ளேன். அவரை நான் எனது சொந்த அண்ணனாகவே இன்றும் நினைக்கிறேன். சந்தோஷம், துக்கம் இரண்டையும் அவருடன் பகிர்ந்து கொள்வேன். எனக்கு ஏதாவது ஒன்று என்றால், சகோதர பாசத்துடன் துடித்துப் போவார். அவர் இறந்துவிட்டார் என்பதை என் மனம் இன்னமும் நம்ப மறுக்கிறது. அவர் மாபெரும் நடிகர். எல்லோருடனும் பாசத்துடன் பழகியவர்.

இன்றைக்கும் “தில்லானா மோகனாம்பாள்” படம் பற்றி ரசிகர்கள் பெருமையுடன் பேசுகிறார்கள். எனக்கு அருமையான கேரக்டர். அதில்தான் நான் பட்டை தீட்டப்பட்டேன். அதன் பிறகுதான் “மனோரமா நல்ல நடிகை” என்ற பெயர் கிடைத்தது.

என் தாயார் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது, சிகிச்சை அளித்த டாக்டர் ராதாகிருஷ்ணன்தான், சிவாஜி அவர்களுக்கும் குடும்ப டாக்டர். இந்த நிலையில் என் தாயார் காலையில் இறந்து போன செய்தியை அந்த டாக்டர்தான் சிவாஜியிடம் கூறினார். அடுத்த 10 ஆவது நிமிடத்தில் சிவாஜி எங்கள் வீட்டுக்கு அண்ணி கமலா, பிரபு ஆகியோருடன் வந்துவிட்டார்.

எனக்குச் சகோதரர் இல்லை என்ற குறையை



அவர் தீர்த்து வைத்தார். என் சமுதாய முறைப்படி வெண்பட்டு போர்த்தி இறுதிச்சடங்கு செய்தார். என் தாயார் பட்ட கஷ்டத்துக்கு எல்லாம், சாகும்போது, அந்த இமயத்தின் மரியாதை கிடைத்தது. என் தாயாருக்கு கிடைத்த பெரும் பாக்கியம் அது.

கடைசியாக சிவாஜியை எனது பிறந்த நாளான மே 26ஆம் திகதி சந்தித்து ஆசி பெற்றேன். அவர் காலைத் தொட்டு வணங்கினேன்.

எனது தாயாரும், சிவாஜியும் நான் எப்படித்தான் நடித்து இருந்தாலும், “நன்றாக நடித்து இருக்கிறாய்” என்று சொல்லவே மாட்டார்கள்.

ஆனால் அன்று ஏதோ ஒரு படத்தைப்பற்றிப் பேசும்போது, “பாஷைகளை மாற்றிப்பேச மனோரமாவை விட்டா யார் இருக்கிறார்கள்? இன்னொருவரால் அப்படிப் பேச முடியுமா?” என்று சிவாஜி அண்ணன் கூறினார். அப்போது, எனக்கு இறக்கை இல்லாமலேயே மேலே பறந்து செல்வது போல இருந்தது.

இவ்வாறு மனோரமா கூறினார்.

“அனுபவி ராஜா அனுபவி” என்ற படத்தில் மனோரமா தூத்துக்குடி பாஷை பேசி ரசிகர்களைக் கவர்ந்தார். பிற்காலத்தில் 1991 ஆம் ஆண்டு “ஞானப்பறவை” என்ற படத்தில் சிவாஜிக்கு ஜோடியாக மனோரமா நடித்தார்.

*(தொடர்ச்சி அடுத்த வாரம்)*

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்


**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## ராஜீவை வரவேற்க செங்கம்பளப் பகுதியில் குண்டுதாரி




பெண் இன்ஸ்பெக்டர் அனுஷியாவும் அவருக்கு உதவியாக நின்றிருந்த பெண் கான்ஸ்டபிளும் பெண்களைக் கண்காணிப்பதில் ஈடுபட்டிருந்தனர். அவர்களிடம் குண்டுகளைப் பரிசோதிக்கும் உலோகக் கருவியிருக்கவில்லை. ஆண் பொலிஸ்காரர்கள் பெண்களைப் பரிசோதனை செய்யும் வழக்கமில்லை. அதனாலேயே இந்த இரு பெண் பொலிஸ் அதிகாரிகளும் கூட்ட மேடைக்கருகே நிறுத்தப்பட்டிருந்தனர்.

கூட்டமேடையை நோக்கிச் செல்லும் செங்கம்பளம் விரிக்கப் பட்டிருந்த வழியில் ராஜீவ் காந்தியை வரவேற்பதற்குச் சிலருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மொத்த கட்சி உறுப்பினர்கள் 23 பேருக்கு மட்டுமே இந்த அனுமதி வழங்கப் பட்டிருந்தது. இவர்களில் மிக நெருங்கிய ஆதரவாளர்கள் மூவர் மட்டுமே, மேடையில் ஏறி ராஜீவ் காந்திக்கு மாலை அணிவிக்க அனுமதிக்கப் பட்டிருந்தனர். ராஜீவ் காந்தியை வரவேற்கச்செல்லும் ஆண்களை உடல் ரீதியாகப் பரிசோதிப்பதற்கு உலோகக் கருவிகள் பொலிஸாருக்கு வழங்கப் பட்டிருந்தன. மரகதம் சந்திரசேகரின் நம்பிக்கைக்குரிய உதவியாளரான ஏ.ஜே.டொஸ் கூட்ட மேடைக்குச் சற்று அப்பால் தள்ளி நின்றிருந்தார். சகல விடயங்களும் ஒழுங்காக நடைபெறுவதை உறுதிப்படுத்தும் பணி, அவருக்கு செங்கம்பளப் பகுதியில் வைத்து ராஜீவ் காந்தியை வரவேற்கவிருப்பவர்கள் குறித்து சரிவர ஆராய்ந்து, அனுமதியளிக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு. முக்கிய தலைவர்களுக்கு பாது காப்பு வழங்கும் பொலிஸாருக்கு உரிய தகவல்களை வழங்க வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த கட்சி முக்கியஸ்தர்களுக்குண்டு. இந்தவகையில், ராஜீவ் காந்தியை மாலையிட்டு வரவேற்பவர்கள் பற்றிய பெயர் பட்டியலை வழங்கவேண்டிய பொறுப்பு ஏ.ஜே. டொஸ்சுக்கு வழங்கப்பட்டிருந்தது. உள்ளூரிலுள்ள கூட்ட ஒழுங்கமைப்பாளர்களுக்கே அப்பகுதி முக்கியஸ்தர்கள் பற்றி தெரியும் என்பதால், இந்த ஒழுங்கு மேற்கொள்ளப் பட்டிருந்தது. டொஸ்சினால் அனுமதியளிக்கப்பட்டவர்கள் ராஜீவ் காந்தியை நெருங்கிச் செல்ல அனுமதியளிப்பதா இல்லையா என்ற பொறுப்பு, ஸ்ரீ பெரம்புதூர் காவல்



ஸ்ரீ பெரம்பதூர் மைதானத்தில் ஹரிபாபு என்ற புகைப்படப்பிடிப்பாளர் பிடித்த முதல் படம் இது. கூட்டமேடைக்கு அருகே அமர்ந்திருந்த பெண்களை இப்படம் காட்டுகிறது.

நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

ராஜீவ் காந்தியை வரவேற்க தமக்கும் அனுமதி தருமாறு கோரி உள்ளூர் காங்கிரஸ் பிரமுகர்கள் பலர் டொஸ்ஸைச் சூழ்ந்து நின்று வலியுறுத்திக் கொண்டிருந்தனர். இவர்களில் ஒருவர் லதா கண்ணன் என்ற பெண்மணி. அரக்கோணத்தைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர். இவர் மரகதம் சந்திரசேகரின் மகனான லதா பிரியகுமாருக்காக கட்சிப் பணியாற்றி வந்தார். லதா கண்ணனுடன் அவரது மகளான கோகிலா என்ற சிறுமியும் வருகை தந்திருந்தார். சில மாதங்களுக்கு முன்னர்தான் லதா கண்ணன் காங்கிரஸ் கட்சியில் இணைந்திருந்தார். மே மாதத்தின் ஆரம்பத்தில் ராஜீவ் காந்திக்கு கவிதை ஒன்றினை இவர் அனுப்பி வைத்திருந்தார். லதா கண்ணனின் தந்தை, ராஜீவ் காந்தியையும் காங்கிரஸ் கட்சியையும் பாராட்டி எழுதியதே அந்தக் கவிதை. அந்தக் கவிதையை ஹிந்தியில் மொழி பெயர்த்திருந்தார். லதா கண்ணனின் மகளான கோகிலா. ராஜீவ் காந்திக்கு ஹிந்தியில் எழுதப்பட்ட அந்தக் கவிதையை கோகிலா படித்துக் காட்ட வேண்டும் என்பது லதாகண்ணனின் விருப்பம். லதா கண்ணனுக்கு டொஸ் அறிமுகமானவர் அல்லர். எனவே தன்னை அறிமுகம் செய்துவைப்பதற்கு, மரகதம் சந்திர சேகரின் மகனான லதா பிரியகுமாரின் வருகையை லதா கண்ணன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். இரவு 9.15 மணிக்கு திருமதி பிரியகுமார் வந்து சேர்ந்தார். லதா கண்ணனின் வேண்டுகோளின்படி, அவரது மகள் கோகிலாவை ராஜீவ் காந்திக்கு அருகே சென்று கவிதையை வாசித்துக்காட்ட அனுமதிக்குமாறு திருமதி பிரியகுமார் டொஸ்ஸிடம் வேண்டிக் கொண்டார். கோகிலாவின் பெயர் டொஸ்ஸினால் பொலிஸ் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டது. ராஜீவ் காந்தியை செங்கம்பளப் பகுதியில் வரவேற் பதற்கு 23 பேருக்கு மட்டுமே அனுமதியளிக் கப்பட்டிருந்தது. இவர்க ளில் கோகிலா மட்டுமே பெண்ணாவாள்.

இதனையடுத்து மகிழ்ச்சி ததும்ப லதா கண்ணன், ராஜீவ் வந்திறங்கியதும் அவரை வரவேற்க வென்று முன்பகுதியை நோக்கி முன்னேறிச் சென்றார். லதா கண்ணனுக்கு அருகே மூக்குக் கண்ணாடி அணிந்த பெண்மணி ஒருவர் காணப்பட்டார். மஞ்சள், ஆரஞ்சு நிறத்திலான சல்வார் கமிஸ் அணிந்திருந்த அந்தப் பெண்ணின் கையில் சந்தன மாலை ஒன்றும் காணப் பட்டது. சந்தன மாலை வைத்திருந்த பெண்ணுக்கு அருகே ஹரிபாபு என்ற புகைப்படப் பிடிப்பாளரும் காணப்பட்டார். ஹரிபாபுவைப் பல புகைப் படம் பிடிப்பாளர்களுக்கும் புகைப்பட ஊடகவியலாளர்களுக்கும் நன்கு தெரியும். இவர்களுக்கு அருகே நவீன

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**


அலங்காரங்களுடன் கூடிய சேலை அணிந்த இரு பெண்களும், மூக்குக் கண்ணாடி அணிந்த ஒரு ஆணும் காணப் பட்டனர். அரசியல்வாதிகளும் ஊடகவியலாளர்களும் விரும்பியணியும் குர்தா பிஜாமா ஆடையணிந்திருந் தார். டொஸ்ஸிடமிருந்து அனுமதி பெறுவதற்காக லதா கண்ணன் காத்திருந்தபோது, அவரை இவர்கள் நெருங்கினர். அங்கே கூடியிருந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் லதா கண்ணன் நெருங்கி உரையாடுவதை இந்த மூவரும் கவனித்தனர். சேலை அணிந்திருந்த பெண்களில் ஒருவர் சல்வார் கமிஸில் காணப்பட்ட தனது சகாவைக் காட்டி அவர் ராஜீவ் காந்திக்கு மாலையணிவிக்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

கோகிலாவும் லதாகண்ணனும் சில தூரத்துக்கு அப்பால் நின்று கொண்டிருந்தபோது, மூக்கு கண்ணாடியுடன் காணப்பட்ட சல்வார் கமிஸ் பெண்மணியும் அவர்களோடு இணைந்து கொண்டார். இதன் பின்னர் அவரது சகாவான அந்த சேலையணிந்த பெண்மணி, கூட்டத்திற்கு வருகை தந்திருந்த பெண்களின் பகுதிக்குள் நுழைந்தார். வெள்ளை நிற குர்தா பிஜாமா அணிந்திருந்தவரின் கையில் குறிப்புப் புத்தகமொன்றும் பேனா வொன்றும் காணப் பட்டது. அங்கு காணப்பட்ட பத்திரிகையாளர்களைப் போல் காணப் பட்ட அவர் சற்று அப்பால் தள்ளி நின்று கொண்டிருந்தார். ஹரிபாபுவின் கைகளில் சினொன் கமரா காணப்பட்டது. இந்த விசேட நிகழ்ச்சியை வர்ணப்படங்கள் எடுப்பதற்காக கமராவை இன்னொருவரிடமிருந்து இரவலாகப் பெற்றிருந்தார். ஹரிபாபு பெண்கள் அமர்ந்திருந்த பகுதிக்குத் தனது கமராவைத் திருப்பி 'கிளிக்' செய்து கொண்டார். அவரது நண்பிகளான அலங்கார ஆடையணிந்திருந்த இரு பெண்களும் பெண்கள் பகுதியில் ஒரு மூலையில் காணப் பட்டனர்.

கூட்ட மைதானம் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. விசாகப்பட்டினத்திலிருந்து மாலை 6.30 மணிக்கு ராஜீவ் காந்தியுடன் புறப்பட்ட விமானம் பழைய மீனம்பாக்கம் விமான நிலையத்தை வந்து சேர்ந்த போது இரவு 8.20 மணியாகிவிட்டது. அங்கிருந்து குண்டுகள் துளைக்காத காரில் புறப்பட்ட ராஜீவ் காந்தி வரும் வழியில் போரூரிலும், பூனா மலையிலும் தெருவோரக் கூட்டங்களில் உரையாற்றினார்.

போரூரிலிருந்து ஸ்ரீ பெரம்புதூரை நோக்கிவரும் வழியில் வாகனத்தில் இருந்தவாறு இரு வெளிநாட்டு நிருபர்களுக்கு ராஜீவ்காந்தி பேட்டியளித்தார். 'நியூ யோர்க் ரைம்ஸ்' 'கல்ப் நியூஸ்' ஆகிய இரு பத்திரிகைகளுக்கே அவர் பேட்டி வழங்கினார்.

(தொடர்ந்து வடியும்....)




**அவங்களோட** சாபத்தையெல்லாம் நாம தான் தாங்க வேண்டியிருக்கும். அது நடக்கக் கூடாது. அதுக்காக நான் உங்களுக்கு, என்னால முடிந்த அளவு உதவுறேன். நமக்குத் துணையா பரம்பரை தேவதைகள் வேற இருக்காங்க. இவ்வளவு போதாதா?" மாயா பேசினாள்.

அனந்தராமன் யோசித்தான்.

'மாயா சொன்னது உண்மைதான். நியாயமும் கூட. விலை கொடுத்து பங்களாவை வாங்கியிருந்தாலும் அப்பாவைக் கொன்று, யாருக்கும் தெரியாமல் எரித்திருக்கிறார்கள். அவர் எப்படிப்பட்டவராக வேண்டுமானாலும் இருக்கட்டும். இனிமேல் இந்த பங்களாவை இடிக்கப் போகிறார்கள்.'

'முடியாது. நிச்சயமாய் அதை ஒப்புக்கொள்ள முடியாது.' அனந்தராமன் முணுமுணுத்தான்.

"இன்னும் கல்யாணம் பண்ணிக்கலையா?" மாயா சட்டென்று கேட்டாள்.

"எல்லாமே தெரிஞ்சிருக்கும் போது, இதுமட்டும் உங்களுக்குத் தெரியாம இருக்குமா?"

"என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்குதா?" கேட்டபடியே அவனை நெருங்கி வந்தாள்.

அந்த உடம்புக்கு என்ன ஒரு வாசனை!

"பிடிக்கலைன்னு சொல்லவே மாட்டேன்"

மனதை அலைக்கழிக்கும் கிறக்கும் வாசனை.

"உங்க இடத்துக்குப் போகலாமா?" மாயா தான் கேட்டாள்.

எழுந்து நடந்தார்கள்.

அறைக்குள் வந்தவள் சுயாதீனமாய் மெத்தை தட்டிப் போட்டாள். அவன் பார்த்துக் கொண்டேயிருந்தான். அந்தக் கட்டிலிலேயே ஒரு ஓரமாய் உட்கார்ந்தாள். "இந்த நகைகளை இங்க நான் கழட்டி வைக்கலாமா? இல்லேன்னா உடம்பில உறுத்திக்கிட்டே இருக்கும்" அவனது பதிலை எதிர்பார்க்காமல் ஒவ்வொன்றாய் கழற்றிப் பக்கத்திலிருந்த மேஜை மீது வைத்தாள்.

"கெட்டிக்காரச் சிற்பி அளவெடுத்துச் செஞ்சது மாதிரி கச்சிதமாக இருக்கீங்க" சொல்லியபடியே அவளது வலது தோளில் இடது கை வைத்து வலது கையின் கட்டை விரலால் அவளது நெற்றியைத் தொட்டு மெதுவாக விரலைக் கீழிழுத்தான்.

அவள் அவனைச் சிரித்தபடியே

**புஷ்பாநாத்**
**தமிழில்**
**சிவன்**

பார்த்துக்கொண்டிருந்தாள். "இதே பங்களாவில முன்ன எப்பவோ ஒரு காலத்துல ஒரு கந்தர்வன் ஒரு பெண்ணைக் காதலித்தான். இப்போ இதோ ஒரு மனுஷனும் அதையே செய்யிறான்" மாயா ரகசியமாகச் சொன்னாள்.

"நான் கேட்கலையே?" - தூக்கத்திலிருந்து விழித்த மாதிரி அவன் கேட்டான்.

"அதுவா... ஒரு ஆம்பளைக்கு பலத்தைத் தர வேண்டியவள் பெண்தான். சிவ-சக்தி, அர்த்தநாரீஸ்வரன் இப்படியெல்லாம் நிறையக் கேட்டிருப்பீங்களே!" சொல்லியபடியே அனந்தராமனின் ரோமம் படர்ந்த நெஞ்சில் முகம் பதித்தான்.

விடியலில் சேவல் குரல் கொடுத்த போது மாயா கண்விழித்தாள். அவனும் கண் திறந்தான்.

"வரட்டுமா? உங்களோட சாப்பாட்டுக்கெல்லாம் நான் ஏற்பாடு செஞ்சிருக்கேன். வாத்தியார் வீட்டில இருந்து உங்களுக்கு வேளா வேளைக்குச் சாப்பாடு வந்திடும். அவரோடு பொண்ணு சொன்னா சொன்னபடி கரெக்டா செஞ்சிடுவா. அப்புறம் பார்க்கலாம்."

கட்டிலிலிருந்து எழுந்து வாசல் கதவைத் திறந்து கொண்டு விடிந்தும் விடியாத கருக்கலில் இருட்டிற்குள் மறைந்தாள்.

பொழுது விடிவதற்காகவே காத்திருந்த மாதிரி சைமனின் கட்டளைப்படி பங்களாவை இடிக்க ஆட்கள் தயாராக கடப்பாறை சகிதம் வந்திருந்தார்கள். மேஸ்திரி ஆறுமுகம் தனக்கு உதவியாக வந்திருந்த மூத்த பையனைக் கூப்பிட்டார்.

"கிருஷ்ணா, கிழக்கால இருந்து ஆரம்பிச்சிடலாம். மொதல்ல வாசலுக்கு நேரா உச்சியில இருக்கிற கமத்து ஓடுல்ல அதைப்பிரி. அப்பத்தான் வெயிலுக்கு முன்னாலே மேற்குப் பக்கமா இருக்கலாம்."

"சரி நைனா" என்றபடி ஏணியைப் போட்டு பயமில்லாமல் ஓட்டின் மேல் ஏறி உச்சிக்குப் போனான் கிருஷ்ணன்.

தளம் போட்டிருக்கிற மாதிரி ஓடுகள் இறுகியிருந்தன.




அசையவே இல்லை. உச்சிக்குப் போனவுடன் உச்சியிலிருந்து கொண்டு இரண்டு புறமும் கால்களைச் சரியவிட்டு செளகரியமாய் உட்கார்ந்தான். கையோடு கொண்டு வந்திருந்த ஒன்றரை முழ நீளமுள்ள இரும்புக் கம்பியால் அடித்து ஓட்டின் ஒரு முனையை நெம்பினான்.

அப்பாடா..... அசைந்து கொடுத்தது.

அந்த ஓட்டைப் பிரிப்பதற்காக விரலைக் கொடுத்து...

"ஐயோ..." என்றபடி அலறிக் கொண்டு பிடி நழுவி ஓட்டின் வழியே சரிந்து தொப்பென்று தரையில் மூட்டை மாதிரி விழுந்தான்.

வாசலுக்கு நேராக பலாப்பழம் விழுந்த மாதிரி முதலில் ஓடிவந்தவர் மேஸ்திரிதான், பதறினார்.

"டே கிருஷ்ணா, என்னடா ஆச்சு? பிடிவுட்டியா?"

"பூச்சி பட்டை ஏதாவது பாத்து பயந்துட்டியா? பழைய பங்களாவாச்சே பாம்போ, பல்லியோ இடுக்கில் இருந்திருக்கும்"- இது எட்வர்டு.

"இல்லை. அதெல்லாம் ஒண்ணுமில்லை. ஐயோ இதை என்னன்னு சொல்றது?" கிருஷ்ணன் மிரண்டபடி பேசினான்.

கமத்து ஓட்டின் கூரையைப் பெயர்த்து எடுத்த பிறகு மெதுவாக அந்த ஓட்டை மேல்ப்புறமாக இழுத்தான். அப்பொழுது ஒரு கை.... அதுவும் சின்னஞ்சிறு கை அந்த ஓட்டை உட்பக்கமாகப் பிடித்து இழுத்தது - பலத்துடன். எதிர்பாராத அந்த இழுப்பில் கிருஷ்ணன் நிலைகுலைந்து தடுமாறிப் போனான். பயத்தில் பிடி நழுவி, வெளிறி விழுந்தே போனான். அதற்கடுத்த ஓட்டின் அடியிலிருந்துதான் அந்தக் கை எழுந்து வந்தது என்று தோன்றியது.

(பயங்கரம் தொடரும்)

மனதுக்கு நிம்மதி

# நல்லவரா? கெட்டவரா?

சுவாமி... எங்கள் மகளை நினைத்தாலே பயமாக இருக்கிறது. இருபது வயசாகிறது. கல்லூரியில் படிக்கிறாள். ஆனால். கொஞ்சம்கூடப் பொறுப்போ, சுறுசுறுப்போ இல்லை. வீட்டில் இருக்கும் நேரத்தில் டெலிபோனில் யாருடனாவது மணிக்கணக்காகப் பேசுகிறாள். அல்லது சதா டி.வி-யே கதியென்று கிடக்கிறாள். இல்லாவிட்டால் இழுத்துப் போர்த்திக்கொண்டு தூங்குகிறாள். வீட்டில் அவள் எந்த வேலையும் செய்வது



இல்லை. தனது துணிமணிகளைக்கூட அவள் துவைத்துக் கொள்வதில்லை. சாப்பிட்ட தட்டைக்கூட கழுவி வைப்பதில்லை....''

டீன் ஏஜ் வயது மகள்களைப் பற்றிப் பெற்றோர் பலர் அடிக்கடி என்னிடம் வந்து இப்படிப் புலம்புவதுண்டு!

"என் மகன் மாதிரி ஒரு முழுச்சோம்பேறியை உலகில் எங்குமே பார்த்திருக்க முடியாது. எட்டு மணிக்கு மேல்தான் அவனுக்கு உலகம் விடியும். கார்ப்பரேஷன் குப்பை லாரி மாதிரி அறையை வைத்திருப்பான். தெருவோர டீக்கடை மாதிரி எந்த நேரமும் மியூஸிக்கை அலறவிடுகிறான். எங்கே போகிறான், வருகிறான் என்பது யாருக்கும் தெரியாது. திடீரென்று முக்கியமான புத்தகம் வாங்கிவர வேண்டும் என்று கிளம்பிப் போய்விடுவான். ஆக மொத்தத்தில் அவன் எங்களுக்கு உபயோகமாக எந்த வீட்டுவேலையும் செய்வதில்லை.''

இப்படித் தங்கள் மகன்களைப் பற்றிப் புலம்பும் பெற்றோரையும் நான் தினம் தினம் சந்திக்கிறேன். இவர்கள் சொல்வதை என்னால் நம்ப முடியவில்லை!

காரணம், உலகில் சோம்பேறிகள் என்று யாருமே இல்லை. எந்த ஒருவரும் சூழ்நிலையால்தான் சோம்பேறியாக ஆக்கப்படுகிறார். அப்படி ஒரு சூழ்நிலையை வீடுகளில் உருவாக்கிக் கொடுப்பது பெரும்பாலும் பெற்றோராகத்தான் இருக்கிறார்கள். இந்த உண்மை கொஞ்சம் கசக்கத்தான் செய்யும். இதோ இந்தக் கதையைப் படியுங்கள்.

"எங்கள் குடும்பம் மிகவும் கட்டுப்பாடான குடும்பம். எங்கள் வீட்டில் யாராக இருந்தாலும் சரி, காலை ஐந்து மணிக்கே எழுந்துவிட வேண்டும். குளிக்காமலோ, சாமி கும்பிடாமலோ யாரும் சாப்பிடக்கூடாது. இப்படி இருந்த எங்கள் குடும்பத்தில் ஒரு நாள் ஒரு புதியவர் நுழைந்தார். அவர் மிகவும் புத்திசாலி. சரித்திரகாலச் சம்பவங்களானாலும், நிகழ்கால அரசியலானாலும், எதிர்காலத்தில் வரப்போகிற அறிவியல் மாற்றங்களானாலும்..... சினிமா, விளையாட்டு என்று அவருக்கு அத்தனையுமே அத்துப்படியாக இருந்தது. அதைப் பற்றியெல்லாம் சதா பேசிக்கொண்டே இருப்பார். நாங்களும் திறந்தவாய் மூடாமல் கேட்டுக்கொண்டிருப்போம்.

சில சமயம், அந்தப் புதியவர் வீட்டின் நடு ஹாலில் வைத்து திடீரென்று குடிக்க ஆரம்பித்துவிடுவார். எதிரில் யார் இருக்கிறார்கள் என்பதைப் பற்றிக் கவலையேபடாமல் செக்ஸ் சம்பந்தமான விஷயங்களைக்கூட கூச்சநாச்சம் இன்றி விவாதம் செய்யத் தொடங்கிவிடுவார். அவருடைய பல பேச்சுக்கள், நடவடிக்கைகள் இப்படிப் பல சமயம் எங்களில் பலருக்குத் தர்மசங்கடத்தை ஏற்படுத்தினாலும் யாருக்கும் அவரை வீட்டைவிட்டு அனுப்ப



மனசில்லை. காரணம், அவரவருக்குப் பிடித்தமான விஷயங்களைத் தேனொழுகச் சொல்வதில் அவர் மன்னனாயிருந்தார்.

இதெல்லாம் நடந்து பல வருடங்கள் ஓடிவிட்டன. நான் இப்போது வெளியூரில் கம்பியூட்டர் சாப்ட்வேர் இன்ஜினியராக வேலை செய்கிறேன். சமீபத்தில் வார விடுமுறையில் எங்கள் வீட்டுக்கு வந்தேன். அப்போதும் அந்தப் புதியவர் ஹாலில் தனது வழக்கமான இடத்தில் அமர்ந்து எப்போதும் போல ஓயாமல் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார். சுறுசுறுப்பாக ஆடி ஓடி வேலை செய்யும் எங்கள் அப்பாவும், காலையில் நிற்க நேரமின்றி வீட்டுவேலைகளில் மூழ்கியிருக்கும் அம்மாவும் சாவகாசமாக உட்கார்ந்து அந்தப் புதியவர் (இப்போது பழையவர்) பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் முகத்தில் அந்தப் பழைய உற்சாகம் இல்லை. ஒருவித சலிப்புத்தன்மை நிரம்பியிருந்தது. என்றாலும் இடத்தைவிட்டு எழுந்து போகாமல் அவர் பேசுவதைக் கேட்டே தீர வேண்டும் என்பது ஒரு கடமை போல் கேட்டுக் கொண்டிருந் தார்கள். வெளியே கோயில் குளங்களுக்குப் போய் வருவது, உறவினர் வீடுகளுக்குப் போய் அளவளாவி மகிழ்வது போன்ற பழைய நல்ல பழக்கவழக்கங்களைக் கைவிட்டிருந்தார்கள். மொத்தத்தில் சோம்பேறிக் குடும்பமாகவே மாறிவிட்டிருந்தார்கள். அதற்கெல்லாம் காரணம் அந்தப் புதியவர்தான். அவர் நல்லவரா, கெட்டவரா? நீங்களே சொல்லுங்கள்.... அவர் பெயர் டெலிவிஷன்!''

டி.வி-யில் ஒரு சீரியல் விடாமல் பார்த்துக்கொண்டிருக்கும் அம்மாக்களே.... உங்களை ஒன்று கேட்கலாமா?

பரீட்சைக்குப் படிக்காமல் உங்கள் குழந்தைகள் டி.வி-யில் கிரிக்கெட் மாட்ச் அல்லது வேறு ஏதாவது நிகழ்ச்சி பார்த்துக் கொண்டிருக்கும்போது, எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவர்களிடம் உங்களால் "டி.வி-யைப் பார்க்காதே! பாடத்தைப் படி! வேலையைச் செய்! சுறுசுறுப்பாக இரு!'' என்று புத்திமதி சொல்ல முடியும்?

நீங்கள் சிந்திக்கவேண்டிய கேள்வி இது!

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 208

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | 8 | | 10 | 11 | 12 |
| 13 | | 15 | | 17 | 18 |
| | | 21 | 22 | 23 | 24 |
| | 26 | 27 | 28 | 29 | |
| 31 | 32 | | 34 | | 36 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 27.02.2007 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-208
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.206க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

செல்வி ர.தனுஷிகா, இல.55/20 மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. எம். ராமமூர்த்தி, 46, குமரன் ரட்ணம் ரோட், கொழும்பு -02
2. ஆர்.எம். பாயிஸ் பனூஸா ஸ்லோர், பிரதான வீதி, மூதூர்.
3. ஏ.கிருஷ்ரியன் கில்பேட், இல. 05, கௌசிங் ஸ்கீம், வவுனியா.
4. எஸ். ஞானம், 11-5/1 ஜோன். லோறன்ஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு -06.
5. திருமதி. சந்திரா ரவீந்திரன், திருவேரகம் 199/57, தும்புறுகிரிய வீதி, ஹட்டன்.
6. திருமதி. எம். சுந்தரேசன், 49, பார்க் றோட், ஹட்டன்.
7. ம.கமலநாதன் 60/21 கண்ணகை அம்மன் கோவில் வீதி, மட்டக்களப்பு.
8. த. நாகையா 209, மார்கண்டு வீதி, பாண்டிருப்பு 01, கல்முனை.
9. அ. தயான் 56/12, 3ஆம் குறுக்குத் தெரு, மட்டக்களப்பு.
10. திருமதி. பைசல் அமீனா ஜலீல், 61/1A/1, மகாபுத்கமுவ, முல்லேரியாவ.

### இடமிருந்து வலம்

1. அண்மையில் இலங்கை ஜனாதிபதி விஜயம் செய்த நாடு.
7. கமல் நடித்த திரைப்படமொன்று. (திரும்பியுள்ளது).
10. சோறு என்று பொருள்படும்.
17. பழம் என்பதன் ஒத்த கருத்து.
21. உலகம் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது).
26. இராசிகளில் ஒன்று (குழம்பியுள்ளது).
31. பருவக் காற்றுக்களில் ஒன்று.
36. ஒரு மரம். பெரியது என்றும் பொருள்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 206 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சி | 2 ல | 3 றா | 4 த் | 5 தி | 6 ரி |
| 7 ரி | 8 கா | 9 ம் | | 11 ரி | 12 ம |
| 13 வி | 14 ல் | 15 ல | 16 ம் | | 18 வு |
| 19 ஜீ | | 21 க | 22 யு | 23 ற் | |
| 25 சீ | 26 னி | | 28 ண | 29 நா | 30 ம் |
| | | 33 க | 34 றா | 35 ஜு | 36 த |

### மேலிருந்து கீழ்

1. அனுமாரைக் குறிக்கும்.
2. கொத்தாக இருக்கும் பழங்களின் தொகுதி (தலைகீழ்).
4. மரணம். (தலைகீழ்)
6. தூய்மையானது அல்லது பரிசுத்தமானது (குழம்பியுள்ளது).
11. தீப்பிடித்தல் அல்லது எரிதல்.
15. வேட்கை என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது).
22. கயிறு என்றும் பொருள்படும்.
26. அங்காடி என்று பொருள்.

# துணுக்குகள்

## பெண்களின் நிராகரிப்பும் ஆண்களின் நிராகரிப்பும் வேற்றுமைகள்

**ஒரு ஆணை நிராகரிக்க, பெண்கள் சொல்லும் தலையாய பத்து காரணங்கள் (அதன் உண்மையான அர்த்தத்துடன்)**

10) உன்னை என் சகோதரன் போல நினைத்துக்கொண்டிருக்கிறேன். (நீ அசிங்கமாக இருக்கிறாய்).
9) நமக்குள் ஓரளவுக்கு வயது வித்தியாசம் இருக்கிறது. (நீ என் அப்பா மாதிரி இருக்கிறாய், அல்லது உனக்கு வழுக்கை விழுந்து விட்டது).
8) உன் மேல் எனக்கு 'அதுமாதிரி' கவர்ச்சி இல்லை. (நீ மிகவும் அசிங்கமாக இருக்கிறாய்).
7) என் வாழ்க்கை தற்சமயம் மகா சிக்கலாக இருக்கிறது. (எனக்கு நிறைய ஆண் நண்பர்கள் இருக்கிறார்கள்.)
6) எனக்கு ஏற்கனவே ஒரு ஆண் நண்பன் இருக்கிறான். (உன்னைப் பார்த்தால் என் வீட்டுப் பூனையும் ஐஸ்கிரீமுமே மேல்).
5) நான் வேலை செய்யும் இடத்திலேயே ஒரு ஆளை காதலிப்பதை விரும்புவதில்லை. (நீ உலகத்திலேயே, அல்லது இந்த பேரண்டத்திலேயே ஒரே ஒரு ஆண்மகனாக இருந்தாலும் உன்னைக் காதலிக்க மாட்டேன், ஒரே கட்டிடத்தில் இருக்கிறோம் என்பதற்காக காதலித்துவிடுவேனா?.)
4) நீ காரணமில்லை, நான்தான் காரணம். (நீதான் காரணம்.)
3) இப்போதைக்கு என் வேலையில் முன்னேற உழைத்துக்கொண்டிருக்கிறேன். (மகா அலுப்படிக்கும் என் வேலையே உன்னை விட பரவாயில்லை.)
2) நான் திருமணம் செய்து கொள்ளவேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறேன். (உன்னைப் போன்ற ஆட்கள் இருப்பதால் தான்.)

எல்லாவற்றிலும் தலையாய சொல்லப்படும் காரணம்...

1) நாம் நண்பர்களாக இருப்போம். (நான் உன் கூடவே இருந்து நான் சந்திக்கும் ஆண்களைப் பற்றி எல்லாம் புகழ்ந்து உன்னை வெறுப்பேற்றத்தான்.)

***பெண்ணை நிராகரிக்க ஆண்கள் சொல்லும் காரணங்களில் தலையாயவை***

10) உன்னை என் சகோதரி போல நினைக்கிறேன். (நீ அசிங்கமாக இருக்கிறாய்.)
9) நமக்குள் சிறிதளவு வயது வித்தியாசம் இருக்கிறது. (நீ அசிங்கமாக இருக்கிறாய்.)
8) உன் மேல் எனக்கு அதுமாதிரி கவர்ச்சி இல்லை. (நீ அசிங்கமாக இருக்கிறாய்.)
7) என் வாழ்க்கை தற்சமயம் மகா சிக்கலாக இருக்கிறது. (நீ அசிங்கமாக இருக்கிறாய்)
6) எனக்கு ஏற்கனவே ஒரு பெண் நண்பி இருக்கிறாள். (நீ அசிங்கமாக இருக்கிறாய்.)
5) நான் வேலை செய்யும் இடத்திலேயே ஒரு பெண்ணைக் காதலிப்பதை விரும்புவதில்லை. (நீ அசிங்கமாக இருக்கிறாய்.)
4) நீ காரணமில்லை, நான்தான் காரணம். (நீ அசிங்கமாக இருக்கிறாய்.)
3) இப்போதைக்கு என் வேலையில் முன்னேற உழைத்துக்கொண்டிருக்கிறேன். (நீ அசிங்கமாக இருக்கிறாய்.)
2) நான் திருமணம் செய்து கொள்ள வேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறேன். (நீ அசிங்கமாக இருக்கிறாய்)

எல்லாவற்றிலும் தலையாய சொல்லப்படும் காரணம்...

1) நாம் நண்பர்களாக இருப்போம். (நீ உண்மையிலேயே படு அசிங்கமாக இருக்கிறாய்.)

# காதல் கொண்ட இதயங்கள்

**என்ன** மச்சான் லவ்வறுக்கு வேங்கில வேல கிடைச்சித்தாம் எனடா...வெரி லக்கி தாண்டா நீ..."நம்மட லவ்வர் தான் நம்மளப் போலவே கொட்டாவி விட்டுத் திரிகிறாள் வேல இல்லாம..."

வழமையான பாணியில் கதைத்தபடி ரிஷாளனின் அருகாக சைக்கிளை நிறுத்துகிறான் ரமேஷ்...! ரிஷாளனுக்கோ மெல்லவோ விழுங்கவோ முடியாதது போன்ற நிலை. எனினும் ஒருவாறு சுதாகரித்துக் கொண்டவன்...

"ஓம் மச்சான் கிடைச்சித்து" என்றான் சர்வ சாதாரணமாக முகத்தில் எந்தவொரு மகிழ்ச்சிக் குறிகளுமே இல்லை.. சோகமே உருவமாக நின்றவனின் நயனங்களில் நிறைகிறது கண்ணீர்...அது நாடிவழியே வடிந்து தாடி


—சரவணமுத்து நவேந்திரன், களுவாஞ்சிக்குடி.

வழியாகத் தரையில் விழுகிறது...

"ரிஷா...ரி...ஷா...என்ன மச்சான் நடந்த...? நான் கேட்டது தான் பிழையா...? இல்ல வேறேதும் பிரச்சினையா...? அழாத மச்சான் அழாத...கேட்டபடி தேற்றுகிறான் ரமேஷ்.

ரிஷாளனுக்கோ வார்த்தைகள் வர மறுத்து அழுகை தான் அலையலையாக வருகிறது..."நான் இதுல வச்சிச் சொல்ல விரும்பல்ல...வா மச்சான் வீச்சுக்குப் போவம்" என்றதும் இருவரது சைக்கிள்களும் கடற்கரையை நோக்கி உருள்கின்றன.

ரிஷாளனும், ரமேஷும் இணைபிரியா நண்பர்கள். ஒன்றாகவே உயர்தரம் வரை படித்தவர்கள். இவர்கள் கலைப்பிரிவில் கல்வியைத் தொடர - அதே பாடசாலையில் வர்த்தகப் பிரிவில் கல்வியைத் தொடர்ந்தவள் தான் சோபனா.

இந்த நிலையில்தான் உள்ளத்தால் ஒன்றித்து, "ரிஷாளன், சோபனா" காதலானது உருப்பெற்று வளர்ந்து கொண்டு வந்தது. இருவரும் ஒருவரையொருவர் மனப்பூர்வமாக விரும்பினார்கள். பரீட்சைப் பெறுபேறுகளின்படி ரமேஷும், சோபனாவும் பல்கலைக்கழகங்களில் பிரவேசிக்கிறார்கள். ரிஷாளனோ அந்த வாய்ப்புக் கிடைக்காமையால் நகரத்தில் உள்ள பிரபல்ய 'சரஸ்வதி ஸ்ரோர்ஸ்'இல் இணைந்து கொள்கிறான்.

தொலைபேசி உரையாடல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும். மூவரது மனங்களும் அவ்வப்போது இணைந்து கொள்ளும். தொடர்புகள் கிடைக்காத போதோ தவிதவிப்பர்; துடிதுடிப்பர். இடையிடையே நேரடிச் சந்திப்புகளும் இடம்பெறும்.

காலத்தின் சுழற்சியில் குறித்த வருடங்கள் உருண்டோடின. ரமேஷும், சோபனாவும் அவ்வப் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறுகின்றனர். பல வருடங்கள் கடந்த நிலையிலும் பதவி கிடைக்காததால் பட்டதாரிகளோடு பட்டதாரிகளாகச் சேர்ந்து ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர்.

இதன் பயனாகவோ என்னவோ சோபனாவுக்கு வங்கியில் வேலை கிடைத்து விடுகிறது. ரமேஷ் அவனது காதலி பவித்திரா போன்றவர்களின் நிலையோ தொடர்கதையாகிறது.

தனது ஆருயிர்க் காதலிக்கு தொழில் கிடைத்ததையிட்டு அன்று ஆனந்தக் கண்ணீர் சிந்திய, ரிஷாளன் அதே கண்களால் அவலக் கண்ணீர் சிந்துகின்றான் இன்று...

தென்னை மரங்களில் சைக்கிள்களைச் சாத்தி விட்டு இருவரும் அங்கு கிடந்த பனை மரக் குற்றி ஒன்றில் அமர்ந்து கொள்கிறார்கள். அந்தியாகும் வேளையில், இதமான கடற்காற்று வீசும் அந்த நேரத்தில் - அங்கும் இங்குமாகக் காதல் ஜோடிகள்...ரிஷாளனின் கண்களோ நீலமாக் கடல் போலவே பொங்கி வருகிறது. தன் சோகக் கதையைச் சொல்லத் தொடங்குகிறான்.

"மச்சான் ரமேஷ் உயிருக்குயிராக அவள நேசிச்சன். இதெல்லாம் நீயறிஞ்ச விஷயமும் கூட...ஆனா வேல கிடைச்சதில இருந்து மெல்ல மெல்ல விலகி - இப்ப முற்றாகவே விலகி என்ர உயிருக்கே உலை வச்சிப் போட்டாள் ரமேஷ். நீயும் காதலிக்கிறா தானே...உன்ர காதலி பவித்திரா இப்பிடியெல்லாம் இல்லையே..."

"அப்பிடிச் சொல்லாத மச்சான்...அவள் அப்பிடி உன்ன மறப்பாளா...? எனக்கெண்டா அப்பிடித் தோன்றல்ல. உன்னச் சந்திக்கிறதுக்கு நேரமிப்ப இல்லாம இரிக்கலாம். அல்லது அவளுக்கு வேறேதும் வீட்டில பிரச்சினையா இரிக்கலாம் இல்லையா...?"

இல்ல ரமேஷ் இல்ல...! உன்னப் போலவே நானும் ஆரம்பத்தில இப்பிடிச் செய்வாளெண்டு கனவில கூட நினைக்கல்ல. ஆனா இப்ப அவள் பட்டம், பதவியால - வங்கியில வேல கிடைச்சதால மாறித்தான் பொயித்தாள்; என்ன மறந்து தான் பொயித்தாள்...

"வாழ்ந்தால் உன்னோடு மடிந்தால் இந்த மண்ணோடு...என்றெல்லாம் வாய் நிறையக் கதைச்சாள்; வாக்குறுதிகளத் தந்தாள். நானும் உள்ளதெல்லாம் சொன்னன். அவள்ர உள்ளத்தக் காதலிச்சன். இன்றைக்கென்னடா எண்டா புத்தக் கடையில நிற்கிற நான் பொருத்தமில்லாதவனாகப் பொயித்தன். பதவி, பணம், அந்தஸ்து பார்க்கிறாள் போலக் கிடக்குது. என்னக் கீழ்த்தரமாக நினைக்கிறாள்...

அதால பைத்தியகாரக் கோலத்தில பாதையில அலைய வேண்டியிருக்குது பாத்தையா...எனக்கு எல்லாமே வெறுத்துப் போச்சி ரமேஷ்...இனியென்ன வாழ்வு நமக்கு...?"

கண்ணீர் பொழியக் கூறியபடியே ரமேஷின் கரங்களைத் திமிறி விட்டு கடலில் ஓடிப் போய்க் குதிக்கிறான் ரிஷாளன்...ரமேஷும் அதே வேகத்தில் ஓடிப்போய் அவனருகே குதித்து இறுகப் பற்றிப் பிடித்து கரைக்கு இழுத்து வருகிறான்....

இருவரிலும் இருந்து கடல் நீர் வடிவதை விட கண்ணீர் வடிந்து கொண்டிருக்கின்ற நிலையில்...ரிஷாளனின் மனதினைத் திசை திருப்பிய ரமேஷ்... "எடு ரிஷா சைக்கிள ஏறு வீட்ட போவம்" என்று கூற இருவரது சைக்கிள்களும் வீட்டை நோக்கி உருள்கின்றன... ரமேஷின் புத்திமதிகள் தொடர்கின்றன.

மச்சான் ரிஷா எடுத்த எடுப்பில எந்தவொரு முடிவையும் எடுக்கப்படாது. இறப்பு எந்தப் பிரச்சினைக்கும் தீர்வாகாது. சாவதன் மூலம் சாதனை படைக்க முடியாது. ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. அந்த வழிகளை நாடுவது தான் நல்லது. இதெல்லாம் சர்வ சாதாரணமான பிரச்சினைகள்.

ரிஷாளனோ ரமேஷின் அறிவுரைகள் ஒவ்வொன்றையும் அடிமனதில் பதிப்பவனாக எதுவும் மறுத்துப் பேசாதவனாக... ரமேஷோ தொடர்கிறான்...

"காதலும் வாழ்க்கையும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றது. இந்த இரண்டிலுமே சுமைகளும், சோகங்களும் பல்வேறு பிரச்சினைகளும் வந்தே ஆகும். இதற்கெல்லாம் முகங்கொடுத்து, எதிர் நீச்சல் போட்டு, சவால்களையெல்லாம் சந்திச்சி எவன் நிற்கிறானோ அவன் தான் மனிதன். இதில் தான் சுகங்களெல்லாமே நிறைஞ்சிருக்குது.

உண்மைக் காதலென்பது மனமும் மனமும் மனப்பூர்வமாக - கள்ளம் கபடம் எதுவும் இன்றி ஒன்றுபட்டு உணர்வுபூர்வமாக உருவாவது. இதற்கு ஒருபோதும் அழிவே கிடையாது. சாதி, மத, இன பேதங்கள், உயர்வு தாழ்வுகள் எல்லாவற்றையுமே கடந்தது இது. சங்ககால அகத்திணைப் பாடல்களும், பாரதியாரின் 'குயில்ப் பாட்டு' முதலானவைகளும் இதனப் பற்றித் தான் நமக்குச் சொல்கிறது. ரிஷா!

இதன்படி பார்த்தா சோபனா உன்மீது கொண்ட காதலும், நீ அவள் மீது கொண்ட காதலும் உண்மைக் காதலென்று என் மனதுக்குப் படுகுது. இப்ப உங்க இருவருக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் சிறு விரிசலானது உண்மைக் காதலுக்கு ஏற்பட்ட ஒரு சோதனை ஆகலாம்... சோதனை சற்றுச் சோகத்தை தந்திருக்கிறது அவளவு தான்.

உனக்கொரு பதவி கிடைக்கல்ல என்பதற்காக நீ எந்த விதத்திலும் தரம் குறைந்தவனில்ல. தரமானதொரு வுக் சென்ரில நிக்கிறா. பட்டறையில கூட இருந்து உரிமையாளர விடவும் சிறப்பாக நிருவகிக்கிறா. உயர்தர குணமெல்லாம் பெற்றிருக்கிறா...

அது மட்டுமல்ல போட்டிப் பரீட்சைகள் எழுதியிருக்கிறா. இன்னும் எத்தினையோ வேலைகளுக்கெல்லாம் விண்ணப்பித்திருக்கிறா அதால உனக்கும் நல்லதொரு வேலை கிடைக்கத் தான் போகுது. உனது வாழ்வும் ஒளிமயமாகத் தான் போகுது."

என்று ரமேஷ் கூறி முடிக்கவும், ரிஷாளனின் வீடு நெருங்கவும் நேரம் சரியாக இருந்தது. அவனது வீட்டிலே விளக்கேற்றப்படுகிறது. ரமேஷ் அவனைப் பார்த்து எல்லாவற்றையும் உணர்ந்தினி நடந்தாச் சரி எனக் கையசைத்தபடி விடைபெறுகிறான்.

ரமேஷ் செல்வதையை இமைவெட்டாமல் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த ரிஷாளன்... அன்றிரவெல்லாம் அவன் சொல்லிப் போன போதனைகளிலேயே மூழ்கிக் கொண்டிருந்தான்.

'ஹர்த்தாலும் கடையடைப்புமான' மூன்று நாளும் முடிந்த பின்னர் ரிஷாளன் வழமைபோல் 'சரஸ்வதி ஸ்ரோர்ஸ்' ஐ அடைகிறான். அப்போது ஒரு சனிக்கிழமை காலை ஒன்பது மணியிருக்கும் பத்து வயது மதிக்கத்தக்க ஒரு பையனுடன் அங்கே நுழைகிறாள் சோபனா. ரிஷாளனது கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை.

பெடியனதும், அவளதும் முகத்தினை மாறிமாறிப் பார்க்கிறான் ரிஷாளன். "அக்காட மகன்... இந்த வருஷம் ஸ்கொலஷிப் புத்தகம் வாங்கிக் குடுக்குறதுக்காகக் கூட்டித்து வந்த நான்... என்ற சோபனாவைப் பார்த்து கண்கலங்கியவாறு ரிஷாளன் கதையை எடுத்து விடுகிறான்.

"என்ன சோபனா காதல் என்பது இதுதானா? வேங்கில வேல கிடைச்சத்தோடு எல்லாம் சரி என... நான் கனவில கூட நினைக்கல்ல இப்பிடி நீ செய்வான்று..." அதற்கு மேல் ஒன்றும் பேச முடியாதவனாக - தன் முகத்தைப் பார்க்கவே திராணி அற்றவனாக விம்மிக் கொண்டிருந்த ரிஷாளனைப் பார்க்கப் பார்க்க அவளது இதயமோ வெடித்துச் சிதறிவிடுவது போல் பரிதாபத்தால் துடிக்கிறது.

"ரிஷா...இங்க பாருங்க... நான் அன்றும் சரி இன்றும் சரி இப்போதுமே உங்களை மனசில காதலிச்சுக் கொண்டுதான் இருக்கிறன். இதில எந்த மாற்றமுமே இல்ல... ஆனா..."

"என்ன ஆனா...?" விழிகளை அகல விரித்தபடி ஒருவித அதிர்ச்சியோடு ரிஷாளன் நிமிர்ந்து கேட்க...

"உங்கள எப்பிடி அடையிறது என்று தான் தெரியாம தவிச்சுக் கொண்டிருக்கிறன்; தடுமாறுறன்!..."

இதில வந்து உனக்கென்ன தவிப்பும், தடுமாற்றவும் சோபனா? இப்பிடி நீ கதைக்கலாமா...ம்...

"இல்ல... நீங்க வந்து உயர்ந்த குலங்கோத்திரத்தில் பிறந்த நீங்க...ஆனா...ஆ...னா...நானோ இதற்கு தகுதியில்லாதவள். இத இன்றைக்குத் தான் உங்களிட்ட நான் சொல்லுறன்... அதுக்காகக் கோபிச்சிடாதீங்க...

நாளைக்கு நீங்களும், உங்கட குடும்பமும் "இப்பிடிப்பட்டவளையா கலியாணம், கட்டின? என்று யோசிக்கலாம் தானே...இதால பூதாகரமான பிரச்சினைகளெல்லாம் கூட வெடிக்கலாம் தானே. என்னால உங்கட வாழ்வு பாழாகிறத்த நான் கொஞ்சம் கூட விரும்பல்ல ரிஷா...இதையெல்லாம் பற்றித்தான் இப்போது நான் மட்டுமல்ல...

என்ர குடும்பமும் கூட யோசிச்சுக் கொண்டு இரிக்குது. நீங்களும், உங்கட குடும்பமும் இந்த விஷயத்தில பிரச்சினை இல்லென்றா எந்தப் பிரச்சினையுமே இல்லாம நம்மட காதல் கல்யாணத்தில கட்டாயம் முடியும். நாலு பேருக்கும் நல்ல படிப்பினையாகவும் இருக்கும் இல்லென்றா...ம்..."

கண்ணீர் சலசலக்க உள்ள பிரச்சினைகளைச் சொல்லி பெருமூச்சுடன் சோகக் கதையை நிறுத்துகிறாள் சோபனா.

இதைக் கேட்ட ரிஷாளன் கடலாகக் கண்கள் பொங்க. "கல்வி, காதல் போன்றவற்றுக்கு முன்னால இந்தச் சாதி, சமய, இன பேதமெல்லாம் தகர்க்கப்படுகுதம்மா. அவன் தாழ்ந்தவன், இவன் உயர்ந்தவன் என்றெல்லாம் எவரிலையுமே இறைவன் எழுதி வைக்கல்லம்மா... இதெல்லாம் வந்து மூடத்தனங்களால சமூகம் போட்ட எழுதாத சட்டங்கள்.

மனித சாதில "ஆண் சாதி, பெண் சாதி" ரெண்டையும் தவிர வேறெந்தச் சாதியுமே இல்லம்மா. கண்ணீரும், இரத்தமும், வியர்வையும், உணர்வுகளும் எல்லார்க்கும் ஒன்றுதான். அனைவருமே மனித சாதிதான். உனது மன ஏக்கத்தையெல்லாம் இன்றையோட விட்டுத் தள்ளம்மா.

நானோ, என்ர குடும்பமோ இந்த விஷயத்தில எந்தப் பிரச்சினையயுமே எடுக்கப்போறதில்ல. ஏனென்றா எல்லாரையுமே சமமாகக் கருதுகின்ற நேர்மையான, நீதியான, குடும்பமே எங்களது குடும்பம்.

உயிருக்குயிராக ஒருவரையொருவர் நாம இருவரும் காதலிச்சது கண்ணீரோடு பிரிஞ்சு போறத்துக்கில்ல... கல்யாணம் கட்டோணும் கடைசி வரையும் சந்தோசமாக வாழவேணும். சரி தானே இதையெல்லாம் நல்ல வடிவாக உங்கட குடும்பத்துக்கும் விளங்கப்படுத்துங்க என்று கூறி, கேட்ட புத்தகங்களை எடுத்துக் கொடுக்கிறான்.

பிரிந்தவர் இணைந்தால் பேசவும் வேண்டுமா? என்பதற்கேற்ப இருவருக்குள்ளும் பேரானந்தம் பெருக்கெடுக்கிறது. "உண்மையில மனிதருக்குள்ளும் மாணிக்கம் நீங்க தான். நமது திருமணம் வெகு விரைவில இனிது நடக்க வேணும். ஆனந்தக் கண்ணீர் சொரியச் சொல்லி பிரிய மனமின்றியே பெடியனுடன் இறங்கிச் செல்கிறாள். ரிஷாளனும் மனமின்றியே வழியனுப்பி வைக்கிறான்.

காலத்தின் வேகத்தில் இருவரதும் துடிப்பைப் போல கல்யாணக் கதை பேச்செல்லாம் இரு குடும்பத்தின் மத்தியிலும் சுமுகமான முறையில் இடம்பெற்று வைகாசித் திங்களில் - வளர்பிறையில் - சுபமுகூர்த்த நன்நாளில் விரைவாகத் திருமணமும் நடந்தேறுகின்றது.

சோபனாவின் கழுத்திலே தாலிக் கொடியை ஏற்றும்போது கண் முன்னே நிற்கின்ற இணைபிரியா நண்பன் ரமேஷின் உயரிய போதனைகளெல்லாம் ரிஷாளனின் மனத்திலே ஓங்கி ஒலிக்கிறது. இன்ப வாழ்க்கையில் இணைந்து கொண்ட அந்த இரு உள்ளங்களினதும் கண்களில் இருந்து அப்போது வடிந்த கண்ணீர் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது.

(யாவும் கற்பனை)

இவ்வாரச் சிறுகதைகள்

# நெஞ்சு பொறுக்குதில்லையே...

**அங்கே** உன்னைத் தேடிக் கொண்டு இருப்பார்கள். இங்கே கசாயம் போட்டுக் கொண்டிருந்தால் எப்படி, "வேண்டாம்மா திவ்யா" என்று கெஞ்சினார் பார்வதி அம்மாள், திவ்யாவின் தாயாருடைய தாயார்.

ஊகூம், என்று வைர காதணி ஒளிக்கற்றையை வாரி இறைக்கத் தலையசைத்தாள் திவ்யா. ஒரு பத்து நிமிடங்களுக்குள் என்னை யாரும் தேடித் தவித்து விடமாட்டார்கள், வீணா அடம்பிடிக்காதீங்க அம்மம்மா என்று கசாயத்தை டம்ளரில் ஊற்றி அம்மம்மாவிடம் நீட்டினாள்.

சற்றுப்பொறுத்து கண்ணை மறைத்து விழுந்த கூந்தல் சுருளை விலக்கியவாறு திரும்பிய திவ்யா கலீரென்று நகைத்தாள். கசாயத்தை குடிங்க என்றால் அதை மறந்து என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறீங்களே, அசட்டு அம்மம்மா என்று ஓடி வந்து சாய்வு நாற்காலியின் கைப்பிடியில் அமர்ந்து கொண்டு சீக்கிரமாகக் குடிங்க நான் போக வேண்டும் என்று அவசரப்படுத்தினாள்.

குடித்து முடிந்ததும் டம்ளரை வாங்கி, கழுவி அதற்குரிய இடத்தில் வைத்துவிட்டு மீண்டும் வந்து நின்று "இப்போ சொல்லுங்கோ அம்மம்மா எப்படி இருக்கிறது என் அலங்காரம்" என்று ஒரு முறை சுழன்று காட்டினாள். பின்னர் அவர் முன் விழுந்து வணங்கி எழுந்தாள் திவ்யா.

பார்வதி அம்மாளின் வாயில் மீதமிருந்த பற்கள் அத்தனையும் தெரிந்தன. நல்லா இரும்மா என் கண்ணு என்று தன் பேத்தியை நெஞ்சாரத் தழுவிக் கொண்டவளின் விழிகள் தாரை தாரையாய்க் கண்ணீரைச் சொரிந்தது.

என்ன அம்மம்மா இது பட்டமளிப்பு விழா முடிந்து ஒரு டாக்டரா வந்து நிற்கிறேன் சந்தோஷப் படாமல் இப்படி அழுறீங்களே என்றவாறு தன் கைக்குட்டையை எடுத்து அம்மம்மாவின் விழிநீரை மிருதுவாக ஒற்றியெடுத்தாள் திவ்யா.

ஸ்வேதா குட்டியை நினைத்தேன்டா, உங்கம்மா இரட்டைக் குழந்தைகளா உன்னையும், ஸ்வேதாவையும் பெத்துப்போட்டு மகராசியாய்ப் போய்ச்சேர்ந்துட்டா, உங்க இரண்டு பேரையும் வளர்க்க உங்கப்பன் பட்ட பாடிருக்கே...ம்....இன்னொரு கல்யாணம் கூட பண்ணிக்காம கண்ணுக்குள்ளேயே வைத்துப் பார்த்துக்கிட்டான்.

அப்படிப்பட்ட அப்பனை மறந்துவிட்டு காதல் என்று காரணம் சொல்லி கண்டவனோட போயிற்றாளே என்று அங்கலாய்த்தவாறு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டார்.

ஸ்வேதா, திவ்யா இருவரும் சகோதரிகள் மட்டுமல்ல, நல்ல சினேகிதர்களும் கூட. உயர்தர வகுப்பில் காலடி எடுத்து வைக்கும் வரை எப்போதும் ஒன்றாக கூடித்திரிந்தவர்கள் இடையே, இடைவெளியாய் வந்தான் சுரேஷ். பாடசாலை இன்ரர் கிளப் தலைவியாக இருந்த திவ்யா, ஒரு புரொஜெக்ட் வேர்க்கின் போது சுரேஷைச் சந்தித்தாள்.

ஆரம்பத்தில் என்னவோ சுரேஷ் திவ்யாவின் நண்பனாகத்தான் அறிமுகமானான். காலப்போக்கில் ஸ்வேதாவும், சுரேஷும் சேர்ந்து திரியத் தொடங்கவும் திவ்யா ஒதுங்கிக்கொண்டாள். திவ்யாவின் ஒழுக்கம் அவர்களது காதலுக்கு வழிசமைத்ததோ அன்றி அவர்களது காதல் இவளது ஒதுக்கத்திற்கு வழிசமைத்ததோ அவளறியாள்.

என்ன காதல் இது தந்தையை, சகோதரியை வெறுத்து, கல்வியை இடைநிறுத்தி அவன் பின்னோடு அவளை


– லக்ஷண்யா, மட்டக்களப்பு.

வழியனுப்பி வைத்துவிட்டதே!

ஒரு நாள் திவ்யா பாடசாலைக்குச் செல்லும் போது எனக்குக் காய்ச்சல், நான் வரவில்லை என்ற ஸ்வேதா திவ்யா வீடு வந்து சேர்ந்த போது காணாமல் போயிருந்தாள். அப்பாவின் மேசை மீது ஒரு கடிதம் இருந்தது.

அன்றுதொட்டு இன்றுவரை இவள் அவமானப்படாத நாளேயில்லை. உறவினர்களின் குத்தல் பேச்சும், நண்பர்களின் கேலிப்பார்வையும் திவ்யாவைக் குடைந்தெடுத்தன. நத்தை போல் தனக்குள்ளேயே சுருட்டிக்கொண்டவள் படிப்பு படிப்பு என அதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்தினாள்.

அதன் விளைவாக மாவட்டத்தின் முதல் மாணவியாக சித்தியடைந்து மருத்துவ பீடத்தினுள் நுழைந்தாள். பல்கலைக்கழக வாழ்க்கை அவளுள் பல மாற்றத்தை ஏற்படுத்த, பட்டாம் பூச்சியாய் சிறகடித்துப் பறந்தாள். இன்று பட்டமளிப்பு விழாவில் பல விருதுகளும் பெற்றாள். இருப்பினும் திவ்யாவின் அத்தனை சந்தோஷத்தையும் சிதறடிக்கும் சக்தி, அந்த ஒரு சொல்லுக்குண்டு. அதுதான் ஸ்வேதாவின் காதல்.

தலையைக் கைகளில் தாங்கிய வண்ணம் திவ்யா எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தாளோ அவள் அறியாள். சில காலடி ஓசைகளும் சிரிப்பு சத்தமும் நெருங்கி வரவே திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

இங்கே தான். யாரோ வருகிறார்கள்.

வலுக்கட்டாயமாக உதடுகளில் புன்னகையைப் பூசிக்கொண்டாள். அம்மம்மா யாரோ வருகிறார்கள் நான் போயிட்டுவாறன் என்றவாறு வெளியே வந்தாள்.

என்ன திவ்யா, எப்படியிருக்கிறாய்? என்றார் உள்ளே வந்து கொண்டிருந்த அத்தை.

நல்லாயிருக்கிறேன் அத்தை, நேரமாகுது நான் வாறன் என்று புன்னகை மாறாமல் கூறிவிட்டு கிளம்பினாள்.

"இது யார் தெரியுமில்ல ஓடிப் போனாளே ஸ்வேதா அதுகூடப் பிறந்தது தான் இது" என்று மற்றவர்களுக்கு இவளை அறிமுகப்படுத்தி வைத்தார் அத்தை கூட வந்த இன்னொரு அம்மாள். செவி கேளாதவள் போல் நடந்து தன் வீட்டின் பக்கவாயில் வழியே அவரசமாக உள்ளே சென்று மாடிப்படியில் தொப்பென்று அமர்ந்தாள் திவ்யா.

திவ்யாவின் கோபம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகரித்ததோ அவ்வளவுக்கு அவ்வளவு அவளது முகம் இறுகிக்கொண்டே போயிற்று, இப்போ கொஞ்சக் காலமாக லேசான குறும்பு மின்னலிட சுற்றி வரும் விழிகள் இன்று தன் செயல் மறந்து இமையாதிருக்க, செம்பொற் சிலையென உட்கார்ந்திருந்தாள். ஸ்வேதா மீதுள்ள கோபம் உள்ளே கனன்று கொண்டிருந்தது.

ஐந்து வருடங்களுக்கு முன் ஸ்வேதா எழுதிய கடிதம் அவள் மனக்கண் முன் விஸ்வரூபம் எடுத்தது. அதன் ஒவ்வொரு வரியும் ஒவ்வொரு சொல்லும் அவளுக்கு மனப்பாடமாகியிருந்தது.

அப்பா,

உங்களைப் பற்றித் தெரிந்திருப்பதால் என் காதலை நீங்கள் அழித்துவிடுவீர்களோ என்று அச்சமாக இருக்கிறது...அதனால் என் வாழ்க்கைப் பாதையை நானே தீர்மானித்து விட்டேன். இதற்காக நான் உங்களிடம் மன்னிப்பு கேட்கப்போவதில்லை. ஏனென்றால் வீட்டில் அன்புகாட்ட ஆளில்லாதபோது நான் வெளியே ஆதரவு தேடியதில் தவறேதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை அம்மா இருந்திருந்தால் நான் இப்படி ஒரு முடிவு எடுக்க வாய்ப்பில்லாதிருந்திருக்கும். வேறு என்ன எழுத? ம்ம்...வரேன்பா? பை திவ்யா.

"ஸ்வேதா"

பெரிய மகாராணி மன்னிப்பு கேட்கமாட்டாளாமே, எவ்வளவு எளிதாய் எழுதிவிட்டாள் தவறேதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆமாமாம் நீ எங்கம்மா தவறு செய்தாய், தெரியாமல் விழைவதுதான் தவறு. நீ செய்தது துரோகம், பச்சைத்துரோகம்.

கடைசியாக ஸ்வேதா அப்பாவையே குற்றம் சாட்டியதைத்தான் திவ்யாவால் தாங்க முடியவில்லை. இருபது வருடமாக கண்டிப்பும், கனிவுமாக வளர்த்தவர் குற்றவாளி, அவருக்கு துரோகம் செய்த நீ, இது சரி, இது தவறு என்று தீர்ப்பா வழங்கிற? ச்சீ...நான் பிறந்த வயிற்றில் தானடி நீயும் பிறந்தாய். உன் புத்தி மட்டும் ஏனடி இப்படி கோணலாய்ப் போச்சு.

புத்தியைப் புல்மேய விட்டுவிட்டு பழியைச் சுமத்த அப்பாவை தெரிவு செய்து விட்டாளே, இத்தனைக்கும் அவள் கடிதத்தைப் பார்த்த பிறகும் அவர் கோபப்படவில்லை, அவள் காதலை குற்றம் சாட்டவில்லை, மாறாக பெற்றவர்கள் என்று இருப்பது எதற்கு? நாங்கள் தேர்ந்து எடுப்பவனைத்தான் நீ ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இல்லை, குறைந்த பட்சம் உன்னுடைய தேர்வு சரிதானா? என்று ஆராய்ந்து சொல்லும் உரிமை கூடவா எங்களுக்கு இல்லை. அதற்குமுன் அவசரப்பட்டுவிட்டாயே என்று உடைந்துதான் போனார்.

திவ்யா, திவ்யா என அவளது தந்தை கூப்பிட தன் சிந்தனைகளைக் கலைத்தாள் திவ்யா. என்னம்மா இங்க உட்கார்ந்திருக்க, சாரி கூட மாத்திக்கல, முகமெல்லாம் சிவந்திருக்கு, என்னடாம்மா என்றவாறு அருகே அமர்ந்தவரின் மடியில் தலைசாய்த்து, ஸ்வேதா பற்றி நினைத்தேனப்பா, என்னால் தாங்க முடியவில்லையே. அவள் ஏனப்பா இப்படிச் செய்தாள், காதல் எவ்வளவு மோசமான விசயமாப்பா என்று கண்ணீர் விட்டாள் திவ்யா.

நல்லது கெட்டது இரண்டுமே நம்ம பார்வையில் தானம்மா இருக்கு. நீயே யோசித்துப்பார் அவளுக்கு எங்களை தூக்கியெறிந்திட்டு போக கற்றுக்கொடுத்த அதே காதல் தானே உனக்கு சிந்திக்கக் கற்றுக்கொடுத்தது, பொறுமையை கற்றுக்கொடுத்தது, போராடக் கற்றுக்கொடுத்தது, அதனால்தானே எந்தவித சிந்தனைக் கலைப்புக்கும் இடம்கொடாமல் நீ உன் இலட்சியத்தை அடைந்து இன்றைக்கு ஒரு டாக்டராகமுடிந்தது என்றவர் ம்கூம்...என பெருமூச்சு விட்டார்.

ஸ்வேதாவைப் பற்றி பேசும்போதெல்லாம் கடைசியில் இப்படி பெருமூச்சு விடுவது இவரது வழக்கமாயிற்று என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டாள் திவ்யா. கரங்கள் தன் மகளை அன்பாக வருடி ஆறுதல் படுத்த, அமர்ந்திருந்தவரின் உதடுகள் தனைமறந்து பாட ஆரம்பித்தன.

நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்...

(யாவும் கற்பனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**சங்ககாலம்** வரையிலான பண்பாட்டுக் கோலங்கள், வாழ்க்கை முறை அனைத்தும் கண்டதும் காதல், கந்தர்வம் என்றெல்லாம் பண்படாத, அதாவது வரையறையற்ற முறையே நிகழ்த்தப்பட்டது என்றால், உண்மையை உணர்ந்தவர்கள் மறுக்கப் போவதில்லை என்பது எமது கருத்து. அத்தகைய காட்டு மிராண்டித்தனத்திலிருந்து சமூகம் விடுபடவேண்டும் என்ற பெருநோக்கோடு அமைக்கப்பட்ட வரையறைகளினால்தான் சமூகம் ஓரளவுக்கேனும் எவருக்கும் தீமை பயக்காத ஒரு சமூகத்தைக் கட்டி எழுப்ப முடிந்தது எனலாம். அப்படிக் கட்டியெழுப்பப்பட்ட சமூகம், மீண்டும் வரை கடந்து போகாமல் அணைகளாக அமைக்கப்பட்டதே நீதி நூல்கள். அவற்றுள் முதன்மை பெற்று நிலைப்பது திருக்குறள் என்பதில் ஐயமில்லை. அதிலிருந்து ஒரு துளியைக் கவனிப்போமா?

**"பொதுநலத்தார் புன்னலம் தோயார் மனநலத்தின்
மாண்ட அறிவி னவர்"**

குறள் - 915.

பொது நலத்தவரான விலை மாதரினது கீழான இன்பத்தை மதிநலத்திலே சிறப்புற்றவரான அறிவாளர்கள் விரும்பி, அதில் மூழ்கமாட்டார்கள்.

## இலக்கிய நயம்

# மறைக்க முயன்றேன் முடியவில்லை!

**நாட்டில்** ஏற்பட்டுள்ள போர்ச்சூழ்நிலை காரணமாகவும், மக்கள் நலமே மன்னன் நலம் என்ற ஒரே குறிக்கோளுடனும் தனது சொந்த சுகங்களையெல்லாம் ஒதுக்கித்தள்ளிவிட்டு, கடமையே கண்ணாக இருந்து, எதிரிகளை ஒழிப்பதையே தனது கடமையாகக் கருதிய கீர்த்திவர்மனுக்கு அங்கயற்கண்ணியின் காதல் ஒரு தடைக்கல்லாக அமைந்தது, அவனுக்கு நெஞ்சை நெருடிய போதிலும், அவள் காட்டுகின்ற பாசம் அவனைத் திக்குமுக்காட வைத்திருந்தது.



சந்தர்ப்ப சூழ்நிலை அவனைக் காதல் வலையில் சிக்கவைத்துவிட்டது ஏதோ உண்மையாயினும், பாசவலையில்

**தருவது கற்பகன்**

சிக்குண்டவர்கள் அதிலிருந்து விடுபடுவது என்பது இலகுவான காரியமல்ல என்பதை அறிந்திருந்ததால்தான், அவன் ஏற்கனவே அத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தான். ஆனால், எதிர்பாராமல் அங்கயற்கண்ணியைச் சந்திக்க வேண்டி வந்ததும், அவன் இலட்சியப் பாதையில் ஏற்பட்ட ஒரு தடை என்பதும் அதிலிருந்து இனி மீள முடியுமா என்பதும் கேள்விக்குறியாகிவிட்டிருந்தது.

கீர்த்திவர்மனின் மார்பில் மயங்கிக்கிடந்த அங்கயற்கண்ணி கனவுலகில் இருந்து விழித்தவள் போல் மெதுவாகக் கண்திறந்தாள். அவள் முகத்தையே விழித்துப் பார்த்துக் கொண்டிருந்த கீர்த்திவர்மன், மெல்லச் சிரித்தான். "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்றாள் அவள். "இன்னும் பொழுது புலரவில்லையே. அதற்கிடையில் விழித்துவிட்டாயே!" என்றதும், "போங்கள். பொழுது புலர்ந்து விட்டால் எப்படி?"

"இப்படியே பொழுது புலராமல் இருக்க வேண்டும் என்ற நினைப்போ?"

"பஞ்சணை இல்லையே இது."

"உங்கள் நெஞ்சணையை விடவா பஞ்சணை சுகமானது?"

"பாறை போல் தோன்றவில்லையா உனக்கு?"

"பாறை போலிருப்பது உங்கள் வீரமல்லவா? அது போர்க்களத்தில் மோதும் போது. ஆனால் அது பள்ளியறையில் எனக்கு பஞ்சு மெத்தைதான்."

"பழுதாகிவிடும் உன் மேனி"

"பொழுதாகிவிட்டது என்கிறீர்களா?"

"இல்லையே! அது உன் கண்களில் கலங்கம் இருக்கிறதே அதனால் பொழுது விடியவில்லை என்று தெரிகிறது."

"மிகையாய்ப் புகழ்கிறீர்கள்; பகையாகப் போகிறது வெண்ணிலவு"

"உன் விழிகள் மலர்ந்தாலல்லவா கதிரவன் ஒளிபெற முடியும். அதனாற்தான் கூறினேன்"

"வேண்டாம், வேண்டாம் பொழுது புலர்ந்து விட்டால் அஸ்தமிக்க நாழி ஆகுமே! அதுவரை....."

"என்னைப் பிரிந்திருக்க முடியாது என்கிறாயாக்கும்"

"பகலிரவு தெரியாமல் உங்கள் மார்பில் நான் உறங்க வேண்டும் அத்தான்"

"உறங்குபவர்களுக்குப் பகலேது? இரவேது?"

"அந்த உறக்கமல்ல"

"வேறு எந்த உறக்கம் என்கிறாய்?"

"போங்கள் எனக்கு வெட்கமாக இருக்கிறது"

"நீ போகச் சொன்ன பின்பு நான் இங்கிருப்பது முறையல்லவே!" என்றவன் மெல்ல எழ முயன்றான்.

அவள், அவன் தோள்கள் இரண்டிலும் தன் கைகளை வைத்து அழுத்தினாள்.

"அத்தான்! அதோ பாருங்கள் அந்தச் சாரளத்தின் வழியாகத் தெரிகிறதே கருமேகம், அதை யாரோ அழைப்பதுபோல் இருக்கிறதே!"

"மேகத்தின் மொழிகூட உனக்குத் தெரியுமா? ஆச்சரியமாக இருக்கின்றதே! அனுபவம் பேசுகிறதோ?"

"உங்களிடம் கற்றுக் கொண்டதுதானே அத்தனையும்"

"பொய் கூறுகிறாய்"

"எது பொய்? உங்கள் கண்பார்வை என்னைக் காந்தம் போல் இழுத்து மயக்கி, உங்கள் மார்பில் என்னை சங்கமிக்க வைத்திருக்கின்றதே. அது பொய்யா? இல்லை பெண்களின் வாடையே படக்கூடாதென்று பரதேசிபோல் அலைந்த நீங்கள் இன்று எனக்கு மார்பில் மஞ்சம் விரித்திருக்கிறீர்களே அதுவா?" என்று அங்கயற்கண்ணி கேட்டதும்,

"குறும்புக்காரி உன்னை என்ன செய்கிறேன் பார்" என்றவன், அவள் முகத்தைத் தன் முகத்தோடு சேர்த்து அவள் கன்னத்தைக் கடித்தான்.

"மாங்கனிகள் என்றா நினைத்துவிட்டீர்கள்?" என்றாள் அங்கயற்கண்ணி.

"மாங்கனியில் வண்டிருக்கும். உன் கன்னம் மாதுளங்கனி. அதனுள் இருக்கும் முத்துக்கள் அல்லவா உன் மோகனப் பல்வரிசை. போதுமே நாளை வேண்டாமா?" என்று நிறுத்தியதும், குடிமனைப் பக்கத்தில் எங்கோர் சேவல் கூவும் சந்தம். உழவர் பெருமக்களை எழுப்பியதோ என்னவோ இனிமைக் கனவுலகில் இணைந்த உள்ளங்கள் இதமான இன்பத்தில் ஆழ்ந்தனவா?

பொழுது புலர்ந்ததும், அரண்மனையைப் பனி மூட்டம் மூடிக் கொண்டிருந்தது. மார்கழிப் பனியில் மயங்கிய நிலையில் கீர்த்திவர்மனும், அங்கயற்கண்ணியும். மயக்கம் தெளியுமா? மறுபடியும் மாலை வேண்டுமா? மன்னவன்தானே அவனை மறுப்பதற்கு யார் இருக்கிறார்கள்?

**"மறைப்பேன் மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்"**

குறள் - 1253.

## சிந்தியா பதில்கள்

**சிந்தியா! அநுரா பண்டார நாயக்கா மீண்டும் ஜனாதிபதியுடன் ஐக்கியமாகி விட்டாரே. எதற்காக?**

**- எம். வீரமணி, தலவாக்கலை.**

தன் தந்தையார் உருவாக்கிய கட்சியை விட்டு வெளியில் இறங்கி எப்படிக் காப்பாற்ற முடியும். அதுதான் மீண்டும் கட்சிக் கூரைக்குள் வந்து விட்டார். இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

**ஊடகவியலாளர்கள் சிலர் தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து பயங்கரவாதத்துக்கு உதவி இருப்பதாக கூறப்படுகிறதே, உண்மையா?**

***- சி. வண்ணன், மொறட்டுவை.***

விசாரணைகள் அப்படித்தான் கூறுகின்றன. முன்னரெல்லாம் ஊடக அடையாள அட்டையை காட்டுவதற்குப் பெருமையாக இருந்தது. தேசியப் பாதுகாப்பு என்று வரும்போது எல்லோர் மீதும் சந்தேகம் கொள்ள வைக்கிறது. "பணம் பத்தும் செய்யும்" என்பார்கள். இங்கே பதினொன்று, பன்னிரெண்டு எல்லாம் செய்கிறது.

**மாலை போட்டதுக்காக குருக்களைச் சுட்டது எதைக் காட்டுகின்றது? நீர் ஏன் கண்டிக்கவில்லை?**

**- எல். பாண்டியன், பாலையூற்று.**

பூசகரைக் கொலை செய்ததை வார்த்தைகளால் எப்படிக் கண்டிப்பது? அற்பப் பிறவிகள் கோரமான கொலையாளிகளாகத் திரிகையில் மனிதாபிமானம், இரக்கம் எல்லாம் எதிர்பார்ப்புக்கு அப்பாற்பட்டவை. எனது ஒரு கண்டனம் ஒரு கொலையைத் தடுக்குமாக இருந்தால் வாழ்நாளெல்லாம் கண்டனம் தெரிவிக்க நான் தயார்.

**எண்ணெய் வளம் இலங்கையில் உறுதி செய்யப்பட்டால் அமெரிக்கா என்ன செய்யும்?**

**- வீ. பிருந்தா, மாவனெல்லை.**

எண்ணெய் அகழ்வுப் பணிக்காக இந்தியாவும், சீனாவும் தலா நூறு கோடி ரூபாவை வைப்புச் செய்து வேலைகளை ஆரம்பிக்கப்போவதாக முன்னரே தகவல் வெளியாகி விட்டது. அமெரிக்காவுக்கு தலையை நுழைக்க இருக்கவே இருக்கிறது பயங்கரவாதப் பிரச்சினை. ஆனால் இந்தியாவின் கண்காணிப்பை மீறுவது கடினமாகத்தான் இருக்கும்.

**பாராளுமன்றத் தேர்தல் ஒன்று இன்னும் ஆறு மாதத்துக்குள் நடைபெறும் என்று நான் சத்தியம் செய்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

**- எஸ். தேவராஜ், எருக்கலம்பிட்டி.**

ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்துக்குள் தேர்தல் ஒன்று நடக்கலாம் என்று சில அரசியல் அனுபவஸ்தர்கள் ஆருடம் கூறுகிறார்கள். அதற்கு முதல் எதிர்வரும் ஜூன் மாதம் கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றத்துக்கான தேர்தல்கள் நடைபெறுவது உறுதியாகி இருப்பதாக தேர்தல் ஆணையகம் கூறியிருக்கிறது. இதற்கு மேலதிகமாக நான் என்ன சொல்லட்டும்!


**சிந்தியா! இடியமீன் போல பிரபாகரனும் நாட்டை விட்டுத் தப்பி ஓடுவாரா?**

**- எம். கேதீஸ்வரன், மாங்கேணி.**

இடியமீனை விட பிரபாகரன் சர்வதேச குற்றவாளியாகச் சர்வதேசம் பார்ப்பதால் அனுமதிக்கமாட்டார்கள். பிரபாகரன் நாட்டைவிட்டு ஓட மாட்டார்.

**கடந்த ஐந்து ஆண்டுகளாக அமுலில் இருந்த ஒப்பந்தம் எதைச் சாதித்திருக்கிறது?**

**- K. மனோகரன், திருமலை.**




புலிகளை இரண்டாக உடைக்கவும், மூவாயிரம் பேருக்கு மேற்பட்டோரைக் கொலை செய்யவும், 1700 பேர் வரை காணாமல் போகவும், ஏ9 வீதியைத் திறந்து மூடவும், கிழக்கு மாகாணத்தைப் புலிகள் இழக்கும் நிலையை உருவாக்கவும் செய்தது ஒரு சாதனைதானே.... இதில் துக்கமான விஷயம், ஒப்பந்தம் தன் நோக்கத்தை அண்மிக்கவேயில்லை.

**சிந்தியா! கடைசியாக வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களின்படி, காதல் தோல்வியில் தற்கொலை செய்பவர்களின் வீதம் இலங்கையில் கணிசமாகக் குறைந்துள்ளதாகத் தெரியவருகிறது. இதற்குக் என்ன காரணம்?**

**- எஸ். கஜேந்திரன், வவுனியா.**

ஒரு ஆணுக்கு எட்டுப் பெண்கள் என்ற விகிதாசாரப்படி ஆண்களின் சராசரி குறைந்துவருவதும், பிள்ளைகள் வீட்டைவிட்டு வெளியேறிவிடுவார்கள் என்பதற்காக பெற்றோர் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுவதும் காரணமாக இருக்குமோ என்று நினைத்தாலும், பெண்கள் வேலைக்குச் செல்லும் நாகரீக வளர்ச்சியும், கிராமங்கள் நகரமயமாதலும் கூட பெண்களைச் சிந்திக்க வைத்திருக்கலாம். இதற்கு மேலதிகமாக நம் நாட்டில் கொலை மலிந்துவிட்டதால், தற்கொலை கண்டுகொள்ளப்படாமல், தன் இலக்கை அடையாமல் விட்டுவிடும் என்ற நிலையும் ஒரு காரணமாக இருக்கும். காதல் தற்கொலைகள் குறைந்துள்ளது என்ற சந்தோசத்தைப் பகிர்ந்துகொள்ள முடியாமல் அன்றாடக் கொலைகள் அதிகரித்து வருகிறதே.

**அமைச்சர்களுக்கு பிரத்தியேக விடுதிக்காக வாடகைப் பணம் மாதத்துக்கு தலா ஒரு இலட்சம் ரூபா ஒதுக்கப்படும் என செய்தி வந்ததே. படித்தீரா?**

**- பி. சபாலிங்கம், கண்டி.**

ஆடம்பர வாகன இறக்குமதிக்குத் தடை விதித்து விட்டதால், ஆடம்பர அலுவலகமாவது வைத்துக் கொள்ளட்டுமே என்று இறைவரித் திணைக்களம் கருதியிருக்கலாம். அமைச்சுப் பதவி எடுத்ததே அதுக்குத்தானே. வசதிக்கேற்ப நட்சத்திர விடுதிகளில் அமைச்சு அலுவலகங்கள் திறக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**கிரிக்கெட்டில் முதல்தரம் என்ற அந்தஸ்தை அவுஸ்திரேலியா இழந்துள்ளது பற்றி...**

**- வி. சாரங்கன், மன்னார்.**

முதல் இடம் என்பது எப்போதுமே கைமாறிப் போவதுதான். அது யாருக்கும் நிரந்தரமானதல்ல என்பதைத்தான் இது காட்டுகிறது. அவுஸ்திரேலியாவின் இந்தப் பின்னடைவு, உலகக்கோப்பைக் கனவுடன் களமிறங்கும் ஏனைய அணிகளுக்கு உற்சாகமாக இருக்கும். இந்தியாவுடனான ஒரு நாள் தொடரை இலங்கை கைவிட்டது. பந்து வீச்சாளர்கள் தடுமாறினார்கள். வேகப்பந்து வீச்சை நம்பிய சங்கக்கார ஏமாந்திருப்பார். இந்தியாவின் துடுப்பாட்ட வரிசை பலமாக இருக்கிறது. உலகக் கோப்பையை ஆசியாவுக்கு கொண்டுவரும் என்ற நம்பிக்கையைத் தரும் அணிகளில் இந்தியா முதல் இடத்தில் இருக்கிறது.

**ஈராக்கில் அமெரிக்காவின் புதிய பாதுகாப்பு ஏற்பாடு தகர்ந்து விட்டதே. புஷ்ஷின் அடுத்த நடவடிக்கை என்ன?**

**- எச். எம். ஹசன், புத்தளம்.**

"முதற்கோணல் முற்றும்கோணல்" என்பதை புஷ் அடிக்கடி நிரூபித்து வருகிறார்.

எரிமலைக்கு மேல் ஈரச்சாக்குப் போட்டு இருந்துவிட முடியும் என்று புஷ் நினைக்கிறார்.

சதாமுக்கு தூக்குக்கயிறு நெரித்த போது ஏற்பட்ட வலியைவிட, ஈராக் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து, புஷ்ஷிற்கு ஏற்படுத்தும் அவமானத்தின் வலி கொடுமையானது. புஷ்ஷிற்கு வலி தொடரும் என்றுதான் தெரிகிறது.

**ஜே. வி. பி., எதிர்க்கட்சி அமைக்கும் வாய்ப்பு எந்தளவுக்கு சாத்தியம்?**

**- ஜெ. விக்னேஸ்வரன், வத்தளை.**

அவர்கள் எப்போதும் எதிர்க்கட்சிதானே. அதில் உங்களுக்கு என்ன சந்தேகம்? அரசில் பங்காளியாக இருந்தபோதும் உள்ளக வட்டத்தில் அவர்கள் எதிர்க்கட்சிதான்.

உதாரணம் எங்கள் கூட்டமைப்புப் போல.


**"இளைய தளபதி" பொங்கல் கொண்டாடியபோது, "ஜெயம் ரவி" எப்படித் தீபாவளி கொண்டாட முடியும்?**

**- எஸ் ராணி, மட்டக்களப்பு.**

போக்கிரிப் பொங்கல் விஜய்க்கு மட்டுமல்ல, பிரபுதேவாவுக்கும் விசேஷம்தான். ரவிக்கும், பாவனாவுக்கும் பட்டாசு கொளுத்தாத தீபாவளி. பெப்ரவரியில் தீபாவளி என்றில்லாமல் பெயரை மாற்றி இருக்கலாம்.

# யாழ்.பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளைச் சீர்குலைக்கச் சதி!

ஆறு மாதங்களுக்குப் பின்னர் யாழ். பல்கலைக்கழகம் கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை திறக்கப்படுவதற்கு முதல் நாள் அன்று வடமராட்சி, இயத்தாளையைச் சேர்ந்த கிருஷ்ணன் கமலதாஸ் என்ற மாணவன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். 2006ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி புலிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட செந்தூர் செல்வன் என்ற மாணவனின் நெருங்கிய நண்பரே கமலதாஸ் என்பது குறிப்பிடத்தக்கது. கமலதாஸும் செந்தூர் செல்வனும் நெருங்கிய நண்பர்கள் மட்டுமல்ல, ஒரே வருடம் யாழ். பல்கலைக் கழகத்தில் அனுமதி பெற்றவர்களுமாவர். இரண்டாம் வருட மாணவனாக இருந்த செந்தூர் செல்வன், வறுமை காரணமாக மணல் ஏற்றும் தொழிலில் ஈடுபட்டு வந்தார். புலிகளுக்கு கப்பம் கொடுக்க மறுத்து வாக்கு வாதத்தில் ஈடுபட்டுவந்த காரணத்தினாலேயே செந்தூர் செல்வன் 2006ஆம் ஆண்டு புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார். அத்துடன் டிரக்டரோடு சேர்த்து பெற்றோல் ஊற்றியும் இவர் கொளுத்தப்பட்டும் இருந்தார். இச்செயலைக் கண்டித்து வந்த கிருஷ்ணன் கமலதாஸன் யாழ்.பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கு முதல் நாள் அன்றே சுட்டுக் கொல்லப்பட்டதன் சூட்சுமம் என்ன? சூத்திர தாரிகள் யார் என்பதை விளக்கவேண்டிய தேவை இல்லை என்று கமலதாஸின் நண்பர்கள் கூறுகின்றனர்.



யாழ். பல்கலைக்கழகம் ஆறு மாதங்களுக்குப் பின்னர் கடந்த 19ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டபோது..

முகமாலை முன்னரங்கப் பகுதியில் கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதி புலிகள் நடாத்திய தாக்குதலையடுத்து எழுந்த கொந்தளிப்பின் காரணத்தினால் யாழ்.பல்கலைக் கழகம் மூடப்பட்டது. யாழ். பல்கலைக் கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் அவ்வப் போது இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன. யாழ். பல்கலைக்கழக உபவேந்தராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் ரட்ண ஜீவன் கூலை அங்கிருந்து அமெரிக்காவுக்கு தஞ்சம் தேடி விரட்டிய அதே சக்திகளே கமலதாஸையும் கொன்றனர் என்று சக மாணவர்கள் தெரிவிக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் நிலைமைகள் சுமுகமாக இல்லை என்று வெளியுலகிற்குக் காட்டித் தமக்கு அனுதாபம் தேடுமுகமாகவே புலிகள் இந்தக் கொலையைச் செய்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் இரவீந்திரநாத், டிசம்பர் மாதம் 15ஆம் திகதி கொழும்பில் வைத்து கடத்திச் செல்லப்பட்டார். இதனை எதிர்த்து பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் அப்பல்கலைக் கழக மாணவர்கள் ஈடுபட்டதனால் பல்கலைக்கழகம் மூடப்பட்டது. அப் பல்கலைக் கழக சமூகத்தின் பகீரத முயற்சிகளை அடுத்து கடந்த மாதம் 29ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட்டது. மறுநாளே கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்துக்கு முன்பாக படையினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கிளைமோர் குண்டுத் தாக்குதலை அடுத்து மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் உட்பட 55 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்ட 8 பேரைத் தவிர ஏனையவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதனால் இப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

யாழ்.பல்கலைக்கழக மாணவன் கமலதாஸ் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து மறுநாள் ஐம்பது சதவீத மாணவர்களே வருகை தந்திருந்தனர் என்று யாழ். பல்கலைக்கழக பதில் உபவேந்தர் பேராசிரியர் குமாரவடிவேல் தெரிவித்தார்.

# கடத்தப்படுவோர், காணாமல் போவோர் பற்றிய சம்பவங்களைக் கட்டுப்படுத்த தீவிர முயற்சி

வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் ஆட்கடத்தல்கள், காணாமல் போவோர் ஆகிய சம்பவங்களின் எண்ணிக்கை இன்னமும் குறைந்து விடவில்லை. ஐ.நா. மனித உரிமை அமைப்பு உட்பட பல்வேறு சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் இச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுத்த போதிலும், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாத நிலையே நிலவுகிறது என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பொது மக்களின் ஒத்துழைப்பு போதியளவு கிடைக்காதது இதற்கு ஒரு காரணமாகும். அத்துடன் சில பாதாளக் குழுக்களும் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றன. இவர்களுக்கு உதவியாக சட்ட அமுலாக்கப் பிரிவைச் சேர்ந்தவர்களும் படைத்தரப்புக்களில் இருந்து விலகியவர்களும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்பதும் உண்மையாகும். முன்னர் எல்லாம் புலிகள்தான் தமக்கு எதிரானவர்களைக் கடத்திச் சென்றார்கள், கப்பம் கேட்டார்கள், சுட்டுக் கொன்ற சடலங்களை வீதியோரங்களில் வீசினார்கள். இப்போது புலிகளின் அதே நடவடிக்கைகளை, அதே செயல்களை வேறு சில கோஷ்டிகளும் பொறுப்பேற்றிருக் கின்றது. கடத்தப்பட்டவர்களில் பலர் கப்பம் வழங்காத காரணத்தினால் கொல்லப்பட்டிருக் கின்றார்கள். கப்பம் வழங்கியவர்கள் கிட்டத் தட்ட பத்துப் பேர் விடுவிக்கப்பட்டுள்ளதாக வும் தெரியவருகின்றது. கடத்தப்பட்டோர், காணாமல் போனோர் பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழு தன் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையில் இந்த அட்டூழியங்களுக்கு முடிவு கட்டப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த அதிகாரி சொன்னார்.

ஆயுதக்.. 03ஆம் பக்கத் தொடர்ச்சி...

தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்திய சுங்கப்பகுதியினரின் விசேட போதை வஸ்துத் தடுப்புப் பிரிவு, மண்டபம் முகாமில் இருந்து பாலன் என்ற பெயர் கொண்ட 50 வயது நபரைக் கைது செய்திருப்பதாக 'இந்து' என்ற ஆங்கிலப் பத்திரிகை தெரிவித்திருக்கின்றது. யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த இவர், ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டு வரும் ஒரு பெரிய புள்ளி என்று ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக அப் பத்திரிகை கூறியிருக்கின்றது. பெருந்தொகை ஆயுதங்களுடன் கண்ணன் என்ற இலங்கை வாலிபர் ஒருவர் தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்று அங்கிருந்து வெளிவரும் 'த ஹிந்துஸ்தான் டைம்ஸ்' என்ற பத்திரிகை கடந்த 18ஆம் திகதி செய்தி வெளியிட்டிருக்கின்றது.

# "ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுகிறது"

இலங்கை விவகாரத்தில் பாகிஸ்தானின் தலையீடு ஆசியப் பிராந்தியத்தில் இந்தியாவுக்கு ஓர் அச்சுறுத்தலாக அமையும். வடக்கு, கிழக்கின் பிரச்சினை பயங்கரவாதப் பிரச்சினை அல்ல. சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தை பாகிஸ்தான் பயங்கரவாதப் பிரச்சினை என்று கொச்சைப்படுத்தி, இலங்கைக்கு ஆயுத உதவிகளை வழங்குமேயானால் அது பாரதூரமான பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்திருக்கும் கருத்து வேடிக்கையானது என்று அரசியல் ஆய்வாளர் ஜொகான் பெரேரா தெரிவித்தார். புலிகள் நடத்துவது சுயநிர்ணய உரிமைப் போராட்டம் என்றால் இந்திய அரசாங்கம் அவர்களை ஏன் தடை செய்தது? புலிகள் பயங்கரவாத இயக்கம் என்ற காரணத்தினால்தான் அங்கு புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டது. புலிகள் இயக்கத்திற்கு எதிராக போராடுவதற்காகத்தான் இலங்கைப் படைகளுக்கு இந்தியப் படையினர் பயிற்சியளித்து வருகின்றனர். ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத கதை மாதிரி இந்தியாவுக்காக புலிகளின் முகவர் அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பு அழுவதில் அர்த்தம் இல்லை என்றும் அவர் சொன்னார். இந்தியாவுக்குத் தெரியாமல் பாகிஸ்தானிடமிருந்து இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய மாட்டாது. இந்தியாவும் பாகிஸ்தானும் கூட பல்வேறு இருதரப்பு ஒப்பந்தங்களை தற்போது செய்துள்ளன. இந்த நிலையில் ஏற்கனவே இந்தியாவினால் தடை செய்யப்பட்ட புலிகள் இயக்கத்துக்காக பூச்சாண்டி காட்டுவதில் அர்த்தம் இல்லை என்றும் அவர் சொன்னார்.

பிராந்திய. .03ஆம் பக்கத் தொடர்ச்சி...

பிரிக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் சீன குடியரசு, கியூபா, இந்தியா போன்றவை தமது பிரதேச ஒருமைப் பாட்டையும் தேசிய ஐக்கியத்தையும் இன்னமும் கட்டிக் காத்து வருகின்றன. அந்நிய சக்திகளின் தலையீடுகள் சில நாடுகளின் தேசிய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகமாக அமைகின்றன.

1972 மற்றும் 1978 ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்புகளும் எமது பிரச்சினைகள் வளர்ச்சியடையக் காரணமாக அமைந்துள்ளன.

தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை உரிய முறையில் பேணுவதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றும் அவர் சொன்னார்.

வடக்கு, கிழக்கு இணைப்பை பெரும்பாலான தமிழ் முஸ்லிம் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றனரே என்று கேட்ட போது, சகல பிரச்சினைகளுக்கும் ஒரே இரவில் தீர்வு கண்டு விட முடியாது. நாம் தெற்கில் இணக்கப்பாடொன்றை ஏற்படுத் திக் கொண்டு வடக்கு, கிழக்கு மக்களுடன் கலந்தாலோசித்து படிப்படியாக இப்பிரச்சினைக்குத் தீர்வு காண் போம் என்று குறிப்பிட்டார்.

# சவூதியில் சிரச்சேதம் செய்யப்பட்ட இலங்கையர்களின் சடலங்கள் மக்கள் பார்வைக்கு!

சவூதி அரேபியாவில் தலை துண்டிக்கப்பட்ட நான்கு இலங்கையர்களின் சடலங்களும் மறுநாள் ரியாத் நகரில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. வெளிநாட்டவர்களால் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளமையைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த சடலங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சவூதி அரேபியாவில் கொள்ளைகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கையர்களான விக்டர் கொரியா, ரஞ்சித் சில்வா, சந்தோஷ்ய குமார, சர்மில குமார ஆகிய நால்வருக்குமே கடந்த 2005ஆம் ஆண்டு மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன்படி மரண தண்டனை நேற்று சன நெருக்கடி மிக்க ரியாத் நகரின் மக்கள் சுற்றுவட்டம் ஒன்றில் வைத்து நிறைவேற்றப்பட்டது. இவர்களின் சடலங்களை இலங்கைக்கு அனுப்புமாறு இலங்கை அரசாங்கத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே சடலங்கள் ரியாத் நகரில் பார்வைக்கு வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேல் – பாலஸ்தீன சமாதான முயற்சிகள் பலிக்குமா?

பாலஸ்தீனத்தில் ஹமாஸ் இயக்கம் நடத்திய பேச்சுவார்த்தைகள் தேசிய அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த நிலையில் இஸ்ரேலிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கத்தை ஏற்படுத்துவதற்காக எடுக்கப்பட்டு வரும் முயற்சி வெற்றியளிக்கலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. இஸ்ரேலை அங்கீகரிக்க மறுத்து வரும் ஹமாஸ் இயக்கம் தனது நிலைப்பாட்டினை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று பதாஹ் இயக்கத் தலைமையகம் வலியுறுத்தி வருகின்றது. அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொண்டலிஸா ரைஸ், இஸ்ரேலியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியதாக டெல் அவிவ் வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை சர்வதேச பொருளாதாரத் தடைகளால் பாரிய பிரச்சினைகளை எதிர் நோக்கும் ஹமாஸ் அரசாங்கம் தனது நிலைப்பாட்டினை தளர்த்தலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. கடந்த காலங்களில் இடம் பெற்ற இஸ்ரேல் - பாலஸ்தீனச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றது போல் தற்போதைய முயற்சியும் தோல்வியுற மாட்டாது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

# திருமலையில் பெருந்தொகை ரவைகள் மீட்பு

புலிகளிடமிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட திருமலை, ஈச்சிலம்பற்றில் தேடுதல் நடாத்திய படையினர், லட்சக்கணக்கான ரி56 ரக ரவைகளைக் கைப்பற்றியுள்ளனர். ஒவ்வொன்றும் 750 ரவைகள் அடங்கிய மொத்தம் 225 பெட்டிகள் நிலத்திற்குக் கீழ் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் படையினரால் மீட்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது. இதேபோன்று யாழ்ப்பாணத்திலும் பொது மக்கள் வழங்கிய தகவலின் பேரில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# காப்பாற்றப்பட்ட அகதிகளின் கண்ணீர்க் கதை

யுத்தத்தின் கோரப்பிடியிலிருந்து தப்பிச் செல்ல முனையும் இலங்கைத் தமிழ் அகதிகளின் உயிர்களை முதலீடாக்கி, பணம் தேடுவதில் இலங்கை - இந்திய கூட்டுக் கும்பலொன்று ஈடுபட்டிருப்பதாக பொலிஸ் விசாரணையிலிருந்து தெரிய வருகிறது. அண்மையில் தமிழகக் கடற்பரப்பிலுள்ள மணல் திட்டுகளில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட இலங்கை அகதிகள், இது தொடர்பாக, பல விபரங்களைத் தமிழக பொலிஸா ருக்குத் தெரிவித்துள்ளனர். இரண்டு நாட்களாக மழை, வெய்யிலுக்கு மத்தியில் போதிய உணவின்றி வாடிய 80இற்கும் மேற்பட்ட அகதிகளை இந்திய கடலோரக் காவல் படையினர் மீட்டனர்.

திருகோணமலையிலிருந்து மன்னார் சென்று அங்கிருந்து பேசாலை சென்றவர்களே தமிழக மீனவர்களின் படகுகளில் ஏற்றிச் செல்லப்பட்டிருக்கின்றனர். பேசாலையைச் சேர்ந்த சிலர் அகதிகளிடம் ஒருவருக்கு 5000 ரூபாவிலிருந்து 10000 ரூபா வரை அறிவிட்டுள்ளனர். என்று உயிர் தப்பியவர்கள் தெரிவித்தனர். பணம் சேகரித்தவர்களில் தமக்கு நன்கு அறிமுகமான செபஸ்ரியன் என்பவரும் ஒருவர். இவர் புலிகள் இயக்கத்தின் முக்கிய நிதி சேகரிப்புப் பொறுப்பாளராக செயற்படுபவர் என்றும் அகதிகள் தெரிவித்தனர். தமிழகப் படகோட்டிகளுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையும் பேசாலைத் தரகர்களுக்கு வேறொரு தொகையும் வழங்கப்படுவதாகவும் அகதிகள் தெரிவித்தனர்.

புலிகள் இயக்கமும் படகுச் சேவை ஒன்றை நடத்துவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். பேசாலைத் தரகர்களை விட புலிகள் இயக்கத்தினர் குறைந்த தொகையை அறவிடுவதாகவும் அகதிகள் கூறினர். ஆனாலும் அகதிகளோடு அகதிகளாக புலி இயக்க உறுப்பினர்களும் வரலாம் என்ற காரணத்தினால் பேசாலைத் தரகர்கள் மூலமாகப் படகுப் பயண ஒழுங்குகளை மேற்கொண்டதாக அவர்கள் மேலும் சொன்னார்கள். பச்சிளம் பாலகர்களோடு மணல் திட்டியில் தத்தளித்த தம்மை தமிழக காவற்படையினர் கௌரவமாக நடத்தினர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# கிளைமோருக்குப் பலியான எட்டு வயதுச் சிறுவன்



யாழ். கச்சேரிக்கு அண்மையில் கண்டி வீதியும் சோமசுந்தரம் வீதியும் சந்திக்கும் இடத்தில் இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலில் மரணமான மோகன் கபிலன் என்ற எட்டு வயதுச் சிறுவனின் புகைப்படத்தையே மேலே காண்கின்றீர்கள். கடந்த சனிக்கிழமை 17ஆம் திகதி படையினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இத் தாக்குதலில் கபிலன் உட்பட மூன்று பொது மக்கள் கொல்லப்பட்டனர். யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியரான குலநாயகம் மோகன் என்ற தனது தந்தையுடன் சென்று கொண்டிருந்த போதே கபிலன் கொல்லப்பட்டார். இத் தாக்குதலில் கொல்லப்பட்ட கபிலனின் தந்தையும் படு காயங்களுக்கிலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கபிலனின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள முடியாத அளவுக்கு தந்தையார் படுகாயமடைந்து வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார். இவர்களின் வசிப்பிடமான யாழ். புங்கங்குளம் பகுதி சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

# மிகைல் கொர்பச்சேவ்

**இது நம்மை** அடுத்த கேள்விக்கு இட்டுச் செல்கிறது. கொர்பச்சேவ் தம் பதவிக் காலத்தில் நிகழ்ந்த மாறுதல்கள் சொந்த முறையில் எந்த அளவுக்குப் பொறுப்பாளியாக இருந்தார்?

சோவியத் ஒன்றியத்தில் அவரது தலைமையின் கீழ் பல பொருளாதாரச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. எனினும், இந்த வகையில் அவர் அந்தப் பெருமைக்குத் தகுதியுடையவர் அல்ல என்பது என் கருத்து. ஏனென்றால், பொதுவாக, சோவியத் அமைப்பு முறையின் வெளிப்படையான தோல்விகள் காரணமாக, அவர் மீது சீர்திருத்தங்கள் திணிக்கப்பட்டன. மேலும் அவர் மேற்கொண்ட சீர்திருத்தங்கள் மிகமிகக் குறைந்தவை; மிகவும் காலங்கடந்தவை. உண்மையைக் கூறின், சோவியத் பொருளாதாரத்தின் மிக மோசமான சாதனையே, கொர்பச்சேவின் இறுதி வீழ்ச்சிக்குக் காரணம்.

இதற்கு மாறாக, கிழக்கு ஐரோப்பா விடுதலை பெற்றதில் அவரது பங்குப் பணிக்காகக் கொர்பச்சேவை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். சோவியத் கட்டுப்பாட்டிலிருந்து ஆறு நாடுகள் விடுவிக்கப்பட்டன. இந்த விடுதலையை இனி ஒருபோதும் மாற்ற முடியாது.

# உலகை வியக்க வைத்தவர்கள்


நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் கொர்பச்சேவின் சொந்தச் செல்வாக்கினையும் யாரும் ஐயுறுவதற்கில்லை. கிழக்கு ஐரோப்பாவில் எழுந்த சீர்திருத்த இயக்கங்கள் அனைத்தும், ரஷ்யாவிற்குள் நிகழ்ந்த முற்போக்கு நடவடிக்கைகளின் தூண்டுதலினாலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தங்கள் வழியில் செல்வதற்கு அனுமதிக்கப்படும் என்று அவர் அடிக்கடி அறிவித்ததனால் ஏற்பட்ட ஊக்கத்தினாலும் ஏற்பட்டவையேயாகும். மேலும், ஒரு நெருக்கடியான தருணத்தில்- கிழக்கு ஜெர்மனியில் 1989 அக்டோபரில் பிரமாண்டமான ஆர்பாட்டங்கள் தொடங்கிய நேரத்தில் - கொர்பச்சேவ் நேரடியாகத் தலையிட்டார். அதுபோன்ற சூழ்நிலைகளில் முந்தைய சோவியத் தலைவர்கள், எப்போதுமே படைகளை அனுப்பி, புரட்சிக்காரர்களை ஒடுக்க எல்லாவகையான கொடூர நடவடிக்கைகளையும் கையாண்டார்கள். ஆனால், 1989 அக்டோபரில் கொர்பச்சேவ் தலையிட்டபோது, ஆர்பாட்டக்காரர்களை வன்முறை மூலம் அடக்க வேண்டாம் என்று ஹொனேக்கரிடம் வலியுறுத்தினார். அந்த முடிவின் விளைவுகளை நாம் பார்த்தோம். அதே போன்று, லிதுவேனியப் புரட்சியை ஒடுக்குவதற்கு இராணுவத்தைப் பயன்படுத்துவதில்லை என்று கொர்பச்சேவ் எடுத்த முடிவு, மற்ற சோவியத் குடியரசுகள் விரைவாகப் பிரிந்து செல்வதற்கு வழி வகுத்தது.

ஆயுதக் குறைப்பிலும், மிரட்டல் போருக்கு முடிவு கட்டியதிலும், கொர்பச்சேவின் செல்வாக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதற்கான பெருமை ரொனால்ட் ரீகனையே சேரும் என்று பலர் கருதுகிறார்கள். இதற்கு அவர்கள் கூறும் வாதங்கள் இவை : ஆயுதப் போட்டியின் செலவுகளைத் தாங்கிக் கொள்ளும் திறன் சோவியத் ஒன்றியத்தைவிட அமெரிக்காவுக்கு அதிகம் என்று ரீகன் எடுத்துக்காட்டினார். எனினும், மிரட்டல் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்குச் சோவியத் தலைவர்களைச் சம்மதிக்க வைப்பதில் அவர் முக்கிய பங்கு கொண்டார். மேலும், ஓர் உடன்படிக்கையைச் செய்து கொள்வதற்கு இரண்டு தரப்புகள் தேவை என்பதால், படைக்கலக் குறைப்பு உடன்படிக்கை கையெழுத்தானதற்கான பெருமை கொர்பச்சேவ், ரீகன் இருவருக்கும் சரி சமமாகச் சேர வேண்டும்.

மிரட்டல் போருக்கு அமெரிக்கா, ரஷ்யா இரண்டுமே சரிநிகர்க் காரணமாக இருந்திருந்தால், இந்த வாதம் சரியாக இருக்கலாம். ஆனால், உண்மை அதுவல்ல. ஸ்டாலின், அவருக்குப் பின் வந்தவர்கள் ஆகியோரின் இராணுவ விரிவாக்கம் காரணமாக மிரட்டல் போர் ஏற்பட்டது. அதற்குப் பதில் நடவடிக்கையாக அமெரிக்கா தனது தற்காப்பினைப் பலப்படுத்த வேண்டியதாயிற்று. உலகம் முழுவதிலும் பொதுவுடைமையைப் புகுத்த சோவியத் தலைவர்கள் (சரணடையாமல்) போரை முடிவுக்குக் கொண்டுவர வேறு வழியில்லாமல் போயிற்று. அந்தக் கனவைக் (குறிக்கோளை) கைவிடுவதற்குத் தயாராக இருந்த ஒரு சோவியத் தலைவர் தோன்றிய போது, முடிவுற்றதாகத் தோன்றிய மிரட்டல் போர் விரைவிலேயே கரைந்து மறைந்து போயிற்று.

சோவியத் ஒன்றியத்திற்குள்ளேயே கொர்பச்சேவ் ஏற்படுத்திய அரசியல் மாற்றங்களுக்காக அவர் இன்னும் அதிகப் பெருமைக்குரியவராகிறார். பொதுவுடைமைக் கட்சியின் அதிகாரக் குறைப்பு, வெளிப்படை நிலைக் கொள்கையின் முன்னேற்றம், பத்திரிகை சுதந்திரம் மற்றும் பேச்சுரிமையில் ஏற்பட்ட மகத்தான முன்னேற்றங்கள், பொதுவாக நாட்டின் மக்களாட்சியின் முறையாக்கம் போன்ற சீர்திருத்தங்கள் எதுவும், கொர்பச்சேவ் இல்லாதிருந்தால், செயலுக்கு வந்திருக்காது. வெளிப்படை நிலைக் கொள்கை, மக்கள் நிர்ப்பந்தம் காரணமாக அவர் மீது திணிக்கப்படவில்லை. அது, மற்ற ஆட்சிமன்ற உறுப்பினர்கள் வற்புறுத்திய ஒரு கொள்கையும் அன்று. அது முழுக்க முழுக்க கொர்பச்சேவின் சொந்தக் கொள்கை, கடுமையான எதிர்ப்புக்கிடையிலும் அவர் அக்கொள்கையை உருவாக்கினார். அதற்குத் தொடர்ந்து ஆதரவளித்தார். வேறெதனையும் விட இந்த வெளிப்படை நிலைக் கொள்கைதான், சோவியத் அமைப்பு முறையை இறுதியாகத் தூக்கி எறிவதற்கு அனுமதித்தது. இந்தப் புரட்சிகரமான மாற்றங்கள் (இதுகாறும்) வன்முறை அதிகமின்றி ஏற்பட்டிருப்பது உண்மையிலேயே வியக்கத்தக்கது. இதற்கு கொர்பச்சேவின் கொள்கைகளும், பதவியில் அவர் நடந்து கொண்ட முறையுமே பெருமளவு காரணம்.

கொர்பச்சேவ் மேற்கொண்ட நடவடிக்கைகளின் (ஜெர்மனி மறு இணைப்பு, சோவியத் ஒன்றிய உடைப்பு, பொதுவுடைமையின் மறைவு போன்றவை) மிக முக்கியமான விளைவுகளில் சிலவற்றை அவரே விரும்பியதில்லை என்று சிலர் கூறுவர். அது உண்மையாக இருக்கலாம். ஆனால், அதனால்



அவருடைய முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை. ஓர் அரசியல் தலைவரின் - அல்லது வேறெவரேனும் ஒருவரின் செல்வாக்கு, அவருடைய செயல்களின் விளைவினைக் கொண்டுதான் கணிக்கப்படுகிறதேயன்றி, அவருடைய உள்நோக்கங்களினால் அல்ல.

மார்க்ஸியத்தின் தோல்விக்கு வேறு பலரும் (பெரும்பாலும் தீவிர பொதுவுடைமை எதிர்ப்பாளர்கள்) காரணமாக இருந்தார்கள் என்பது உண்மைதான். பொதுவுடைமை அமைப்பு முறையின் உண்மையான தன்மை குறித்து மேலை நாட்டினருக்கு எச்சரித்த ஆர்தர் கோஸ்லர், விட்டாக்கர் சேம்பர்ஸ் போன்ற முன்னாள் பொதுவுடைமையாளர்கள், ரஷ்யாவிற்குள்ளேயே தங்கள் உயிரைப் பணயம் வைத்து எதிர்ப்புக் கருத்துக்களை வெளியிட்ட ஆண்ட்ரோ சக்காரோவ், அலெக்ஷாண்டர் சோல்செனிட்சென், ஆப்கானிஸ்தான், அங்கோலா, நிக்கரகுவா ஆகிய நாடுகளில் பொதுவுடைமை அரசுகள் ஆட்சியைப் பிடிப்பதைத் தடுக்க அஞ்சா நெஞ்சுடன் போராடிய புரட்சி வீரர்கள் போன்ற கொரில்லாப் போராளிகள் அமெரிக்க ஆயுதங்களையும், அமெரிக்க நிதி நிறுவனங்களையும் பயன்படுத்திய ஹேரி ட்ருமன், ரொனால்ட் ரீகன் போன்ற அரசியல் தலைவர்கள் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். பொதுவுடைமை பரவுவதைத் தடுத்து, இறுதியில் அதனைத் தோற்கடிப்பதற்கு அமெரிக்கச் சுதந்திரத்தின் எடுத்துக்காட்டும், வளமையுங்கூட பயன்பட்டது.

இருப்பினும், இவர்களும் (இன்னும் பலரும்) முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், 1985 இல் கொர்பச்சேவ் பதவி ஏற்றபோது, பொதுவுடைமைப் போரரசின் முடிவு இத்துணை விரைவாக வரும் என்றும் யாரும் எதிர்பார்க்கவில்லை. சோவியத் அரசின் தலைவராக 1985 இல் லெனின் அல்லது ஸ்டாலின் போன்ற ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அந்த அடக்குமுறை அரசாங்கம் இன்னும் நிலை பெற்றிருக்கும் மிரட்டல் போர் இன்றும் நீடித்திருக்கும்.

ஆனால், 1985 இல் சோவியத் ஒன்றியத்தின் அரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், கொர்பச்சேவேயன்றி, ஒரு ஸ்டாலின் அன்று! சோவியத் ஒன்றியத்தையும், அது தோற்றுவிக்கப்பட்ட காலம் முதல் அதனை ஆண்ட பொதுவுடைமைக் கட்சியையும் கலைத்துவிட அவர் ஒரு போதும் விரும்பியதில்லை. எனினும், அவர் ஏற்றுக்கொண்ட கொள்கைகளும், அவர் இயக்கிவிட்ட சக்திகளும் அந்த வேலையைச் செய்துவிட்டன. அவருடைய உள்நோக்கங்கள் எவ்வாறு இருந்திருப்பினும், நமது உலகை மீண்டும் மாற்ற முடியாத அளவுக்கு அவர் மாற்றிவிட்டார் என்பதில் ஐயமில்லை.

**அடுத்த வாரம் பிரான்சிஸ் பேக்கன் வியக்க வைப்பார்.**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நா... சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

**வணக்கமுங்கோ!**

கடந்த வாரம் தமிழகத்துக்குப் போய் வந்ததாலை ஒரு வாரத்துக்குள் நாட்டில ஏதும் நமக்குத் தெரியாம நடந்ததோ எண்டு தெரியல்லை எண்டதாலை தமிழகத்தில நிலைமை எப்படியிருக்கு எண்டதைத்தான் உங்களுக்கு சொல்லிக்கொள்ள நினைக்கிறன். தமிழகத்தில கொஞ்ச நாளாக அதுவும் எங்கட சனம் அள்ளுப்பட்டு அகதிகளாகப் போய் இறங்கியபோது எங்கட சனத்தின்ர அல்லோல கல்லோலங்களைப் பார்த்தும், அழுத கண்ணீரைப் பார்த்தும் அங்கத்தேய தமிழர்களுக்கும் கண்ணீர் வந்ததும், கவலைப்பட்டதும் நடந்ததுதான்.

உந்தச் சூழலை எப்பிடி எழுதி அனுதாபத்தை சிலோன் தமிழ் மக்கள் பக்கம் திருப்பிறது எண்டு சில ஊடகங்கள் எழுதினதும் உண்டு. சில ஊடகங்கள், உந்த கவலையை எப்புடி எழுதி தாங்கள் காசு பாக்கிறதெண்டு வியாபாரம் நடத்தினதும் உண்டு. ஊடகங்கள் இப்பிடியெண்டால் சில அரசியல்வாதிகள் தங்களுடைய உள்ளூர் பொலிரிக்ஸுக்காகவும் எங்கட பிரச்சினைக்கு பிணை நிக்குமாப் போலை நிண்டிச்சினம். வைகோ போன்றவை, கரண்சி வரும் வரைக்கும் தமிழர் புகழ் பாடுவோம் எண்டு இருந்தவை கடைசியில கலைஞரையே வாய் திறந்து இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி பேசும்படிக்கு நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டதும் உண்மைதான்.

ராஜிவ் காந்தியின்ர கொலைக்குப் பிறகு இந்தியாவில நல்ல மாற்றம் உருவாகி வருகுது. உது மத்திய அரசாங்கத்துக்கு ஒரு அழுத்தத்தைக் கொடுக்கும் எண்டதாலை மத்திய அரசாங்கம் இலங்கைப் பிரச்சினையில இன்னொருபடி நெருங்கித் தலையிடும் எண்டெல்லாம் ஆரூடங்கள் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கேக்க, அயர்ந்து தூங்கிறவனின்ர தலையில கல்லைத் தூக்கிப் போடு மாப்போலை வந்து விழுந்ததுதான் தமிழகத்தில இருந்து புலிகள் ஆயுதமும், வெடிகுண்டு தயாரிக்கும் உதிரிப்பாகங்களும், இரும்புக் குண்டுகளும் கடத்தினம் எண்ட செய்தி. உந்த செய்தி பரவத் தொடங்கினதும், விடுதலைப்புலிகள் எண்டு கதைச்சவை கூட பயங்கரவாதப் புலிகள் எண்டு வார்த்தையை மாற்றிப் பேசத் தொடங்கிட்டினம். புலிகளின்ர நிர்வாகம் நல்லம். விடுதலை பற்றிய உணர்வே அவர்களை வீரமிக்கவர்களாக நினைக்க வைக்கிறது என்றெல்லாம் பக்கம் பக்கமாக எழுதி, வரி உடுப்போடு புலிகளின்ர படம் போட்ட ஊடகங்கள் கூட எவ்வளவுக்கு கண்டு கொள்ளாமல் ஒதுங்கிக்கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு ஒதுங்கிக் கொண்டு இருக்கின்றன. வைகோ புலிகள் பற்றிய பேச்சை முன்னரைப்போல் பேசாமல், மிக நெருக்கமானவர்களோடு மட்டும் உரையாடும் அளவுக்கு நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கலைஞரின் ஆட்சியும், அன்பு கலந்த பேச்சும் புலிகளை மிகச் சுதந்திரமாக தமிழகத்தில் நடமாட அனுமதியளிப்பதாக இருக்கிறது. இந்த நிலை நீடித்ததால் பயங்கரவாதத்தின் பிடியில் முதலில் தமிழகம், பின்னர் இந்தியா என்று எதிர்க்கட்சிகள், கூறுகின்ற நிலை எழுந்துள்ளது. இந்த சங்கடமான நிலையை கலைஞர் மிகுந்த எரிச்சலோடு பார்க்கின்ற சூழலில் இருக்கின்றார். அவரைச் சந்தித்து பொன்னாடை போர்த்தி, பொய் வாக்குறுதி வழங்கி கபடமாகச் சிரித்தவர்களையும், தமிழகத்தில் ஆயுதக்கடத்தல் செய்யும் புலிகளையும் கலைஞர் ஏமாற்றத்தோடு பார்க்கின்றார். புலிகளை எந்தக் காலத்திலும் நம்பமுடியாது என்பதையே அவர்கள் மீண்டும் மீண்டும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று புத்தி ஜீவிகளின் கூற்று இன்னொரு வரால் மறுத்துப் பேச முடியாதவாறு ஒலிக்கத் தொடங்கியுள்ளது. அகதி மக்களின் அவலம் கண்டு கண்ணீர் வடித்த மக்கள், அகதிகளுடன் புலிப் பயங்கரவாதிகளும் ஊடுருவினார்கள் என்பதைக் கேட்டு தாங்கள் சிந்திய கண்ணீரையும், பட்ட வேதனையையும் துடிப்பையும் இப்படி அவமானப்படுத்தி விட்டார்களே என்ற வெறுப்பை வெளிக்காட்டியிருக்கிறார்கள்.

புலிகள் இப்படிப்பண்ணி இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு இந்திய மத்திய அரசை வற்புறுத்த வேண்டிய கடமை மிகுந்தவரான உலகத் தமிழர்களின் தலைவராக இருக்கும் கலைஞரை, வாய் திறந்து வற்புறுத்த முடியாதபடி செய்து விட்டார்களே. அவர்கள் அடிக்கடி பயங்கரவாதிகளாகவே அடையாளம் காணும் படியாகவே நடந்து கொள்ளும்போது, அந்தப் போராட்டத்தை எப்படி எங்களால் நியாயப்படுத்த முடியும் என்று இலங்கைப் பிரச்சினை பற்றி ஆரம்பகாலம் தொட்டு நடுநிலையாக நின்று ஆராயும் சில நண்பர்கள் கூறியதையும் கேட்கக் கூடியதாக இருந்தது.

புலிகள் இப்படி தொடர்ச்சியாக குற்றங்கள் புரிந்து, தமிழ் நாட்டின் நற்பெயரைக் கெடுத்து, நிரந்தரப் பகையை சம்பாதித்துக் கொண்டால் ஜென்மத்துக்கும் அவர்கள் விடுதலை அமைப்பாக இருக்கப்போவதில்லை. தனிமைப் படுத்தப்படுவார்கள். இது இன்னும் பின்னடைவையே அவர்களுக்குக் கொடுக்கும். அதற்காக அவர்கள் வருந்துவார்கள். மற்றவர்களை ஏமாற்றி விடுவது சுலபம். அவர்களே ஏமாந்து சறுக்கும்போது அந்த வலி தாங்க முடியாதது என்று அந்த நண்பர்கள் சொன்னவார்த்தைகள் எவ்வளவு உயிரோட்டமானவை என்று நினைச்சுக் கொண்டே இருந்ததில கட்டுநாயக்கா வந்ததே மறந்து போயிட்டுதுங்கோ... இன்னும் மறக்க முடியாம இருக்குதுங்கோ...

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(22.02.2007 தொடங்கி 28.02.2007 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

கும்பம் - சூரியன், இராகு, புதன், மீனம் - வெள்ளி. கர்க்கடகம் - சனி
சிங்கம் - கேது. விருச்சிகம் - வியாழன். மகரம் - செவ்வாய்.
சந்திரன் - மேடம், இடபம். மிதுனம் இராசிகளில் இந்தவாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்:-** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால், தொழிற் பகை, மனக்கலக்கம், செலவு மிகுதி, வீண் மனஸ்தாபம், எதிர்பாராப் பிரயாணம், தேகசுகக் கஷ்டம், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள் - புதன்,
அதிர்ஷ்ட இலக்கம் - 3.

**இடபம்:-** கார்த்திகையின் முக்கால் ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை, தொழில் நன்மை, பலவிதப் பேறு, உயர்ந்த நிலை, புதிய முயற்சி, குடும்பப் பேறு, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள் - திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம் - 7.

**மிதுனம்:-** மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால், தொழில் குழப்பம், வீண் செலவு, பணியாளர் உபத்திரவம், தூர இடப் பயணம், தேக சுகக் கஷ்டம், குடும்பப் பகை, உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் வெறுப்பு, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள் - வெள்ளி,
அதிர்ஷ்ட இலக்கம் - 6.

**கர்க்கடகம்:-** புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம், தொழில் மந்தம், பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், வெளியிடப் பயணம், குடும்பப் பொறுப்பு, எதிர்பாராத செலவு, கடன்படல், உத்தியோகப் பாரம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள் - செவ்வாய்,
அதிர்ஷ்ட இலக்கம் - 2.

**சிம்மம்:-** மகம், பூரம், உத்தரத்து முதற்கால், தொழில் நன்மை, காரியானுகூலம், உயர்ந்தோர் நட்பு, பணவரவு, தேகசுக நன்மை, குடும்பச் சுகம், சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள் - வியாழன்,
அதிர்ஷ்ட இலக்கம் - 4.

**கன்னி:-** உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை, தொழில் கலக்கம், பணவிரயம், பணியாளர் உதவி, மனககுறையதிகம், வெளியிட வாழ்க்கை, குடும்பத்தொல்லை, இனசன பகை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள் - திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம் - 7.

**துலாம்:-** சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால், தொழில் மாற்றம், செலவு மிகுதி, தேகசுகக் கஷ்டம், குடும்ப நன்மை, இனசன மகிழ்ச்சி, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள் - புதன்,
அதிர்ஷ்ட இலக்கம் - 3.

**விருச்சிகம்:-** விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை, தொழில் உயர்ச்சி, காரியானுகூலம், பெரியோர் சகாயம், உயர்ந்தோர் நட்பு, மனக்குறை நீங்கும், தூர இடப் பயணம், குடும்பப் பொறுப்பு, மனக்கலக்கம், உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள் - வியாழன்,
அதிர்ஷ்ட இலக்கம் - 4.

**தனு:-** மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால், தொழில் இலாபம், மனமகிழ்ச்சி, அந்நியர் உதவி, வெளியிட வாழ்க்கை, பணச் செலவு, குடும்பக் கவலை, உறவினர் உபத்திரவம், உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள் வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள் - திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம் - 7.

**மகரம்:-** உத்தராடத்து பின் முக்கால் திருவோணம், அவிட்டத்து முன்னரை, தொழில் இலாபம், முயற்சி பலிதம், வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி, குடும்பச் சுகம், சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள் - செவ்வாய்,
அதிர்ஷ்ட இலக்கம் - 4.

**கும்பம்:-** அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால், தொழில் நன்மை, பணவரவு, உயர்ந்தநிலை, மறைமுக எதிர்ப்பு, பிரயாண மிகுதி, குடும்பப் பாரம், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள் - திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம் - 2.

**மீனம்:-** பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி, தொழில் பலிதம், மனமகிழ்ச்சி, செலவு மிகுதி, பெரியோர் உதவி, தூர இடப் பயணம், தேகசுகக் கஷ்டம், குடும்ப நன்மை, உத்தியோகப் பொறுப்பு, மனக்கவலை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள் - புதன்,
அதிர்ஷ்ட இலக்கம் - 5.

Regd. as a News Paper at the G.P.O.(QD/66/NEWS/2007)







# அனைவருக்கும் ஓய்வூதியம்

முதுமை அடையும் மக்களின்
எதிர்காலத்தை வளமாக்குவதற்காக
59 ஆவது சுதந்திர தினத்தைக்
கொண்டாடிய இச் சந்தர்ப்பத்தில்
அணி திரள்வோமாக.

18 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்ட உங்களுக்கு

## சஹன, திலின, இசுரு சரண, சுரெக்கும, தனலக்ஷ்மி

ஓய்வூதியத் திட்டங்கள்
எங்களிடமிருந்து.

சரத் கீர்த்திரத்ன
தலைவர்,
இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை
150 ஏ, நாவல வீதி, நுகேகொடை.
தொலைபேசி:- 001- 2823614, 2852958.

சமூக பாதுகாப்பு
SOCIAL SECURITY

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு



இப்பத்திரிகை கொழும்பு-06 வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ் 16 A ஆம் இலக்கத்தில் டிடி என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் நாவலயில் உள்ள சமணல கிராபிக்ஸ் அச்சகத்தில் பெப் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.